# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 05 புதன்கிழமை (19.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 054


# சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் மீது வழக்குத் தொடர்வதா? இல்லையா?

## ஆராய இன்று பூஸாவுக்கு ஜனாதிபதியின் விசேட குழு

கொழும்பு, ஜனவரி 19

**தமிழ் அரசியல் கைதிகள் குறித்து ஆராய்ந்து, அவர்கள் மீது வழக்குத் தொடர்வதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட நால்வர் அடங்கிய விசேட குழு இன்று பூஸா தடுப்பு முகாமுக்கு விஜயம் மேற்கொள்கிறது.**

அண்மையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளிட்ட வடக்குப் பகுதிகளில் சாட்சியங்களைப் பதிவுசெய்ய கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அங்கு விஜயம் மேற்கொண்டது.

அதன்போது சாட்சியம் அளித்த தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள், தங்களது பிள்ளைகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், இல்லையேல் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை, பூஸா முகாமுக்கு அண்மையில் நல்லிணக்க ஆணைக்குழு விஜயம்

(27ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு - புளொட் இணைந்து வன்னி மாவட்டத்தில் போட்டியிடும்

வவுனியா, ஜன.19

வன்னி மாவட்டத்தில் நான்கு பிரதேச சபைகளுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஜனநாயக மக்கள் முன்னணி (புளொட்) போட்டியிட இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம் ஆகியோருக்கும் புளொட் தலைவர்களான ஜி.ரி.லிங்கநாதன், பவான் சிவநேசன் ஆகியோருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், கூட்டமைப்பும் புளொட் அமைப்பும் இணைந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்த இணக்கம் காணப்பட்டது என்று புளொட் பிரமுகர் லிங்கநாதன் தெரிவித்தார். (ஒ-ஐ)

# கண்ணிவெடிகள் அகற்றியமைக்கான சான்றிதழ் கிடைத்தும் மீள்குடியமர்வுக்கு அனுமதி இல்லை

## பாதுகாப்பு அமைச்சு பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

வயாவிளான் கிழக்குப் பகுதிகளில் கண்ணி வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் கிடைக்கப்பெற்றபோதும் பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அந்தப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கு பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் கடந்த வருடம் நவம்பர் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற்கட்டமாக வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய கிராமங்களில்மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இதன் அடுத்த கட்டமாக வயாவிளான் கிழக்குப் பகுதி மக்கள் தம்மை மீளக்குடியமர்த்துமாறு கோரி அரச அதிபருக்கு மகஜர் கையளித்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்கான கண்ணி வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் பெறப்பட்டது.

கடந்த 3 ஆம் திகதி கண்ணி

(27ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வருகிறார் இந்தியத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.நகரில் நடைபெறவிருக்கும் மூன்று நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக இந்தியத் தூதர் அசோக் கே.காந்த் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்குச் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நிகழ்விலும்

(27ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் புதிய தலைமையகமாக தற்போது மாறி வருகிறது கனடா

## அந்நாட்டு உளவுத்துறை எச்சரிக்கை

ரொறன்ரோ, ஜன.19

விடுதலைப் புலிகளின் புதிய தலைமையகம் மற்றும் நடவடிக்கைகளுக்கான கேந்திர நிலையமாக கனடா மாறி வருவதாக அந்நாட்டின் உளவுத்துறை கனேடிய அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

இவ்வாறு கனடாவின் 'ஒட்டாவா சன்'' பத்திரிகை கனேடிய உளவுத்துறை மற்றும் அந்நாட்டின் பாதுகாப்புத்துறை உயரதி காரிகளை மேற்கோள் காட்டி செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினரிடம் இராணுவ ரீதியில் தோல்வி

(27ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய தூதரக யாழ். அலுவலகத்தில் இனி மேல் விஸாவைப் பெறமுடியும்

யாழ்ப்பாணம், ஜன.19

இந்தியா செல்வதற்கான விஸா வழங்கும் பணி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இந்தியத் துணைத் தூதரகத்தின் யாழ்.அலுவலக அதி காரி எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

இதுவரை காலமும் விஸா வழங்குவதற்காக கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து விஸா வழங்கப்பட்டது.

இனிமேல் விஸாவுக்கான கடவுச்சீட்டு மற்றும் ஆவணங்கள் (27ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....

சொல்பெக் EW 050



உரிக் கோஸ்லி டெங்கு நுளம்புகளை அழிக்க சொல்பெக் 80 மி.லீ. இனை 10 லீற்றர் நீரில் கலந்து விசிறவும்

Hayleys

ஹேலீஸ் காட்சியறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2221292


# வேட்புமனுத் தாக்கலுக்கு முன்பே பெரும் சுவரொட்டிப் பிரசாரங்கள்

## வன்முறை அதிகரிக்கும் என்கிறது 'கபே'

கொழும்பு, ஜன. 19

தேர்தல் வன்முறைகளை அதிகரிக்கச் செய்யும் வகையில் பணக்கார வேட்பாளர்கள் சுவரொட்டிகள் மூலம் இப்போதே தேர்தல் பிரசாரங்களைத் தொடங்கியுள்ளனர் என்றும் இந்தச் செயற்பாடுகள் மூலம் பெரும் விளைவுகள் ஏற்படும் என்றும் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்(27ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு வருவதற்கான திகதியை தீர்மானிப்பதில் ஐ.நா. குழு தீவிரம்

## செயலாளரின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு வருவதற்கான திகதியைத் தீர்மானிப்பதில் ஐ.நா. குழு மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது என்று ஐ.நா. செயலாளர் நாயகத்தின் ஊடகப் பேச்சாளர் மார்டின் நெஸ்கி கூறியுள்ளார்.

'இன்னர்சிற்றி பிரஸ்' இணையதளம் எழுப்பியுள்ள கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதி

(27ஆம் பக்கம் பார்க்க)


இன்னும் இரண்டு நாட்கள்

JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்


# வழமைக்குத் திரும்புகிறது கிழக்கு அனைத்து முகாம்களும் மூடப்பட்டன

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று மாதங்களுக்கு உலர் உணவு

கொழும்பு, ஜன.19

கடும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான கிழக்கு மாகாணம் படிப்படியாக வழமைக்குத் திரும்புகின்றது. சித்தாண்டியிலுள்ள நலன்புரி நிலையம் தவிர்ந்த ஏனைய அனைத்து நலன்புரி நிலையங்களும் நேற்று மூடப்பட்டன.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் போக்குவரத்துச் சேவைகள் வழமை

(27ஆம் பக்கம் பார்க்க)


உலகத்தரம் வாய்ந்த டைலில்களை நாட வேண்டிய ஒரே இடம்

நவீன் செரமிக்



Naveen Ceramic PVT LTD

212, Palaly Road, Jaffna.

Tel : 212220033 / 212220044




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
|---|---|---|---|---|
| யாழ் | | 27°c | 22°c | |
| மன் | | 29°c | 22°c | |
| வவு | | 30°c | 19°c | |
| முல் | | 29°c | 24°c | |
| கிளி | | 29°c | 20°c | |

பகல், இரவு இரு நேரங்களிலும் வானம் தெளிவாக இருக்கும்

### அரசியல்வாதி ஒருவரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து

# ஆரையம்பதி பிரதேச செயலக ஊழியர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 19

கிழக்கு மாகாண அரசியல்வாதி ஒருவரின் அடாவடித்தனத்தை எதிர்த்தும், அவரைக் கைது செய்யுமாறு கோரியும் ஆரையம்பதிப் பிரதேச செயலக ஊழியர்கள் நேற்றுக் காலை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வெள்ள நிவாரணப்பொருள்கள் பிரதேச செயலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து கிழக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பிரசாந்தனும், அவரது ஆதரவாளர்களும் பிரதேச செயலக அலுவலகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து, சொத்துகளுக்கு சேதமேற்படுத்தியதோடு, செயலக ஊழியர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டார்கள்.

இதனைக் கண்டித்தே மேற்படி ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்று ஆரையம்பதிப் பிரதேச செயலகத்தின் செயலாளர் கே.தனபாலசுந்தரம் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரச சார்பு மற்றும் சார்பற்ற நிறுவனங்களினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கவென நிவாரணப் பொருள்கள் எமக்கு வழங்கப்பட்டன. அந்த நிவாரணப் பொருள்களை முறையான திட்டத்தின்படி கிராம உத்தியோகத்தர்கள் ஊடாகப் பகிர்ந்தளித்து வருகின்றோம்.

**கிழக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பிரசாந்தனும், அவரது ஆதரவாளர்களும் பிரதேச செயலக அலுவலகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து, சொத்துகளுக்கு சேதமேற்படுத்தியதோடு, செயலக ஊழியர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டார்கள்.**

இந்த நிலையில், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பிரசாந்தன் குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் ஒருவரிடம் சென்று நிவாரணப்பொருள்களைத் தங்களுக்குத் தருமாறு வற்புறுத்தியுள்ளார்.

அதற்கு குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர்கள் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து, மாகாணசபை உறுப்பினர் கடந்த 17ஆம் திகதி என்னிடம் வந்து நிவாரணப்பொருள்களைத் தனக்குப் பெற்றுத்தருமாறும், குறித்த கிராம உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார்.

இதற்கு நான் மறுத்ததால் என்னை மிரட்டிவிட்டுச் சென்றுவிட்டார். அதன்பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கிழக்கு மாகாணசபை ஆளுங்கட்சி உறுப்பினர் பிரசாந்தனும், அவரது ஆதரவாளர்களும் செயலகத்துக்குள் அத்துமீறி நுழைந்து நிவாரணப்பொருள்களை எடுத்துச் செல்ல முயன்றதோடு, செயலக ஊழியர்கள் மீதும் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாகக் காத்தான்குடிப் பொலிஸாரிடம் சென்று முறையிட்டேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் என்னிடம் கூறினர். எனக்கு ஏதேனும் உயிராபத்து நேரிட்டால், அதற்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரசாந்தனே பொறுப்புக் கூறவேண்டும் என்றும் பொலிஸாரிடம் கூறிவிட்டுச் சென்றேன்.

தாக்குதல் குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்து முறையிட்டபோது சட்ட நடவடிக்கை எடுக்கிறார் என என்னிடம் வாக்குறுதியளித்தார்.

இந்த நிலையில், செயலகத்துக்குள் புகுந்து ரகளையில் ஈடுபட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், அவரை கைதுசெய்யுமாறும் கோரி செயலக ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். எனினும், நிவாரணப் பொருள்கள் பகிர்ந்தளிப்புப் பணிகள் ஸ்தம்பிதமடையவில்லை.- இப்படி அவர் தெரிவித்தார்.

## இணுவிலில் படையினர் சோதனை

வலி.வடக்கு, ஜன.19


காங்கேசன்துறை வீதியில் நேற்றுப் பயணம் மேற்கொண்டவர்களைப் பஸ்களில் இருந்து இறக்கி அவர்களின் பொதிகள் படையினரால் சோதனை செய்யப்பட்டன.

காலையில் இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் முற்பகல் இணுவில் சந்தியிலும் வாகனங்களில் வந்த பொதுமக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மானிப்பாயில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் எதிரொலியாகவே இச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

(ஒ-ஐ-86)

## நிவாரணம் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்



வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மண்முனை வடக்குப் பிரதேச மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கோரி நேற்று மட்டக்களப்பு நகர நுழைவாயிலை முற்றுகையிட்டு மக்கள் வீதி மறி யல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கிழக்கு வெள்ள அனர்த்தத்துக்கு 70 ஆயிரம் கால்நடைகள் இரை

கொழும்பு, ஜன.19

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துள்ளன. இதுகுறித்து கால்நடை அபிவிருத்தி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சரான ஆறுமுகன் தொண்டமானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கில் மக்கள் விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பையுமே தமது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வந்தனர். தமது சொந்த வாழ்விடங்களுக்கு மக்கள் திரும்பியுள்ள நிலையில் அவர்களது அன்றாட வருமானத்தை ஈட்டித்தரும் கோழிப் பண்ணைகள், ஆடு, மாடு ஆகியவை அங்கு இல்லாத நிலை காணப்பட்டது.

அவற்றை உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், கால்நடை உற்பத்தி தொடர்பாக அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து உற்பத்தி வீதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவித்தார்.

கிழக்கில் ஏற்பட்ட வெள்ளத்தில் 4 யானைகள் இறந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# நிகழ்வுகள்

## இன்று

### நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.19

''ஆன்மீக வாழ்வியற் சிந்தனைகள்'' நூல் வெளியீட்டு நிகழ்வு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான திருக்கல்யாண மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த எஸ்.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினர்களாக வணிகபீடப் பேராசிரியர் க.தேவராஜாவும், க.சுரேஸ்நேசன், செல்வி யசோதா பரஞ்சோதியும் கலந்து கொள்வார்கள்.

யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் என்.தவராஜா எழுதிய இந்நூலுக்கான மதிப்பீட்டுரையை யாழ்.பல் கலைக்கழக விரிவுரையாளர் பொ.சந்திரசேகரம் வழங்குவார். (ற-313,311)

### மணி மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.19

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணி மண்டபத் திறப்புவிழா நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு ஆலய சபைத்தலைவர் இ.பாலசுந்தரத்தின் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.பல்லைக்கழக பதில் துணைவேந்தர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக கட்டடப் பிரதம பொறியியலாளர் சி.குகநேசன், கல்வித்திணைக்களப் பொறியியலாளர் ஜி.சிவபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் புற்றுநோயாளர்களுக்கு சத்துணவும் உடுபுடைவைகளும் கருணைப்பாலத்திற்கு அன்பளிப்பு நிதியும் வழங்கப்படும். (ற-313)

### கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.19

கோப்பாய் வள்ளியம்மன் சனசமூக நிலைய முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (ஒ-10 )

### வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.19

''சுயதொழில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு'' இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் பி.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ற-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகத்தில் ஆயுதமுனையில் அச்சுறுத்தி 50 பவுண் நகைகள் நேற்றுக் கொள்ளை

## பட்டப்பகலில் நடந்த சம்பவத்தால் பரபரப்பு

சுழிபுரம், ஜன.19

பண்ணாகத்தில் ஓய்வுபெற்ற அரச ஊழியர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் இரு பெண்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தி 50 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

பண்ணாகம், விசவத்தனை வீதியில் உள்ள ஓய்வுபெற்ற அரச ஊழியரான தர்மலிங்கம் என்பவரின் வீட்டிலேயே நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் கணவன் அருகில் உள்ள வாசிகசாலைக்குச் சென்றவேளை மனைவி அயல் வீட்டுப் பெண்ணுடன் உரையாடிக்கொண்டிருந்துள்ளார். இதன்போது சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் இரு பெண்களையும் மிரட்டி வீட்டில் இருந்த சுமார் 50 பவுண் நகைகளையும் அபகரித்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் நேற்றுப் பண்ணாகம் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.(ஒ-10-28)

# வல்லையில் மோ.சைக்கிளில் சென்றவர் கீழே சரிந்து மயங்கி மரணமானார்

## விழுந்த 'ஹெல்மட்'டை எடுக்க முயன்றவேளை

யாழ்ப்பாணம்,ஜன.19

வல்லை வெளியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கந்தரோடை வாசி ஒருவர் தவறி வீழ்ந்த 'ஹெல்மட்டை' எடுக்க முற்பட்டபோது கீழே வீழ்ந்து தலையில் காயமடைந்து மரணமானார்.

சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்த இராசா முருகையா (வயது 65) என்பவரே இவ்வாறு பரிதாபமாக மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பிரஸ்தாப நபர் மனைவியுடன் வல்லை வீதி ஊடாகச் சென்றுகொண்டிருந்தார்.

அவரது 'ஹெல்மட்' டின்பட்டி பூட்டப்படாததால் காற்றுக்கு 'ஹெல்மட்' தூக்கி வீசப்பட்டது. அதை பிடிக்க முயன்றபோதே அவர் வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் மயக்கம் அடைந்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

கிசிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அங்கு அவர் மரணமானார்.

கணவனுடன் சென்ற மனைவி சிறுகாயங்களுக்கு உள்ளானார். (ஒ-ஐ-9-86)

## தெல்லிப்பழை துர்க்கையம்மனுக்கு லண்டன் காண்டாமணி

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்துக்கு பெரிய காண்டாமணி இன்று வந்து சேரவுள்ளது. லண்டனில் உள்ள 'ரெயிலர்' நிறுவனம் வார்த்த இந்த மணி 1,300 கிலோ நிறையுடையது.

லண்டனில் உள்ள அன்பர்கள், துர்க்கையின் அடியார்கள் வழங்கிய நிதியுதவியில் இந்தக் காண்டாமணி வார்க்கப்பட்டுள்ளது.

கொழும்பு வந்தடைந்த இந்த மணி அங்கிருந்து ஏ-9 பாதையூடாக எடுத்து வரப்படுகின்றது. இன்று ஆலயத்துக்கு வந்தடையும் மணி உடன் கோபுரத்தில் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இதேவேளை- ஆலயக் கும்பாபிஷேகக் கிரியைகளில் பங்கேற்க இந்தியாவில் இருந்து மூன்று சிவாச்சாரியர்களும் ஒரு ஓதுவாரும் இன்று வருகின்றனர். (ஒ-ஐ)

## கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம்




பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலையுண்டு இரு வருடங்களாகின்றன. ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போய் ஒரு வருடமாகிறது. அதேபோல் சக்தி தொலைக்காட்சி நிலையம் தீயிடப்பட்டது. இதுதொடர்பான விசாரணைகள் மந்தகதியில் நடைபெறுவதைக் கண்டித்து ஊடக அமைப்புகளின் ஒன்றியம் நேற்றுப் பகல் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

# புங்குடுதீவில் பெண்ணின் அழுகிய சடலம் பாழடைந்த கிணற்றில் இருந்து மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.19

புங்குடுதீவு, முனைப்புலம் பகுதியில் பாழடைந்த கிணற்றினுள் இருந்து அழுகிய நிலையில் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக்கு மாடு மேய்கச் சென்ற ஒருவர் கிணற்றினுள் துர் நாற்றம் வீசுவதை அவதானித்துப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். அங்கு விரைந்த பொலிஸார் கிணற்றில் இருந்து அழுகியநிலையில் பெண்ணின் சடலத்தை மீட்டனர்.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலமே நேற்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய்மகிழ் மகாதேவா சடலத்தை பிரேதப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் அந்தச் சடலத்துக்குரிய ஏனைய தடயங்களை கண்டெடுப்பதற்காக இன்று கிணற்று நீரை இறைத்துத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-9)

# ஜனாதிபதி மஹிந்தவின் மறுப்பை நிராகரித்தது இந்தியக் கடற்படை

சென்னை,ஜன.19

தமிழ்நாட்டு மீனவரை தமது கடற்படையினர் சுட்டுக் கொல்லவில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள போதும் இந்தியக் கடற்படை அதிகாரிகள் அதை ஏற்கவில்லை.

இலங்கை கடற்படையினரே மீனவரை சுட்டுக் கொன்றதாக அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பாக்கு நிரிணையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர் ஒருவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அவரைத் தாம் சுடவில்லை என்று இலங்கை கடற்படையினர் கூறியிருந்தனர்.

பின்னர் கடந்த வெள்ளியன்று இலங்கை அதிபரும் அதையே கூறியிருந்தார்.

ஆனாலும் இந்திய கடற்படை அதிகாரிகள் இலங்கை கடற்படையினரே அவரைச் சுட்டதாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய நடவடிக்கைப் பணிப்பாளர் தாக்கரே இதுகுறித்து செய்தியாளர்களிடம் மீளவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை இலங்கை கடற்படைத் தளபதியாக கடந்த வாரம் பொறுப்பேற்றுக் கொண்ட வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்க, முடிந்தால் இதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்கட்டும் என்று சவால் விடுத்திருந்தார்.

இந்தநிலையில் இந்திய கடலோரக் காவல்படை முழுமையான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

மண்டபம் கடலோரக் காவல் படையின் கட்டளை அதிகாரி கொமாண்டர் சைனி இதுகுறித்து தகவல் வெளியிட்டுகையில் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியதாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் நடந்த இடம், நேரில் கண்ட சாட்சிகள், சுடப்பட சரியான நேரம், இதற்கு முன்னரும் பின்னருமாக நடந்த சூட்டுச் சம்பவங்கள் மற்றும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்த விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

காவல்துறையினரின் உதவியுடன் விசாரணைகள் இடம்பெறுகின்றன.

அதன் முடிவுகளின் படி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

படகில் இருந்து ஒரு கல்லும், ரவையும் மீட்கப்பட்டுள்ளன.

இவையும் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

கரையில் இருந்து 25 - 30 கடல்மைல் தொலைவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதன்படி சூட்டுச் சம்பவம் இந்தியக் கடல் எல்லைக்குள் நடைபெறவில்லை.

ஆரம்பகட்டத் தகவல்களின் படி மீனவர்கள் தொலைத் தொடர்புக் கருவியையோ அல்லது புவிநிலைகாட்டி போன்ற கருவிகளையோ கொண்டு சென்றிருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

# தனிமையில் வசித்து வந்த பருத்தித்துறை வாசியின் சடலம் 4 நாள்களின் பின் வீட்டில் மீட்பு

வடமராட்சி,ஜன.19

பருத்தித்துறை வியாபாரி மூலையில் தனிமையில் வசித்து வந்த வயோதிபர் ஒருவரின் சடலம் அவரது வீட்டில் இருந்து பழுதடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கந்தசாமி சிவலிங்கம் (வயது 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

தைப்பொங்கல் தினத்தன்று உறவினர்கள், நண்பர்களுடன் உரையாடிச் சென்ற பிரஸ்தாப நபரை நான்கு நாள்களாக வெளியில் காணமுடியவில்லை.

இவரது வீட்டிலிருந்து துர் நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் கிராம அலுவலருக்கு இது குறித்து தெரியப்படுத்தினர்.

அதைத் தொடர்ந்து அயலவர்களுடன் கிராம அலுவலர் சென்று பார்த்தபோது வயோதிபரின் சடலம் காணப்பட்டது.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தி, பிரேத பரிசோதனைக்காக சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-23-236)

# உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படவேண்டும்

கொழும்பு,ஜன.19

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெண்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென மத்திய மாகாண பெண்கள் பேரவை அறிவித்துள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர் தலில் பெண்களுக்கு குறைந்த பட்சம் 25 வீதமேனும் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெண்களுக்கு உரிய இட ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால் தேர்தலில் பெண்கள் வாக்களிக்கக் கூடாது என குறித்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. மத்திய மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ள பல பெண் வேட்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்ட போதிலும் உரிய சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பதில் சந்தேகம் நிலவி வருவதாக பெண்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். வேட்பு மனுத் தாக்கல் செய்யும் போது சகல கட்சிகளும் 25 வீதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென மத்திய மாகாண மகளிர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

# ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பில் தொழில்நுட்பம் தனிப்பிரிவு

கொழும்பு,ஜன.19

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடத்திட்டத்தை ஒரு பிரிவாக உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கலை, வணிகம், விஞ்ஞான பாடப்பிரிவுகளுக்கு மேலதிகமாக ஒரு பிரிவாக உள்ளடக்குவது குறித்து கல்வியமைச்சு கவனம் செலுத்திவருகிறது.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க கல்வியமைச்சினால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடனும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுடனும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்திய கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து அமைச்சர் டலஸ் அழகப் பெரும கருத்து தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் 3இலட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் முதலாம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவர்களில் 21 ஆயிரம் மாணவர்களே பல்கலைக் கழகம் செல்கின்றனர். இது 6 வீதமே ஆகும். ஏனைய மாணவர்களில் தொழில்நுட்பக் கல்வியை 16 வீதமானோரே பெறுகின்றனர். இதனை அடுத்து மூன்று வருடங்களில் 40 வீதம் வரை அதிகரிப்பதற்காக இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயகாந்தன், இளையராஜாவுக்கு விருது வழங்குகிறது தமிழக அரசு

சென்னை, ஜன. 19

தமிழக அரசின் கலை - பண்பாட்டுத் துறை சார்பில் ஜெயகாந்தனுக்கு பாரதி விருதும், இளையராஜாவுக்கு எம்.எஸ்.சுப்புலட்சுமி விருதும், பத்மா சுப்பிரமணியத்துக்கு பாலசரசுவதி விருதும் வழங்கப்படுகின்றன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -



தமிழகத்தைச் சேர்ந்த கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்கப்படுவது போல, அகில இந்திய அளவில் புகழ் பெற்ற கலைஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் விருதுகள் வழங்கப்படுமென 2009 ஆம் ஆண்டு சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இயல் துறையில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு, 'பாரதி விருது', இசைத்துறையில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு 'எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது', நாட்டியக் கலையில் சிறந்து விளங்கும் ஒருவருக்கு, 'பாலசரசுவதி விருது' என மூன்று விருதுகளை ஆண்டுதோறும் வழங்க முதல்வர் உத்தரவிட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்து முதல் முறையாக இந்த ஆண்டில் இயல் துறையில் சிறந்த எழுத்தாளரான ஜெயகாந்தனுக்கு 'பாரதி விருது', திரை இசையில் தனி முத்திரை பதித்துள்ள இளையராஜாவுக்கு, 'எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது', நாட்டியக் கலையில் புகழ் பெற்ற பத்மா சுப்பிரமணியத்துக்கு 'பாலசரசுவதி விருது' வழங்கவும் இவ்விருதுகளை பெறுவோருக்கு தலா ஒரு லட்சம் ரூபா பொற்கிழியாக வழங்கவும் முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப்படையின் அராஜகம் குறித்து பா.ஜ.கவின் மாநிலக்குழு நேரில் ஆய்வு

## பொன்.இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

சென்னை,ஜன.19

இலங்கையால் தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட துயரச் சம்ப வம் குறித்தும் இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல், அராஜகம் குறித்தும் விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் பா.ஜ.கவின் குழுவினர் நேரில் சென்று ஆய்வு நடத்தவுள்ளனர் - என்று பா.ஜ.க. தமிழ் மாநிலத் தலைவர் பொன். இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நாகை மாவட்டத்தில் ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த வீரபாண்டியன் என்பவர் கடந்த 12 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழக மீனவர்களைக் காக்கவும் அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதோடு மேலும் இழப்புகள் ஏற்படாவண்ணம் தயார்நிலையில் இந்திய அரசு இருக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நடந்துவிட்ட துயரச் சம்பவம் குறித்தும் இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல், அராஜகம் குறித்தும் விவரங்களைத் தெரிந்து கொள்ளும்வகையில் மாநிலத் துணைத் தலைவர் எச்.ராஜா தலைமையில், சுப.நாகராஜன், ஆதவன், கே.எம். காந்தி, கறுப்பு முருகானந்தம் அடங்கிய குழு பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறுவதோடு நடந்த விடயங்கள் குறித்து ஆய்வும் நடத்துவர் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய, மாநில அரசுகளின் செயற்பாடற்ற தன்மை காரணமாக இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்ட வீரபாண்டியன் குடும்பத்திற்கு ரூபா 10 லட்சம் இழப்பீடு வழங்கவேண்டும். அத்தோடு அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)

# எம்.ஜி.ஆர். சிலைக்கு விஜய் ரசிகர்கள் மாலை

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 94 ஆவது பிறந்த தினத்தையொட்டி, திருச்சியில் உள்ள அவரது சிலைக்கு முதல் முறையாக விஜய் ரசிகர்கள் திங்கட்கிழமை மாலை அணிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நடிகர் விஜயின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர் சமீபத்தில் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதாவைச் சந்தித்தார். இது அரசியல், திரைப்படத் துறை வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, நடிகர் விஜய் அ.தி.மு.கவில் இணையப் போகிறார் என்று பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந்நிலையில், விஜய் நடித்த 'காவலன்' திரைப்படம் மிகுந்த எதிர்ப்புக்கு இடையே பொங்கலுக்குத் திரையிடப்பட்டது. இந்தப் படத்தை வெளியிடத் திரையரங்க உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்தது. திரையரங்க உரிமையாளர்களின் எதிர்ப்புக்கு, ஆளும் தி.மு.க. அரசுதான் பின்னணியில் உள்ளது என்று விஜய் ரசிகர்கள் வெளிப்படையாகக் கூறி வந்தனர். இந்நிலையில், எம்.ஜி.ஆரின் பிறந்த தினத்தில், அவரது சிலைக்கு திருச்சியில் உள்ள விஜய் ரசிகர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியது திருச்சியில் உள்ள அரசியல் பிரமுகர்களை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 20.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★கட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109460)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்**

மண்ணில் 16.08.1945 — மலைங்களில் 20.12.2010



**திருமதி கந்தசாமி குணலெட்சுமி**
(புங்குடுதீவு 4ஆம் வட்டாரம்)

நீங்கள் நடந்த பாதை எல்லாம்
அம்மா அம்மா என்று கூப்பிடுகின்றோம் கேட்கவில்லையா?
வேளைக்கு வேளை ருசியாகச் சமைத்து அன்னமிட்ட
கைகளைத் தேடுகின்றோம் - தெரியவில்லையா?
காதிருந்தும் ஏனம்மா செவிடாக இருக்கின்றாய்
கண்ணிருந்தும் ஏனம்மா குருடாக இருக்கின்றாய்
மனிதன் பிறப்பதும் இறப்பதும் நியதிதான். ஆனால்
எங்களைச் சிறுபிள்ளைகள் போல் வளர்த்த
செல்லமான அம்மாவின் இறப்பை எங்களால் ஏற்க
முடியவில்லையே?
பாவிகள் மூவரையும் விட்டு பாசமுள்ளவர்களிடம்
சென்றுவிட்டாயா அம்மா?
இது ஆண்டவன் நியதியா இல்லாவிடில்
பாவிகள் எங்களின் தலைவிதியா?
உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்கள்
எல்லோரும் தேடுகின்றார்கள் ஓடோடி வந்திடம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(107467)
ஆறாத்துயரில்
குடும்பத்தினர்.

# ரஜினி ரசிகர்களை வளைக்கும் தி.மு.க.

சட்டசபைத் தேர்தல் நெருங்கி வருவதையொட்டி தனக்கு ஆதரவான வாக்குகளைத் தக்கவைக்கும் முயற்சிகளில் தி.மு.க. தீவிரமாகியுள்ளது. அதில் ஒரு முயற்சியாக ரஜினிகாந்தின் ரசிகர்களை தி.மு.கவுக்குச் சாதகமாகத் திருப்பும் முயற்சிகள் நடந்து வருகின் றன.

அனைத்து மாவட்டங்களிலும் இந்த முயற்சிகள் நடந்து வருகின்றன எனக் கூறப்பட்டாலும் திருச்சியில் பகிரங்கமாகவே இது நடைபெறுகிறது. அமைச்சர் கே.என்.நேரு இந்த முயற்சியில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

தேர்தல் சமயங்களில் ரஜினியின் ஆதரவு யாருக்கு என்ற கேள்வி வழக்க மாக எழும். ஆனால் தான் யாரையும் ஆதரிக்கவில்லை என்றும், ரசிகர்கள் தங்கள் மனசாட்சிப்படி யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம் என்றும் ரஜினி கூறி வருகிறார்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1Kg 450/-), கல் பேட் சுத்தம் செய்து காலை 6.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.: 021 222 6944
(109274)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

No.1 ஒறிஜினல் பிறிமா பேட்டுக் குஞ்சுகள் 20.01.2011காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே.: 021 222 6944
(109274)

**காணி விற்பனைக்கு**

மீசாலை, டச்சு றோட்டில் கேணியடிச் சந்தியில் விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகில் 20 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0772261690
(சி/574299)

**வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில்**
**(கதிரேசன் கோயில்)**
**தைப்பூசத் திருவிழா**

நாளை (20.01.2011) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேஷ அபிஷேகம் நடைபெற்று சுவாமி உள் வீதி வலம் வருதலும் அதைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

ஆலய அறங்காவலர்.

**அரசாங்க அறிவித்தல்**
**கேள்வி அறிவித்தல்**

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்**

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் உள்ள பழைய மருத்துவமாது விடுதியினை நிலமட்டத்துடன் அகற்றுவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் சமர்ப்பிக்க விரும்புவோர் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள எமது அலுவலகத்துடன் 26.01.2011க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர்.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.
(சி-574983) 18.01.2011

கணம் நினைப்பீர் — **பழைய மாணவர்களுக்கு பகிரங்க அழைப்பு** — கரிசனை காட்டுவீர்

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று பல்வேறு நிலைகளிலும் பணியும், சேவையும் ஆற்றும் அனைத்து உள்ளங்களையும் இக்கல்லூரியின் எழுச்சிக்கு வித்தாகும் வகையில் கருத்தொருமிக்கவராய், கைகொடுப் பவராய்க் கருதியழைக்கின்றோம்.

காலம் - 23.01.2011 ஞாயிறு பி.ப 3.30 மணி
இடம் - கல்லூரி மண்டபம்

வருகைதர இயலாதவர்கள் தங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு 31.01.2011இற்கு முன் தெரியப்படுத்த இடமுண்டு. கல்லூரி வளர்ச்சி சார்ந்த முன்மொழிவுகள் இடம்பெற உள்ளமையால் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.என்.செல்வராசா,
தலைவர் (ப.மா.சங்கம்).

திரு.வே.ஞானகாந்தன்,
அதிபர்.

தொடர்புகளுக்கு - 0212223456
E.mail: jcmmvnavothaya@gmail.com
(சி-574988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பழைய கதையாக மாறிவிடக்கூடாது ஜனாதிபதி தந்துள்ள நம்பிக்கை!

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பூரண கும்பம் வைத்தும், ஆலாத்தி எடுத்தும் மங்கள இசை முழங்கியும் தமிழ் பாரம்பரியங்களுக்கேற்ப மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதிக்கு விழாக் குழுவினர் சார்பில் கிரீடம் சூட்டப்பட்ட நிகழ்வு அவரை மகிழ்விப்பதாகவும் நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் சிறப்பளிப்பதாகவும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால்...

தென்னிலங்கை தலைவர் ஒருவருக்கு வடக்கில் கிரீடம் சூட்டப்படுவதானது பழைய சம்பவம் ஒன்றை அனேகருக்கு நினைவுப்படுத்துவதாக இருந்திருக்கும். இன்றைய தலை முறையினருக்கு அது தெரியாமல் இருந்தாலும் பழைய தலை முறையினர் மறந்திருக்க மாட்டார்கள். மறந்திருந்தாலும் இந்த சம்பவம் அதனை நினைவூட்டியே இருக்கும்.

ஆம், டி.எஸ்.சேனநாயக்காவின் மறைவுக்கு பின்னர் பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராகப் பதவி ஏற்றுக்கொண்ட அவரது புதல்வர் டட்லி சேனநாயக்க அரிசி விலையேற்றம் காரணமாக நாட்டில் பெரும் எதிர்ப்புக்களையும் - இடதுசாரிகளின் தொழிலாளர் அமைதியின் மையையும் எதிர்கொண்டது மட்டுமின்றி அப்போதைய ஐ.தே. கட்சியின் உள்பூசல் காரணமாகவும் பதவியைத்துறக்க நேர்ந்தது.

அதன் பின்னர் பதவிக்குவந்த சேர் ஜோன் கொத்தலாவல ஒருமுறை யாழ்ப்பாணம் வந்தார் - நெடுந்தீவில் அவருக்கு மலர்க்கிரீடம் சூட்டி வரவேற்றார்கள். அந்தச் சம்பவத்தினால் புளகாங்கிதமடைந்திருந்த சேர். ஜோன் கொத்தலாவல தமிழ் மக்களைக் குதூகலிக்கச் செய்வதற்காகவோ என்னவோ இந்த நாட்டில் சிங்களம், தமிழ் இரண்டுக்கும் சம அந்தஸ்து வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அந்தக் காலகட்டத்தில் தென்னிலங்கையில் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மாநாட்டில் சிங்களம் மட்டுமே இலங்கையில் அரசகரும மொழியாக இருக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு திரும்பிய சேர் ஜோன் கதிகலங்கிப்போனார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் தென்னிலங்கையில் பெரும் வரவேற்பை மட்டுமல்ல சேர் ஜோன் வடக்கில் தெரிவித்த கருத்துக்கு சரியான எதிர் நடவடிக்கையாகவும் அமைந்து விட்டது. அதையடுத்து அவசரமாக களனியில் கூடிய ஐக்கிய தேசிய கட்சியும் சிங்களத்தை மட்டுமே அரசகரும மொழியாக்குவதென்ற தீர்மானத்தை எடுத்தது.

பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியும் அதன் தோழமைக்கட்சிகளும் பெருவாரியான வெற்றிகளைக் குவித்தன. ஐக்கிய தேசிய கட்சிக்கு எட்டே எட்டு உறுப்பினர்களே தாக்குபிடித்துக் கொண்டார்கள்.

ஆனால் அன்று இடம்பெற்ற கிரீடம் சூட்டும் நிகழ்வுக்கும் இன்று இடம்பெற்றுள்ள நிகழ்வுக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு.

சேர் ஜோன் அக்கால கட்டத்தில் மக்களை எதிர்கொண்டு அவர்களின் ஆதரவைப் பெற்றுப் பிரதமராக இருக்கவில்லை. தென்னிலங்கை மக்களின் உணர்வுகளைப் பூரணமாக புரிந்து கொண்டவராகவும் இருக்கவில்லை. அத்துடன் அவர் கொடுத்த வாக்குறுதி அவரது க்ட்சியின் ஏகோபித்த கருத்தாகவும் இருக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷ தென்னிலங்கையில் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியாக அபரிமிதமான வெற்றியைப் பெற்றிருப்பதுடன் அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் நட்புக்கட்சிகளும் மக்களின் பெரும் செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் பெற்றிருக்கிறார்கள்.

எனவே ஜனாதிபதி ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திலோ வேறு எங்குமோ வெளியிடும் கருத்துக்கள் வெறும் வாய்ச்சவடால்களாக இருக்காது - இருக்கவும் முடியாது. வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை உத்தேசித்து அவர் பேசியதாகவும் கருத இடமில்லை.

தைப் பொங்கல் காலத்தில் ஜனாதிபதி வடபகுதி மக்களுக்கு தந்துள்ள வெகுமதியாக சங்குப்பிட்டி - கேரதீவு பாலத்தை ஏற்றுக்கொண்டுள்ள மக்கள் அவர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் வெளியிட்டுள்ள கருத்துக்களையும் சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது அவசியம்.

''என்னை நம்புங்கள்'' என்று அவர் கூறியுள்ள வார்த்தைகள் முக்கியமானவை. ஏனென்றால் தமிழ் மக்கள் காலம் காலமாகத் தென்னிலங்கைத் தலைவர்களை நம்பி ஏமாந்தவர்கள்- சட்ட சபைக் காலத்திலிருந்து இந்த நிலைமை தொடர்ந்து வந்துள்ளது. இலங்கைக்கு சுதந்திரம் கேட்டு அன்றைய சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட வெள்ளை அறிக்கையை ஆதரிக்கும்படி சிங்களத் தலைவர்கள் தமிழ்த்தலைவர்களை உருக்கமாக வேண்டி நின்றார்கள். அவர்கள் வழங்கிய உறுதிமொழிகளை நம்பிய தமிழர்கள் வெள்ளை அறிக்கையை ஆதரித்து வாக்களித்தார்கள். ஆனால் சுதந்திரம் கிடைத்த சிறிது காலத்திலேயே உறுதிமொழிகள் காற்றில் பறந்துவிட்டன.

இன்று நிர்மாணிக்கப்பட்டுவரும் எதிர்கால இலங்கையில் எவருமே பின்தள்ளப்பட்டுவிட மாட்டார்கள். எனவே அனைவரும் ஒற்றுமையான சுபீட்சமான ஓர் இலங்கையைக் கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும் என்று ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பு வீண் போகக்கூடாது.

நாட்டில் அமைதியைக் குழப்ப வடக்கிலும் தெற்கிலும் பாதாள உலகக் கோஷ்டியினர் சதிமுயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். இவைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்பாவி மக்களாகிய உங்களை பாதுகாப்பதே எனது கடமை, நீங்கள் என்னை நம்பலாம் என்று ஜனாதிபதி கூறியுள்ள வார்த்தைகள் விரைவில் செயல் உருப்பெறும் என்றும் நெடுங்காலமாக தமிழ் மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தீர்வுத்திட்டத்தையும் உருவாக்கி அவர் வழங்குவார் என்றும் நம்பி இருப்போம்.

## எதிர்காலப் பணிகள் தொடர்பாக செஞ்சிலுவை குழு அரசுடன் பேச்சு

கொழும்பு,ஜன 19

தமது எதிர்காலம் தொடர்பில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் கொழும்பில் இருந்து கொண்டு பணிகளை மேற்கொள்ளு மாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அரசு பணிப்புரை விடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் இயங்கி வந்த கிளைகளை மூடி விடுமாறு அரசு கோரியுள்ளது. தலைநகர் கொழும்பிலிருந்து பணிகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான ஓர் பின்னணியில் இலங்கையில் தொடர்ந்தும் தொண்டுப் பணிகளை மேற்கொள்வதா என்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவில் 31 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 318 பேர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குதல், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

(த)

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு உதவி

கொழும்பு,ஜன 19

வெள்ளம் காரணமாகப் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள விவசாயிகளுக்கு பல்வேறு வகையில் உதவ விவசாய அமைச்சு முன் வந்துள்ளது.

இதன் அடிப்படையில், எதிர்வரும் பெரும் போகத்தின் போது இலவச விதை நெல் விநியோகிக்கப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாதிப்படைந்த வயல்கள் தொடர்பான விவரங்கள் தற்போது கமநல அதிகாரிகளினால் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெள்ள அனர்த்தம் காரணமாக 1 லட்சம் ஹெக்டயருக்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள்தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக 20 சத வீதமான விளைச்சலில் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் அரிசிப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.(த)

## நீதிபதிகளுக்கு எதிராக அரசாங்கம்

கொழும்பு,ஜன 19

அரசுக்கு எதிரான தீர்ப்புக்களை வழங்கும் நீதிபதிகளுக்கு எதிராக சேறடிப்பினை மேற்கொள்வதற்கு அரச உயர் மட்டங்கள் தயாராகி வருகின்றன.

பெரும்பாலும் அரசுக்கு எதிராக அமையக்கூடிய வழக்குகளின் தீர்ப்பு வழங்க வேண்டிய இறுதி நிலையை எட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

அவை பெரும்பாலும் ஜனாதிபதிக்கு, எதிரானதாகவே அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த வழக்குகளுக்கான தீர்ப்புகளை வழங்கவுள்ள நீதிபதிகளுக்கு எதிராக சேறடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச, குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் இருவரும், ஜனரஞ்சக ஊடகத்துறையின் இரண்டு பேரும் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் தற்போது குறித்த நீதிபதிகளின் கடந்த கால வாழ்க்கையை பற்றி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த)

## மீன்பிடி அபிவிருத்தி குறித்த 4நாள் செயலமர்வு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.19

'தென்னாபிரிக்க மற்றும் தென் ஆசிய நாடுகளின் சிறிய மீன்பிடித் தொழிலாளர்களின் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு இடமளித்தல்' என்ற தொனிப் பொருளிலான நான்கு நாள் செயலமர்வின் முதல் நாள் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை மண்டபத்தில் ஆரம்பமாகியது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் இரு நிமிடங்கள் மௌனப் பிரார்த்தனை, தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன இடம்பெற்றன. தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழகப் புவியல்துறை விரிவுரையாளர் கலாநிதி எ.எஸ்.சூசை வரவேற்புரையை நிகழ்த்தினார். புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.வி.ராஜேஸ்வரன் தலைமை உரையை நிகழ்த்தினார். செயலமர்வு தொடர்பான அறிமுக உரையை நெதர்லாந்து அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கலாநிதி மார்ரின் பவிங்க் வழங்கினார். பிரதம விருந்தினர் உரையை யாழ்.பல் கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நிகழ்த்தினார்.

நெதர்லாந்து அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி மார்ரின் பவிங்க் தனது உரையில் -

இலங்கையின் வடபகுதிக் கரையோரங்களைச் [illegible] தொழிலாளர்களின் [illegible] அவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அறிந்துகொள்ளவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை - இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் சிறிய அளவு மீன்பிடியில் ஈடுபடுவோர் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளதுடன் கடல்வள ஆய்வு, துறைசார் ஆளணியினரின் மேம்பாடு குறித்தும் இதில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடல்களையும் ஆய்வுகளையும் நடத்தி இலங்கை உள்ளிட்ட தென் ஆசிய மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் அரசுகளுக்கு இவற்றை அறிக்கையிடவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

நெதர்லாந்து அம்ஸ்ரர்டாம் பல்கலைக்கழகம், தென்னாபிரிக்க கேப்டவுண் பல்கலைக்கழகம், இலங்கை றுகுணு மற்றும் யாழ். பல்கலைக்கழகங்கள், வட அயர்லாந்து உலஸ்ரர் பல்கலைக்கழகம் ஆகியவை ஒன்றிணைந்து இந்த நான்கு நாள் செயலமர்வுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளன. இதில் அந்தப் பல்கலைக்கழகங்களில் துறைசார் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அத்துடன் தமிழ்நாட்டு மீனவர் பிரதிநிதிகளும் வடபகுதி மீனவப் பிரநிதிகளும் இதில் கலந்து கொள்கின்றனர்.

(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 ஜனவரி 2011 புதன்கிழமை

# நல்லூரில் 65 பவுண் கொள்ளை

நாவறகுழி, ஜன.19

யாழ். கச்சேரி, நல்லூர் வீதியில் நேற்றுமுன்தினம் திங்கள் கிழமை நள்ளிரவு வீடொன்றின் பின் கதவை உடைத்துப் புகுந்த திருடர்கள் கத்தி முனையில் 65 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நள்ளிரவு 1.45 மணியளவில் வீட்டினுள் நுழைந்தனர். சத்தமின்றி வீட்டின் பின்புறம் சென்ற 5 திருடர்கள் சமையலறைக் கூரை ஓடுகளை கழற்றிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தனர்.

வீட்டிலிருந்தோர் எழும்பித் தங்களைச் சுதாகரிப்பதற்குள் அகப்பட்ட துணிகளை எடுத்துத்தமது முகத்தை மறைத்துக் கட்டினார்கள்.

**நல்லூர் வீடொன்றில் புகுந்த திருடர்கள் வீட்டாரைக் கத்தி முனையில் மிரட்டி 65 பவுண் நகை அபகரிப்பு**

கொள்ளையர்களில் 65 வயது மதிக்கத்தக்க ஒருவரும் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரும், 25 - 30 வயது வரையான 3 இளைஞர்களுமாக 5 ஆண்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்கள், வீட்டிலிருந்தோரின் கழுத்தில் கத்தியை வைத்துக்கொண்டு உள்அறைகளின் மின்குமிழ்களை ஒளிரச் செய்தனர்.

வீட்டினுள் பகுதி பகுதியாக மறைத்து வைத்திருந்த தங்க நகைகளை வீட்டு உரிமையாளர்களால் எடுக்கச் செய்தனர்.

இதன்போது கொள்ளையர்கள் தமிழில் சரளமாகக் கதைத்ததுடன் சிங்களத்திலும் உரையாடினர். அதன் பின்னர் மின்னல் வேகத்தில் அங்கிருந்து வெளியேறினர்.

சம்பவம் இடம் பெற்ற வீட்டின் எதிர்ப்புற ஒழுங்கையில் 100 மீற்றர் தூரத்தில் நீதிபதி ஒருவரின் வதிவிடம் அமைந்துள்ளது.

இதுதொடர்பாக அங்கு காவல் கடமையில் இருந்த பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்த இடத்துக்கு விரைந்து வந்ததுடன் பொலிஸார் யாழ். பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதி உட்பட யாழ். நகர வீதிகளில் படையினர் தேடுதல் நடத்தினர். (201-121)

# செஞ்சிலுவைச் சங்க கணினி வலைப்பின்னல் நிலையம்

யாழ்ப்பாணம்,ஜன.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்தில் கணினி வலைப்பின்னல் நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளது.

மேற்படி கிளையில் நாளை வியாழக்கிழமை மேற்படி நிலையம் திறந்து வைக்கப்படும்.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்குச் சமீபமாக இந்த நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-7)

# துப்பாக்கிச் சூடு குறித்து பொலிஸ் விசாரணை தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.19

ஆனைக்கோட்டையில் சைவக்குருக்களின் மனைவி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று மானிப்பாய் பொலிஸ் நிலைய விசாரணை அதிகாரி ஏ.குணதிலக தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

ஆனைக்கோட்டை புக்கைதின்னிப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்களும் அவரது மனைவியும் ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் உள்ள வீடொன்றின் வாசலில் நின்று ஆலயத்தில் நடைபெறவுள்ள சங்காபிஷேகம் தொடர்பாக உபயகாரரிடம் கதைத்துக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்தின் பின்னணி என்ன என்பது குறித்து நாம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றோம். அவர்கள் கதைத்துக் கொண்டிருந்த வீட்டாரிடமும் விசாரணை நடத்தியுள்ளோம். இதுவரை எவரையும் கைது செய்யவில்லை - என்றார். (த-9)

## சரியான திட்டமிடல்...



இன்றையதேவை :வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின்செயலாளர் அ.புத்திசிகாமணி தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்றது.

*பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஜேர்மன் தொழிநுட்ப நிறுவன ஆலோசகர் பெற்றர் நவ்சற் உரையாற்றுகிறார். (302)*

# வீடமைப்பு அதிகாரசபையால் 602 பேருக்கு பதவி உயர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன. 19

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த 32 உத்தியோகத்தர்கள் உட்பட 602 பேருக்கு ஒரே தடவையில் அமைச்சால் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த 12 ஆம் திகதி கொழும்பில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் நாடு முழுவதும் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்கள் எவருக்கும் கடந்த 1999 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

தேசிய வீடமைப்பு அமைச்சர் பதவியைப் பெறுப்பேற்ற விமல் வீரவன்ச நாடு முழுவதும் கடமையாற்றி வரும் உத்தியோகத்தர்களில் 602 பேருக்குப் பதவி உயர்வை வழங்கியுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பதவியுயர்வுக் கடிதங்கள் கடந்த 12ஆம் திகதி கொழும்பில் வைத்து வழங்கப்பட்டன.

வடமாகாணத்தில் கிளிநொச்சியில் 5 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் 9 பேருக்கும், மன்னாரில் 9 பேருக்கும் மேற்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-115)

# இந்தியன் வங்கிக் கிளை திறப்பு

யாழ்ப்பாணம் ஜன.19

யாழ்ப்பாணத்தில் இந்தியன் வங்கிக்கிளை யாழ்.ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கிளை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட வுள்ளது. இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேற்படி வங்கிக் கிளையை பிற்பகல் ஒரு மணிக்கு திறந்து வைப்பார்.

இந்த வங்கியைத் திறந்து வைப்பதற்காகவும் வங்கியாளர்களுடன் கலந்துரையாடுவதற்காகவுமே ஆளுநர் அன்றை தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தர உள்ளார்.

இதேவேளை வடமாகாணத்தில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகளின் வடபிராந்திய முகாமையாளர்கள், நிதி நிறுவன முகாமையாளர்கள் ஆகியோருடனும் அவர் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளார்.

அன்றைய தினம் முற்பகல் 10.45 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் வடபிராந்தியக் கிளையிலேயே ஆளுநருடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற உள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் நிதித்துறையின் வளர்ச்சி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (201-15)

# வெளியூர்களுக்கான தபால் பயணிகள் பஸ் மூலம்

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ். பிரதேச தபாலகம் வெளியூர்களுக்கான தபால்களை மீண்டும் பயணிகள் பஸ்கள் மூலம் அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தபாலகத்தில் தபால் வாகனங்களுக்கு ஏற்பட்ட பற்றாக்குறையை அடுத்து மீண்டும் தபால் பொதிகளைப் பஸ்கள் ஊடாக எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தபாலகத்தில் சேவையில் ஈடுபட்ட இரண்டு தபால் வாகனங்கள் கொழும்புக்கு மீளப்பெறப்பட்டன. இதனாலேயே தபால் சேவைகள் தாமதப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதேவேளை தற்போது இரண்டு தபால் வாகனங்களே வெளியூருக்கும் குடாநாட்டுக்கும் இடையில் தமது தபால் சேகரிப்பு விநியோகப் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (201-26)

# ஐ.சி.ஆர்.சி. யாழ்.அலுவலகம் மூடப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.மாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி) அலுவலகங்கள் அனைத்தும் எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முற்றாக மூடப்படுகின்றன.

இதனால் யாழ்.மாவட்டத்தில் இந்த அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வந்த மனிதாபிமானத் திட்டங்கள் உட்பட அனைத்துப் பணிகளும் இத்திகதியுடன் முற்றாக நிறுத்தப்படுகின்றன.

தலைநகர் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் அமைந்திருந்த பிராந்திய அலுவலகங்களை மூடுவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஏற்கனவே மேற்கொண்டிருந்த தீர்மானத்துக்கு அமைய யாழ். மாவட்டத்திலும் அதன் செயற்பாடு மார்ச் 31 ஆம் திகதியுடன் முற்றாக முடிவடைகின்றது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் செயற்பட்டு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் அலுவலகங்களில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரும் எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதியுடன் பணியிலிருந்து நிறுத்தப்படுகின்றனர். இதற்கான முன் அறிவித்தல் பணியாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. அலுவலகம் மூடப்படுவதால் வேலை இழக்கும் பணியாளர்களுக்கு இலங்கைத் தொழில் சட்டத்துக்கு அமையக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என செஞ் சிலுவைச் சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகங்கள், ஓய்வு விடுதிகள் அமைந்திருந்த கட்டடங்கள் அனைத்தும் அவர்களது உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

செஞ்சிலுவைக் குழுவின் பாவனைக்காக உள்ள மருந்து வகைகள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் என்பன யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகள், சமூக நிறுவனங்கள் என்பவற்றுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்தில் பணியாற்றி வந்த வெளிநாட்டவர்கள் இருவர் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்குப் பின்னர் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தில் இணைந்து அங்கு தமது பணிகளைத் தொடரவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதிகளிலேயே தங்கியிருப்பர் என்றும் கூறப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் செயற்பட்டு வந்த செஞ்சிலு வைச் சர்வதேசக் குழுவின் அனைத்துச் செயற்பாடுகளும் மார்ச் மாதத்துடன் நிறுத்தப்படுவதால் அந்த அமைப்பு இங்கு மேற்கொண்டு வந்த மனிதாபிமானப் பணிகள் உட்படப் பல அபிவிருத்தித் திட்டங்கள், உதவி வழங்கும் செயற்பாடுகள் என்பனவும் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதாகவும்,

இதன் காரணமாக யாழ். மாவட்ட மக்களுக்கு இனிமேல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவிகள் கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பிரதேச சபைக்கு முதல் முறையாகத் தேர்தல்

காரைநகர் ஜன,19

காரைநகர் பிரதேச சபைக்கான தேர்தல் முதல் தடவையாக இம்முறை நடைபெறவுள்ளமையால் அந்தப் பகுதி மக்கள் இத் தேர்தலைப் பெரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளனர்.

கடந்த பத்துவருடங்களாகக் காரைநகர் தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாகப் பிரிக்கப்பட்டு தனியொரு பிரதேச சபையும் உருவாக்கப்பட்டு அவை செயற்பட்டுவருகின்றன.

கடந்த தேர்தல் காலங்களில் காரைநகர் பகுதி மக்கள் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு நடத்தப்படும் தேர்தலுக்கே தமது வாக்குகளைச் செலுத்தி வந்தனர். இம்முறை முதற்தடவையாக காரைநகர் பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார். 05 உறுப்பினர்களைக் கொண்ட காரைநகர் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக இப்பகுதிகளில் உள்ள மக்கள் பிரதிநிதிகளும் பெரும் ஆர்வத்துடன் உள்ளனர்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாகத் தாம் விரும்பும் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடி வேட்பாளர் பட்டியலில் இடம் பிடிப்பதற்கான நடவடிக்கைகளிலும் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அத்துடன் வாக்காளர்களும் முதல் முறையாகத் தமது பிரதேச சபைக்குத் தேர்தல் நடை பெறவுள்ளமையால் மிகவும் ஆர்வத்துடன் காணப்படுகின்றனர்.

காரைநகர் பிரதேச சபையும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவும், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இந்து கலாசார அமைச்சருமான அமரர் தியாகராசா மகேஸ்வரனின் முயற்சியினால் உருவாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-86)

# யாழ்.கல்வி வலயங்களில் பௌர்ணமி விழாவுக்கு ஏற்பாடு

வலி.வடக்கு, ஜன.19

வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நீண்டகால இடைவெளியின் பின்னர் பௌர்ணமி விழா கொண்டாடப்படவுள்ளது. மாதாந்தம் வரும் பௌர்ணமி நிகழ்வுகளை வட மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்கள் ஒவ்வொன்றிலும் நடத்துவது என்ற அடிப்படையில் முதலாவது பௌர்ணமி விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெறுகின்றது.

உடுவில் மகளிர் கல்லூரியில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள்விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்கிறார்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின்குழுப்பாடல், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாற்று வலுவுள்ள மாணவரின் நிகழ்ச்சி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் சமூக நாடகமும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களின் தில்லானா, வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களின் இசை நடனம் என்பனவும் இந்த விழாவில் இடம்பெறும். (த-86)

# தங்கூசி வலை தடை மீனவர்கள் பாதிப்பு

சண்டிலிப்பாய், ஜன,19

தங்கூசித் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் இத் தொழிலையே நம்பி வாழ்ந்து வந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் வருமானமின்றி வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றார்கள். இவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபடுவதற்குக் கைகொடுத்து உதவுமாறு சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என்.பொன்னம்பலம் பொது அமைப்புகளைக் கோரியுள்ளார். மீனவர்கள் தங்கூசித் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதனால் கடல் வளம் அழிக்கப்படுவதுடன் மீன் உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது. இதனால் எதிர்காலங்களில் மீனவர்கள் மட்டுமன்றி பாவனையாளர்களுக்கும் பெரிய பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் வளத்தையும் மீன்உற்பத்தியையும் பாதுகாக்கும் நோக்குடன் அரசு தங்கூசித் தொழிலுக்குத் தடை விதித்துள்ளது. நவாலி, நாவந்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மீனவர்கள் தொழிலின்றி வருமானமின்றி வீடுகளில் முடங்கிக்கிடக்கின்றார்கள். எனவே பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு இவர்கள் மாற்றுத் தொழிலில் ஈடுபடுவதற்கு பொது நிறுவனங்கள் உதவவேண்டும் எனச் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (த-115)

முதியவருக்குக் கௌரவம்...



வழங்கல்: தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு மானிப்பாய் சத்திய சாயி சேவா மன்றத்தினரால் நவாலி கிழக்கு முதியோர் சங்கத்துக்கு பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் அன்னதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சத்திய சாயி சேவாமன்றத்தின் வட பிராந்திய இணைப்புக்குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட முன்னாள் நீதிபதியுமான இரா.வசந்தசேனன் பெண்ணொருவருக்கு பொங்கல் பொருள்களை வழங்குகிறார். (100)

# அடிப்படை வசதியின்றி மணியந்தோட்ட மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். மணியம் தோட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என தெரிவிக்கின்றனர்.

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் அவர்களின் குடியிருப்புகளில் மழை ஒழுக்கு போன்ற காரணங்களால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களால் அண்மையில் இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களில் சிலர் மீண்டும் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிச் சென்றுள்ளனர்.

அதேவேளை இந்தப்பகுதியில் நூளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

இதனால் பல் வேறு நோய்களுக்குள்ளாகும் அபாய நிலையை தாம் எதிர்நோக்கியுள்ளதாக அந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க இந்தப் பிரதேசத்தில் தேங்கி நின்ற வெள்ளத்தை வாய்க்கால் அமைத்து அகற்றும் பணிகளும் நடை பெற்று வருகின்றன. (201-26)

# தொலைபேசிகளின் பிரதேசக் குறியீடு மாற்றம்

## வலி.கிழக்குப் பகுதியில்

யாழ்ப்பாணம் ஜன,19

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினால் கோப்பாய், நீர்வேலி, இருபாலை ஆகிய பகுதிகளுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களின் பிரதேசக் குறியீட்டு இலக்கங்கள் மாற்றப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இதற்கமைய பல இடங்களுக்குக் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுவருவதுடன் புதிதாகப் பரிவர்த்தனை நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கோப்பாய், நீர்வேலி, இருபாலை ஆகிய பகுதிகளுக்கென அப்பகுதியில் பரிவர்த்தனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் இதனூடாக வழங்கப்பப்படுகின்றன.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கான பிரதேசக்குறியீட்டு இலக்கமும் மாற்றப்பட்டுள்ளது.

இது வரை காலமும் 021 222XXXX என்ற வகையில் அமைந்திருந்த தொலை பேசி இலக்கங்கள் இப்போது 021 223 XXXX என்றவாறு மாற்றப்பட்டுள்ளதாகவும், சிலருக்குப் பிரதேசக்குறியீட்டு இலக்கத்துடன் அதற்குப் பின்னால் வரும் இலக்கங்களும் மாற்றப்பட்டுள்ளதாகவும் ரெலிக்கொம் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-26)

# பழைய இடத்தில் கிளினிக்குகள்

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை கிளினிக்குகள் கடந்த 15 ஆம் திகதி முதல் முன்பு நடைபெற்ற வெளிநோயாளர் பிரிவில் இயங்குகின்றன. வைத்திய அதிகாரிகளுக்கு கிளினிக் நடத்தக் கூடிய தனித்தனி அலகுகள் அபிவிருத்திச் சபையால் வழங்கப்பட்டுள்ளன. மேல்மாடியில் இடம்பெற்ற கிளினிக்குகளால் இதய நோயாளர்கள், வயோதிபர்கள் சிரமங்களை எதிர் நோக்கியமை குறிப்பிடத்தக்கது. (201-207)

# இளைஞர் ஒன்றியத்தால் கிழக்கு மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,ஜன. 19

உரும்பிராய் கிழக்கு பாரதிதாசன், ஊரெழு கிழக்கு வளர்பிறை ஆகிய இரு சனசமூக நிலையங்களின் இளைஞர் ஒன்றியம் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணப் பொருள்களை இன்று புதன்கிழமை வழங்கவுள்ளது. மயிலங்காடு- ஞானகலா, மல்லாகம் ஸ்ரீ முருகன், புத்தூர் கிழக்கு கலைமதி, மயிலணி வளர்பிறை , ஆனந்தகானம் சர்வசக்தி, பூலசிட்டி வினோஜி, அச்செழு வளர்மதி ஆகிய சனசமூக நிலையங்கள் ஊடாக அந்தந்தப் பகுதி மக்களிடம் இருந்து மேற்படி நிவாரணப் பொருள்கள் சேகரிக் கப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபா நிதியும் 2 லட்சம் பெறு மதியான வேறு பல நிவாரணப் பொருள்களும் இன்றையதினம் நேரில் சென்று கையளிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-103)

# கடலில் வீசப்பட்ட வலைகள் திருட்டு

சண்டிலிப்பாய், ஜன,19

நண்டு பிடிப்பதற்காக கடலில் போடப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளும் நண்டும் இரவோடு இரவாகத் திருடப்பட்டுள்ளன.

இதனால் வலைகளை இழந்த மீனவர்கள் தொழில் செய்ய முடியாது திண்டாடுகின்றார்கள்.

குடாநாட்டில் பிடிக்கப்படும் நண்டுகள் தற்பொழுது தென் இலங்கைக்கு மட்டுமல்ல வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுவதால் நண்டுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் விலையும் அதிகரித்துள்ளது.

இங்குள்ள வியாபாரிகளும் கொழும்பிலிருந்து வரும் வியாபாரிகளும் மீனவர்களிடமிருந்து போட்டி போட்டுக்கொண்டு நண்டுகளை வாங்கி வருகின்றனர்.

நண்டுக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியைத் தொடர்ந்து பல கடற்றொழிலாளர்கள் நண்டு பிடிப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதே வேளை சாவல்கட்டு, நவாலி, காக்கைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இரணை தீவுக்கடலிலும் கல்முனை பேத்தான்தீவுக் கடலிலும் நண்டு பிடிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் நண்டு பிடிப்பதற்காக மீனவர்களால் கடலில் போடப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான நூற்றுக் கணக்கான வலைகளும் நண்டுகளும் இரவோடு இரவாகத் திருடப்பட்டுள்ளன.

இவை தொடர்ந்து திருடப்பட்டுவருவதால் தொழிலாளர்கள் கடற்தொழி லுக்குச் செல்ல அச்சமடைந்து வருகின்றனர். (201-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறால் பிடிப்பதற்குத் தடை; கூட்டுறவுச் சமாசம் தகவல்

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக் குட்பட்ட சிறுகடல் பகுதிகளில் இறால் கூடு கட்டுதல், இறால் பிடிப்பது என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகச் சமாசம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாசத்தின் எல்லைக்கு உட் பட்ட தட்டுவன் கொட்டி, கண் டாவளை, ஊரியான், சுண்டிக் குளம், ஆனையிறவு உள்ளிட்ட கடல் பகுதிகளிலேயே மேற்படி தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

தற்போது சில கடல் தொழிலா ளர்கள் இறால் கூடுகட்டி இறால் களைப் பிடித்து வருகிறார்கள். இவர்கள் தாம் பிடிக்கும் இறால் களில் பெரியவற்றை எடுத்து விட்டு மீதியாகவுள்ள இறால் குஞ்சுகளை வீசிவிட்டுச் செல் கின்றனர். இது ஒரு அநியாய மான செயலாகும்.

இறால் குஞ்சுகள் வளர்ச்சிய டைந்து உரிய பருவத்தினை அடைவதற்கு மாசி அல்லது பங்குனி மாதம் வரை எடுக்கும். அதன் பின்னர்தான் இறால் பிடிப் பதற்கான அனுமதி வழங்கப் படும். இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படுமெனவும் சமாசத்தின் அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 07 ஆம் திகதி தரும புரம் பொதுமண்டபத்தில் கரைச்சி வடக்கு கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இத் தீர்மானங் கள் எடுக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமாச எல்லைக்குட்பட்ட ஏழு கடற் றொழில் கூட்டுறவுச் சங்கங் களைச் சேர்ந்த அங்கத்தவர்கள், பொதுமக்களெனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)

## சேமிப்பே உயர்வு...




விலகும் திரை: கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் பெயர்ப் பலகையை வங்கி நிலையத்தின் வடக்கு, கிழக்கு வலய முகாமை யாளர் திரை நீக்கம் செய்து வைக்கின்றார். (7)

# நெல்லை விற்க முடியாது திண்டாட்டம்

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத்தீவு மாவட்டத் தில் கூட்டுறவுச் சங்கங்கள் உரிய வேளையில் நெல்லைக் கொள்வனவு செய்யாததால் விவசாயிகள் பாதிப்பை எதிர் கொள்கின்றனர்.

கடந்த சிறுபோகத்தின் போதும் இந்த நிலையே காணப் பட்டதாக விவசாயிகள் குறைப் படுகின்றனர். விவசாயிகள் 75 கிலோ நெல்லை 1200 ரூபாவில் இருந்து 1300 ரூபா வரையான விலைக்கே விற்பனை செய்ய வேண்டிய நிலையில் இருந் தனர். சிலர் தமது வேளாண் மைச் செலவினை ஈடுசெய்யு முகமாக 900 ரூபாவுக்குக்கூட நெல்லை விற்றுள்ளனர். கூட்டு றவுச் சங்கங்கள் நெல்லைக் கொள்வனவு செய்வதில் ஆர் வம் காட்டாமையே இதற்குக் காரணமாகும். தனியார் வர்த்த கர்கள் தாம் நினைத்தவாறு விலையை நிர்ணயம் செய்வ தால் விவசாயிகள் நட்டமடைய வேண்டியிருக்கின்றது.

ஆகவே கூட்டுறவுச் சங்கங் கள் நெல்லைக் கொள்வனவு செய்தால் விவசாயிகள் நெல் லுக்கு நல்ல விலையினைப் பெறமுடியும். அத்துடன் தனி யார் வர்த்தகர்களின் ஆதிக்க மும் இல்லாதொழிக்கப்படும்.

தற்போது சிறுபோக நெல் லைக் கையிருப்பில் வைத்தி ருக்கும் விவசாயிகள் தமக்குத் தேவையான விவசாய உள்ளீடு களைப் பெறும் பொருட்டு 75 கிலோ நெல்லை 1200 ரூபாவுக்கே விற்பனை செய்கின்றனர். இது தற்போதைய நிலையில் மிக வும் குறைந்த விலையாகும். காலபோக அறுவடை ஆரம்பிக் கும் போது இதில் மேலும் வீழ்ச்சி யேற்படும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே இவற்றைக் கருத் தில் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் நியாயமான விலை யில் நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டுமென்பதே விவ சாயிகளின் கோரிக்கையாகும். (க-500)

# அடிப்படை வசதிகளின்றி பரந்தன் பொதுச்சந்தை

கிளிநொச்சி, ஜன.19

பரந்தன் பொதுச்சந்தை அடிப்படை வசதிகள் எதுவு மின்றிக் காணப்படுவதால் வியாபாரிகளும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்கொள் வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிர தேச சபையின் நிர்வாகத்தின் கீழ் பரந்தன் பொதுச்சந்தை இயங்கி வருகின்றது.

இதில் 12 இற்கும் மேற் பட்ட மரக்கறி வியாபாரிகளும் ஐந்து வெற்றிலை வியாபாரி களும் மீன், இறைச்சி, பலச ரக்கு மற்றும் இதர வியாபார நடவடிக்கையில் 30 இற்கும் மேற்பட்ட வியாபாரிகளும் ஈடு பட்டுள்ளனர். தினமும் ஏராள மான பொதுமக்கள் தமக்குத் தேவையானவற்றை வாங்குவ தற்காக இங்கு வந்து செல்கின் றனர்.

ஆனால் இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதி களான பொதுச்சந்தைக்கான கட்டட வசதிகள், பொதுக் கிணறு, கழிப்பறைகள் ஏதுமின் றிச் சந்தை காணப்படுகின்றது. இதனால் சந்தை வியாபாரி களும் நுகர்வோரும் தினமும் சிரமங்களுக்கு ஆளாகி வரு கின்றனர்.

கரைச்சிப் பிரதேச சபையி னர் சந்தையில் காணப்படும் குறைபாடுகளைக் களைவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்படு பவர்கள் தெரிவிக்கின்றனர். (க-6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 ★ 02 ★ 1944



மறைவு 19 ★ 01 ★ 2008

அமரர் இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்

அன்பின் திருவுருவமே அணையாத தீபமே
பண்பின் உறைவிடமே
வாழ்வில் விளக்கு ஏற்றிவைத்த எங்கள் குடும்ப விளக்கே!
மூன்று ஆண்டுகள் முடிந்தாலும் என்றும்
எங்களுடன் வாழும் உங்கள் நினைவுகள்.

''மேரி இல்லம்'',
கரவெட்டி,
வதிரி.

குடும்பத்தினர்.
(மனைவி, பிள்ளைகள்)

# முரசுமோட்டை பாடசாலையில் சிரமதானம்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயப் பகுதிகள் பெற்றோர்களால் சிரம தானம் மூலம் துப்புரவு செய்யப் பட்டுள்ளன .

இந்தப் பாடசாலையின் வகுப் பறைகள் அமைந்துள்ள கட்டடத் தொகுதிகள், பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகள் என்ப னவே இவ்வாறு பெற்றோர் களால் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இருந்தும் சில பெற்றோர்கள் இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டதாகவும் தெரி விக்கப்படுகின்றன. பொது விட யங்களில் வேறுபாடுகளை வெளிக்காட்டாது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் எந்தக் காரியத்தையும் இலகு வில் நிறைவேற்றி வைக்க முடியுமெனப் பலரும் கருத்து வெளியிட்டனர். (க-6)

# இல்லாத பதிவுதாரர்

ஒட்டுசுட்டான், ஜன.19

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கான பிறப்பு, இறப்புப் பதிவுதாரர் இது வரை நியமிக்கப்ப டாததால் இப்பகுதி மக்கள் சிரமங்க ளுக்கு ஆளாகி வரு வதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந் தப் பகுதிக்கான பதிவுதாரராக இருந் தவர் யுத்தத்தின் போது ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஆனால் மக் கள் மீள்குடிய மர்ந்து பல மாதங் கள் கடந்து விட்ட நிலையிலும் இவ ரது இடத்துக்குப் பதிலாக எவரும் நியமிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். (க-500)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கனகரத்தினம் அமிர்தலிங்கம்

எமது ஆலயத்தில் கடந்த காலத்தில் தர்ம கர்த்தா சபை உறுப்பினராகவும் செயலாளரா கவும் இருந்து ஆலய வளர்ச்சியில் தன்னலம் இல்லாத தொண்டாற்றி 20.12.2010 இல் அமரத்துவம் அடைந்த அமரர் கனகரத் தினம் அமிர்தலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக்காக அம்பாள் தாழ் வணங்கித் துய ருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலை களை அர்ப்பணிக்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்.

சண்டிலிப்பாய்.
(109383)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அருளம்பலம் இராசம்மா

மலர்வு 23.06.1934

உதிர்வு 22.12.2010

அன்பை எமக்கு அளித்து - எம்
வாழ்க்கையை ஒளியேற்றி வைத்தீர்களே அம்மா!
அணையா தீபமாக எம் நெஞ்சில் - உங்கள்
நினைவுகள் என்றும் நிலைத்து இருக்கும்
பாரினிலே உங்கள் பாசத்தை யாருமிங்கு
ஈடுசெய்ய முடியாது - எங்கள்அன்புத் தீபமே அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'அருள் ஆனந்தவாசா',
இணுவில் தெற்கு.

(109295)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேர பஸ் சேவை இன்றி கண்டாவளை மக்கள் அவலம்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்திற்கான பயணிகள் பேருந்து சேவை தினமும் பிற்பகல் 5 மணியுடன் நிறுத்தப்படுவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் தற்போது 368 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இவர்கள் தமது அலுவல்களின் பொருட்டு தினமும் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையுடையவர்களாக உள்ளனர். ஆனால் கண்டாவளை வெளிக்கண்டல் சந்தியில் இருந்து கண்டாவளைக் கிராமத்துக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பேருந்துகளும் அரச பேருந்துகளும் பிற்பகல் 5 மணியுடன் தமது சேவைகளை நிறுத்திக்கொள்கின்றன. இதனாலேயே இந்தக் கிராம மக்கள் பெரும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் வெளியிடங்களுக்குச் செல்லும் மக்கள் தமது வேலைகளை அரைகுறையுடன் நிறுத்திவிட்டு அவசர அவசரமாகப் பேருந்துகளைப் பிடிப்பதற்கு விரையவேண்டிய நிலையிலுள்ளனர்.

சில வேளைகளில் பேருந்துகளை இவர்கள் தவறவிடுவதுமுண்டு. அந்தவேளையில் வெளிக்கண்டல் சந்தியிலிருந்து கண்டாவளைக் கிராமத்துக்குக் கால்நடையாகவோ அல்லது அதிக கட்டணம் செலுத்த தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தியோ செல்ல வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

யுத்தம் முடிந்து அமைதி திரும்பியுள்ளதாகக் கூறப்படும் இந்த நாள்களில் 5 மணிக்குள் பேருந்து சேவைகளை நிறுத்திவிடுவது என்பது இந்தக் கிராம மக்களைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

எனவே போக்குவரத்துக்குப் பொறுப்பானவர்கள் இந்த நிலைமையைச் சிந்தித்து உரிய முடிவெடுத்து பேருந்துகளின் நேரத்தை நீடிக்க வேண்டுமென்பதே இந்தக் கிராம மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக உள்ளது.

(க-6)

# பாடசாலை செல்லாத சிறுவர் இரும்பு வியாபாரத்தில்

கிளிநொச்சி, ஜன.19

மீள்குடியமர்ந்துத கிளிநொச்சியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியிலும் அதிகளவான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

வாழ்வாதாரங்கள் யாவும் அழிக்கப்பட்ட நிலையில் மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் அதிகளவான மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர். இதனால் பொருளாதார நிலையில் தமது குடும்பங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கிளிநொச்சி நகரை அண்டியுள்ள கிராமப்புறங்களில் உள்ள சிறுவர்களும், முல்லைத்தீவு விசுவமடுவின் நாச்சிக்குடா, தருமபுரம், நெத்தலியாறு, தேராவில், றெட்பானா ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட சிறுவர்களும் இரும்பு, அலுமினியம், பித்தளை என்பவற்றை வீடு வீடாகச் சென்று சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

சில வேளைகளில் அளவுக்கதிகமான இத்தகைய பொருள்களைச் சைக்கிள்களில் ஏற்றித் தமது உடலை வருத்திய வண்ணம் சைக்கிளை உருட்டிச் செல்வதனைப் பார்க்கும்போது பரிதாபமாக உள்ளது. இத்தகைய சிறுவர்களில் அனேகமானோர் தமது தந்தையை இழந்தவர்களாகவும், வறுமையான குடும்பநிலையில் வறுமையில் உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர்.

உரியவர்கள் இந்தச் சிறுவர் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உதவி செய்யாதுவிடில் இவர்களின் நிலை தொடர்கதையாகவே நீடிக்குமெனப் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். (க-6)

# கிளிநொச்சியில் முதியோர் சங்கம்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சி, கண்டாவளை ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் உள்ள முதியோர்கள் ஒன்றுகூடித் தமக்கென முதியோர் சங்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கிராம அலுவலர் நந்தகுமார் தலைமையில் இந்தச் சங்கத்துக்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதியோர் சங்கத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. இதில் தலைவர், செயலாளர் உட்படப் பத்துப்பேர் நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

முதியோர்களுக்கான உதவிகள் சரிவரக்கிடைக்க வேண்டும். அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் முதியோர்களை ஒன்று திரட்டி இந்த முதியோர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஊரியான் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் கலந்துகொண்டனர். (க-6)

## கருமமே கண்ணாக...



முன்பள்ளிக்கு விடிவு: காசுக்கான வேலைத்திட்டத்தில் இராமநாதபுரம் கிரோ முன்பள்ளி வளாகம் துப்புரவு செய்யப்படுகின்றது. (405)

# நிதிப்பற்றாக்குறையால் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லை

முல்லைத்தீவு, ஜன்.18

நிதிப் பற்றாக்குறை நிலவுவதால் எரிபொருள் நிலையத்தை அமைக்க முடியவில்லையென முத்துஐயன்கட்டுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது சங்கம் மோசமான அழிவைச் சந்தித்தது. இதனால் அதிலிருந்து தற்போதும் மீளமுடியாத நிலையே தொடர்கின்றது. குறிப்பாக நிதிப் பற்றாக் குறை என்பது பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால் எரிபொருள் நிலையமொன்றை அமைப்பதில் தாமதம் ஏற்படுகின்றது. ஆகவேதான் தற் போது பரல்களின் மூலமாக எண்ணெய் விநியோகம் நடைபெற்று வருகின்றது. மேலும் பொருத்தமானதொரு இடம் கிடைக்குமிடத்து சங்கத்தின் நிதிநிலைமையையும் கருத்தில் கொண்டு எரிபொருள் நிலையமொன்று அமைக்க முடியும். தற்போது எரிபொருள் விநியோ கத்தால் சங்கத்துக்கு வருவாய் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

(க-500)

# பூர்த்தியாகின குளக்கட்டு வேலைகள்; இரு ஆண்டுகளாகியும் கொடுப்பனவு இல்லை

முல்லைத்தீவு, ஜன.19

உலக உணவுத் திட்டத்தின் கீழ் 2009 ஆம் ஆண்டில் குளக்கட்டு வேலைகளில் ஈடுபட்ட ஒட்டுசுட்டான் மக்களுக்கு இதற்கான உலர் உணவுப் பொருள்கள் இதுவரை வழங்கப்படவில்லையென இந்த மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கற்சிலைமடுப் பெரிய குளம், பிராமணகுள குளக்கட்டு ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் மக்களின் உதவியுடன் செய்து முடிக்கப்பட்டன. ஆனால் இதற்குரிய உலர் உணவுப் பொருள்கள் வேலைகள் முடிவுற்றுச் சுமார் இருவருடங்கள் கழிந்து விட்ட நிலையிலும் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தின் ஊடாகவே குளக்கட்டு வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. கிராம மக்கள் வயது வேறுபாடின்றி காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரையும் இந்த வேலைகளில் ஈடுபட்டனர். அத்துடன் உழவு இயந்திர உரிமையாளர்களும் தமது பணத்தில் எரிபொருளை நிரப்பி மண் நிரப்பும் வேலைகளில் ஈடுபட்டனர். ஆனால் இவர்களுக்கும் ஒன்றுமே வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரிடம் கேட்டபோது செய்த வேலைக்கான உலர் உணவுகள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். ஆனால் இதுவரை வழங்கப்படவில்லை.

ஏறக்குறைய 15 ஆயிரம் மனித வலுமூலம் குளக்கட்டு வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. ஆனால் கொடுப்பனவுகள் ஏதும் இல்லை.

எனவே இந்தக் கிராம மக்களின் வாழ்வாதார நிலையினைக் கருத்தில் கொண்டு உலக உணவுத் திட்டத்தினர் தமக்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-500)

# கடை உடைத்து திருட்டு

முல்லைத்தீவு, ஜன.19

கிளிநொச்சியில் முரசுமோட்டைப் பகுதியிலுள்ள தனியார் வர்த்தக நிலையமொன்று உடைக்கப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இந்த வர்த்தக நிலையத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு ஒரு தொகைப் பணம், தொலைபேசி அட்டைகள், சிகரெட் என்பன களவாடப்பட்டுள்ளன.

கிளிநொச்சிப் பொலிஸார் இக்களவு தொடர்பாக இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். (க-6)

# பெரு மழையால் முல்லையிலும் கால்நடைகள் இறப்பு

முல்லைத்தீவு, ஜன.19

தொடரும் மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, சமனங்குளம், முத்துஐயன்கட்டுக் கிராம மக்கள் கால்நடை வளர்ப்பில் மிக்க ஆர்வமுடையவர்கள். அனேகமாக ஒவ்வொருவரும் 200 இற்கும் மேற்பட்ட கால்நடைகளைப் பராமரித்து வருகின்றமை வழக்கம். கால்நடைகள் மூலம் கிடைக்கும் பாலை விற்பனை செய்வதன் மூலம் இவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர்.

ஆனால் தற்போது தொடர்ந்து பெய்யும் கடும் மழை காரணமாகக் கால்நடைகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 400 கால்நடைகள் மழை காரணமாக இறந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக இளங்கன்றுகள் அதிக இறப்பினைச் சந்தித்துள்ளன.

தொடரும் மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளதால் இறந்த கால்நடைகளை எரிக்கவோ அல்லது புதைக்கவோ இயலாத நிலையில் கால்நடை வளர்ப்போர் உள்ளனர்.

இதனால் அவற்றின் உடல்கள் ஆங்காங்கே புதைக்கப்படாது காணப்படுவதால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கின்றது. மேலும் மேய்ச்சல் நிலங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால் கால்நடைகள் உணவின்றியும் கஸ்ரப்படுகின்றனர். இத்தகைய நிலைகளால் முல்லை மாவட்ட கால்நடை வளர்ப்போர் மிகுந்த மனக்கவலை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பூநகரியில் ஏற்கனவே மாடுகள் இவ்வாறு மாடுக்கள் உயிரிழந்திருந்தன. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலத்தில் இளைஞனின் சடலம்

பசறை, ஜன.19

பசறை, கனவரல்ல கொட்டு காதன்ன பகுதிப் பாலம் ஒன்றுக்கு அடியிலிருந்து வெட்டுக் காயங்களுக்குள்ளான இளைஞர் ஒருவரின் சடலத்தை பசறை பொலிஸார் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீட்டுள்ளனர்.

கணேசன் விஜயசுந்தரம் (வயது-32) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொட்டுகாதன்ன வைத்தியசாலையை அண்மித்துள்ள தேயிலைத் தோட்டத்தின் மத்திய பாலத்திற்குள் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ளி)

## 5 சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்தி விடுமுறைக் காலத்தை ஈடுசெய்யப் பணிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக ஒருவாரம் விடுமுறை வழங்கப்பட்ட மத்திய மாகாணப் பாடசாலைகள் நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பமாகின.

இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்ட ஐந்து தினங்களுக்குப் பதிலாக வேறு ஐந்து தினங்களில் பாடசாலைகள் நடத்தப்பட வேண்டும்என மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதன்பொருட்டு எதிர் வீரும் ஐந்து சனிக்கிழமைகளில் பாடசாலைகளை நடத்துமாறு மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் விஜேசிரி ஹேரத் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி சுற்றுநிருபம் மத்திய மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுநிருபத்தின் படி எதிர்வரும் 22 ஆம் , 5ஆம் , 19ஆம் திகதி ,எதிர்வரும் மார்ச் 3 ஆம், 26 திகதிகளில் வரும் ஐந்து சனிக்கிழமைகளிலும் பாடசாலைகளை நடத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ளி)

## மரக்கறிச் செய்கை பாதிப்பு

மாத்தளை மாவட்டத்தில் மழை காரணமாக தோட்டங்களில் மரக்கறிச் செடிகள் முற்றாக அழிந்துபோயுள்ளன.

வங்கிகளில் கடன் பெற்று விவசாயத்தை மேற்கொண்டுள்ள பிரதேச விவசாயிகள் பயிர்வகைகள் அனைத்தும் அழிவடைந்துவிட்டதால் திண்டாடுகின்றனர்.போஞ்சி, வெண்டிக்காய், கத்தரிக்காய், முள்ளங்கி போன்ற பயிர்வகைகளே அழிவடைந்துள்ளன. (ளி)

## உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக மலையக மக்கள் முன்னணி இன்று அறிவிக்கும்

நுவரெலியா, ஜன.19

எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான இறுதி முடிவு இன்று புதன்கிழமை அறிவிக்கப்படும் என மலையக மக்கள் முன்னணியின் உபதலைவரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான அ.அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இது தொடர்பான கலந்துரையாடலொன்று தலவாக்கலையில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் கட்சித் தலைவி சாந்தினி தேவி சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தனித்தா, கூட்டுச் சேர்ந்தா அல்லது ஆளும் கட்சியுடன் இணைந்தா போட்டியிடுவது என்பது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக இன்று நடைபெறும் கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டது - என்றும் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார். (ளி)

## மஸ்கெலியா நகர நுழைவாயில் வீதியை செப்பனிட்டுத் தருமாறு மக்கள் கோரிக்கை

நுவரெலியா, ஜன.19

மஸ்கெலியா நகரத்தின் பிரதான நுழைவாயில் - பொலிஸ் நிலையத்துக்கு முன்னாள் உள்ள வீதி சேதமடைந்து குண்டும் குழியுமாகக் கிடப்பதால் பொது மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் அடிக்கடி மழைபெய்து வருவதால் இங்குள்ள குழிகளில் எந்தநேரமும் சகதிநீர் தேங்கி நிற்கின்றது.இதனால் வாகனச்சாரதிகளும் பாதசாரிகளும் வீதியில் பயணம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வாகனங்களால் வீசியடிக்கும் அசுத்த நீர் மாணவர்களின் சீருடைகளை அழுக்கடையச் செய்வதால் அவர்கள் பெரும் அவஸ்தைப்படுகின்றனர்.

எனவே வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்படி வீதியைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

## வேட்டையாடச் சென்ற குடும்பஸ்தர் துப்பாக்கி வெடித்துப் பரிதாப மரணம்

தம்புள்ள - அபகனத்த காட்டுக்கு வேட்டையாடச் சென்ற வேளையில் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த நபர் சம்பவதினம் தனது நண்பருடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்ற வேளையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேவலவெள பகுதியைச் சேர்ந்த 2பிள்ளைகளின் தந்தையான ஏ.ஜி.திசாநாயக்க(வயது-37) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவர்; இவரது சடலம் தம்புள்ள வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுப் பின்னர் விசேட பிரேத பரிசோதனைக்காக மாத்தளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. (ளி)


### வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
### கூறுவிலை கோரல்

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு தேவைப்படும் அலுவலகப் பாவனைப் பொருள்கள், காகிதாதி வகைகள் (Stationery) வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்படும் செயலமர்வுகள், பயிற்சிப்பட்டறைகள், பரீட்சைகளுக்கான வினாப்பத்திரங்கள், செய்கைத்தாள்கள் என்பவற்றினை அச்சுப்பிரதிசெய்தல், நிழற்பிரதி எடுத்தல் மற்றும் பயிற்சிப் பட்டறைகள், செயலமர்வுகள், விழாக்களுக்கு காலை, மாலை , மதியஉணவு மற்றும் சிற்றுண்டிகள், குளிர்பானம் (சோடா, ஐஸ்கிறீம்) என்பவற்றை வழங்குதல் மற்றும் கணினி உபகரணங்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள், மின்சார சாதனங்கள் பழுது பார்த்தல் என்பவற்றுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

எனவே கூறு விலைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கூறுவிலைப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் (நிதிக்கிளையில்) எதிர்வரும் 26.01.2011 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று 03.02.2011ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம். ஆ. இராஜேந்திரன்,
2011.01.18 (சி/574979) வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம்.



### கடைத்தொகுதி வாடகைக்குண்டு

கோண்டாவில் கிழக்கு சந்தியில் கடைத்தொகுதி வாடகைக்குண்டு. வங்கி, நகைக்கடை, புடைவைக்கடை, பார்மசி, Food City, Net Cafe தனியார் வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு உகந்தது.

தொடர்பு: 0772837273



### 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி தம்பிஐயா நாகம்மா

(பரராசசிங்கம்)

தோற்றம் 10.05.1930

மறைவு 28.01.2002

ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உங்கள்நினைவுகள்
எம்மைவிட்டுப் பிரியாது.

இணுவில் மேற்கு,
இணுவில். (109463) குடும்பத்தினர்.



### மரண அறிவித்தல்

#### திருமதி எலிசபேத் பிரகாசம்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட எல்சி (எலிசபேத்) ஆபேல் பிரகாசம் 13.01.2011 லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற ஆபேல் பிரகாசத்தின் (Manager, Lake House, Jaffna Branch) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பிரகாசம், தம்பிராசா (சின்னப்பு மாஸ்டர்), அன்னம்மா, சிங்கராயர் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜோய், றோஸ் மற்றும் ஐறின் (யாழ்ப்பாணம்) ஜொய்சி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாளிக்கா, வசந்தி, அகஸ்ரின், மேவின் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரானியா, நிரோஷன், ஏஷியா, கனோளா லவண்யா, ஜொஷ்வா ஆகியோரின் பேர்த்தியும், ராசியா, ரெஷான் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (20.01.2011) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஐறின் அகஸ்ரின்
(அருட்தந்தை த.ஜெபேல் கிருபாகரன்)

5/7, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்



### வேலை வாய்ப்பு

Direct Marketing International Company யின் இரண்டாவது கிளைக்குப் பின்வருவோர் தேவை.
Supervisor, Asst. manager, manager 6 மாத காலப் பயிற்சி, பயிற்சியின்போது 15000/= - 45000/= வரை பெறமுடியும்.
வயதெல்லை 18 - 23 வரை.
தங்குமிட வசதி இலவசம்
தகைமை: O/L சாதாரண தரம், ஆங்கில அறிவு அவசியம். 12 பேர் மட்டும் தேவை.
தொடர்பு: 0777397734, 0771363797



### கணினி விற்பனைக்கு

P-IV, 2.4GHZ முழுமையான கணினி ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. விலை 18,750/= மற்றும் கணினி சம்பந்தமான Printer, UPS, Dongle, Pendrive, I-3 LapTop, I-3 Desktop, Dualcore கணினிகள் என்பனவும் மலிவு விலையில் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: Sky Computer System
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(டேவிட் பீரிஸ் முன்பாக) 021 222 1417.



### ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான தடுப்பூசிகள் ஏற்றப்பட்ட ஊர்க்குஞ்சுகள் (ஒரு நாள்/ ஒரு மாதம்) மொத்தமாகவும் சிறிய அளவுகளாகவும் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.மொத்தக் கொள்வனவுக்கு விநியோகம் இலவசம். (முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்படும்)
தொடர்பு: 0217200716, 0771341795



### கடைகள் விற்பனைக்கு

யாழ்.நகரின் மையப் பகுதியில் புதிதாகக் கட்டப்படும் கடைத் தொகுதியில் கடைகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0779998431, 0750434277



### மரண அறிவித்தல்

#### திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்துரை



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கச்சி சின்னத்துரை நேற்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துத்தம்பி - பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புஸ்பராணி (ஆசிரியை), பத்மாவதி மற்றும் செல்வறஞ்சிதம் (லீலா ரீச்சர்), லீலாவதி, புஸ்பரதி, ஜெகதாம் பிகை, சறோஜினி தேவி (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோக மேற்பார்வையாளர்), சாந்தாதேவி, நவசீலி, மீனலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பாலசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (வாத்தியார்), ஐயாக்குட்டி மற்றும் கனகலிங்கம் காலஞ்சென்ற அரசரத்தினம் (றிப்போட்டர்) மற்றும் இராசையா (துரையண்ணை) பரமகுரு, பாலசிங்கம், செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.01.2011 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

தகவல்: மருமகன் இராசையா
(துரையண்ணை), மெக்கானிக்கர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம் பாதித்த மக்களைச் சந்தித்தார் ரிஷாத்

கொழும்பு, ஜன. 19

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகள் குறித்துக் கண்டறியவென அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாருக், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் ஆகியோர் கடந்த சனிக்கிழமை பயணமான்றை மேற்கொண்டிருந்தனர்.

வாழைச்சேனை மத்தி மற்றும் ஓட்டமாவடி ஆகிய பகுதிகளில் தற்காலிக நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து அமைச்சர் அவர்களது தேவைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன்,

**தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள மக்கள் தமது சொந்தக் கிராமங்களில் தம்மை மீளக் குடியமர்த்த அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.**

அவர்களது தேவைகளுக்காக உதவுத் தொகையையும் அமைச்சர் வழங்கி வைத்தார்.

தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள், தங்களைச் சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேவேளை தமது வீடுகளில் உள்ள அனைத்துப் பொருள்களும் முற்றாக வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும் மற்றும் சேதமடைந்துமுள்ளன எனத் தெரிவித்த மக்கள், தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் வரை நிவாரண உதவிகளைப் பெற்றுத் தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

காத்தான்குடி, ஏறாவூர், வந்தாறுமூலை, மருதமுனை, கல்முனை ஆகிய பகுதிகளுக்கும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் விஜயம் செய்து மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்துகொண்டார்.

குறிப்பாக வெள்ளத்தினால் பல குடி தண்ணீர்க் கிணறுகள் அசுத்தமடைந்துள்ளன. வெள்ள நீர் வழிந்தோடாமல் இருக்கும் பகுதிகளை பெக்கோ கொண்டு நீரை வழிந்தோடச் செய்யும் பணிகளுக்கான நிதியை வழங்க வேண்டும் அம்பாறை மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கரவிடம் தொலைபேசி மூலம் அமைச்சர் பணிப் புரை வழங்கினார். (ஏி)

## திருமலையில் பல கிராமங்களுக்கு நிவாரணம் கிட்டவில்லை

திருகோணமலை,ஜன19

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களுக்கு இதுவரை நிவாரணப் பொருள்கள் வந்தடையவில்லை என கவலை தெரிவிக்கப்படுகிறது.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நெடுந்தீவு, சம்மாவஜ்ஜதீவு, பூவரசந்தீவு, குரங்கு பாஞ்சான், கிரான், சின்னக் கிரான், ஈச்சந்தீவு ஆகியவை உட்பட பல தீவுகளுக்கு முழுமையாக நிவாரணப் பொருள்கள் வந்து சேரவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த மக்களைச் சந்திப்பதற்கான தரை வழிப் போக்குவரத்து தற்பொழுது ஓரளவுக்கு சுமுக நிலையை அடைந்துள்ளது. (ஏி)

## இந்தியாவிலிருந்து இரு கப்பல்களில் மேலும் உதவி

மட்டக்களப்பு, ஜன. 19

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கவென இந்தியாவில் இருந்து மேலும் இரண்டு கப்பல்களில் நிவாரணப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

முதலாவது தொகுதி நிவாரணப்பொருட்கள் அண்மையில் விமானத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன் இரண்டாவது தொகுதி நிவாரணம் இரண்டு கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன என இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே. காந்தா மட்டக்களப்பில் வைத்து தெரிவித்துள்ளார்.

விமானத்தில் கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருள்களை அரசிடம் ஒப்படைக்கும் போது இந்தியத் தூதர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமானம்....



உதவி: சம்மாந்துறையில் அடைமழையினால் முற்றாகப் பாதிக்கப்பட்ட 170 குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொதியை சீதனத்தை ஒழிக்கும் அமைப்பின் அனுசரணையுடன் சம்மாந்துறை இணைத்தள குழு வழங்கியது. இந்த நிவராணப் பொதியை பாதிக்கப்பட்டோருக்கு இணையத்தள பிரதம இயக்குநர் ஏ.ஜீ.எம். பிரோஸ், தலைவர் ஏ.எல்.எம்.நிப்றாஸ் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் வழங்குகின்றனர்.

## நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தில் 269 நலன்புரி நிலையங்கள் மூடப்பட்டு விட்டதாக மட்டக்களப்பு மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் இடம் பெயர்ந்தவர்களில் தற்போது 25 நலன்புரி நிலையங்களில் 2,782 குடும்பங்களைச் சேர்ந்த 10,949 பேர் தங்கியுள்ளனர். அத்துடன் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் 22,810 குடும்பங்களைச் சேர்ந்த 86,012பேர் தங்கியுள்ளனர்.

## கிழக்கில் வெள்ளத்தால் பல வீதிகள் கடும் சேதம்

மட்டக்களப்பு, ஜன.19

அடைமழையாலும், வெள்ளப் பெருக்காலும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்குச் சேதமடைந்துள்ளன.

வீதிகளில் வெள்ளம் தேங்கி நின்பதாலும், வீதிகள் ஊடாக வெள்ளம் பாய்ந்ததாலும் இவை சேதமடைந்துள்ளன.

பல வீதிகள் பயணிக்க முடியாத அளவுக்கு உடைந்தும் சிதைந்தும் உள்ளன.

சில இடங்களில் தற்பொழுதும் வெள்ளம் தேங்கியுள்ளது. அதனால் நுளம்பு உட்பட பல்வேறு நோய்க்கிருமிகள் பெருகும் அபாயம் எழுந்துள்ளது.

வெள்ளத்தை வெளியேற்றுவதற்கும் சுகாதார நலன்களைப் பேணுவதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் துரிதமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விசேட வைத்திய முகாம்கள் நிறுவப்பட்டு வைத்திய சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன், தொற்றுநோய், சுகாதார நெறிமுறைகள் ஆகியவை தொடர்பாகப் பொது மக்களுக்கு அறிவூட்டல் நிகழ்ச்சியும் நடத்தப்பட வேண்டும் என்றும் மக்கள் கோருகிறார்கள்.

சுகாதாரத் திணைக்களம், பொது நல அமைப்புகள், அரச, அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-21)

## நீர்முகாமைத்துவ அமைச்சர் அம்பாறைக்கு வருகை

அம்பாறை, ஜன்.19

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கடந்த ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார். அமைச்சர் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குளங்கள், அணைக்கட்டுகள் ஆகியவற்றையும் பார்வையிட்டார். பாதிக்கப்பட்டுள்ள அணைக் கட்டுகளையும் குளங்களையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சருடன், சிரேஷ்ட அமைச்சர் பீ.தயாரட்ன, அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, நாடாளுமன்ற உறுப்பின்ர் சிறியானி விஜேவிக்கிரம, கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வை, ஆகியோரும் வந்திருந்தனர். (ஏி)

## மருதமுனை மக்களுக்கு உதவி

மட்டக்களப்பு, ஜன. 19

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மருத முனைப் பிரதேசத்திலுள்ள குடும்பங்களுக்குகிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். துல்கர் நயிம் உலர் உணவு நிவாரணப் பொதிகளை கடந்த சனிக்கிழமை வழங்கினார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் தஞ்சமடைந்திருந்த 232 குடும்பங்களைச் சேர்ந்த 951 பேருக்கு இந்த உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஏி)

## அம்பாறை தமிழ்க் கிராமங்களுக்கு தொழிலதிபர் ஒருவரும் பரோபகாரம்

அம்பாறை, ஜன.19

கொழும்பு வெள்ளவத்தையைச் சேர்ந்த 'ரிப்றொப்' போக்குவரத்து நிறுவன உரிமையாளரும், சமூக சேவையாளருமான வீ.வசந்தகுமார் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை நேரில் வருகை தந்து வழங்கினார்.

குறிப்பாக வளர்த்தாப்பிட்டி குளம், உடைப்பெடுத்தான் பெரும் பாதிப்புக்குள்ளான மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளர்த்தாப்பிட்டி மற்றும் கோரக் கோயில் முதலான தமிழ்க் கிராம மக்களுக்கு, தொண்டர்கள் சகிதம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நேரில் வருகை தந்த அவர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

மொத்தமாக நான்கு லட்சம் ரூபா பெறுமதியான 3,300 கிலோ உலர் உணவுப் பொருள்கள், தனித்தனியே பொதியிடப் பட்டும், கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வசந்தகுமார் முன்னிலையில் சீரான விநியோகமும் இடம்பெற்றது.

கல்முனை ஸ்ரீ அம்பலத்தடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாக்களுள் ஒருவரான கணபதிப்பிள்ளை கனகராஜா, கணபதிப்பிள்ளை பத்மநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்த நிவாரண விநியோகம் குறித்துப் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் திருப்தி தெரிவித்தனர். (ஓ-309)

## படுவான்கரையில் மோசமான பாதிப்பு 3,500 வீடுகள் முற்றாகச் சேதம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 3500இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில்ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக படுவான்கரை பிரதேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாக தெரிவித்த அவர், சுமார் 3500இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

முற்றாக சேதமான வீடுகளில் அதிகமான வீடுகள் களிமண்ணால் கட்டப்பட்ட வீடுகளென்பதுடன், வெள்ளம் வடிந்த பின்னரும் பல இடங்களில் வீடுகள் இடிந்துவிழுவதாகவும் பா.அரிய நேத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரியன் வெளியில் 103 குடும்பங்களும் மகிழ வட்டவானில் 42 குடும்பங்களும் இவ்வாறு உள்ளதாகவும் ஏனை பகுதிகளிலும் மக்கள் இன்னும் நலன்புரி நிலையங்களிலுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீந்தமிழ்போல் வாழியிவர் பன்னூறாண்டே

## சதாபிஷேக வாழ்த்து



**தம்பியப்பா சண்முகலிங்கம்**

– தலைவர், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் –

செந்தமிழில் ஆங்கிலத்தில் சைவந் தன்னில்
தேர்ந்துபணி புரிந்துவரு தலைவ ரான
நந்தமரென் திருசண்முக லிங்கம் ஐயா!
நவிலரிய நிறைவாழ்வை நாட்டிற் கண்டே
கந்தமுறு சஷ்டியப்த பூர்த்தி தன்னை
கண்டுமகிழ்ந் தின்புமுறு கவினார் வேளை
சிந்தையுறை திருக்கடவூர் இறையின் அருளால்
தீந்தமிழ்போல் வாழியிவர் பன்னூ றாண்டே.

66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சைவபரிபாலன சபை



BLACK&DECKER DEWALT

# யாழ் நகரில்

## இலவச பராமரிப்புச் சேவை முகாம்



பழைய உபகரணங்களிற்கான 25% விசேட மாற்றீட்டு விலைக்கழிவு

மின் வலு சக்தி உபகரணங்களுக்கு மட்டும்

- இலவச பரிசோதனையும் பராமரிப்புச் சேவையும்
- பழுதுபார்ப்புக் கட்டணத்தில் 50% தள்ளுபடி
- உதிரிப்பாகங்களின் விலைகளில் 25% தள்ளுபடி
- விசேட பரிமாற்றச் சலுகை
- மின் வலு சக்தி உபகரணங்களின் செயற்பாட்டை அவதானிக்கும் வாய்ப்பு
- சரியான மற்றும் பாதுகாப்பான பாவனைக்கு ஆலோசனைகள்

**நந்தலால் இரும்பகம்**
இல, 29, ஸ்டான்லி வீதி, யாழ்பானம்.
2011 ஜனவரி மாதம் 19ஆம் 20ஆம் திகதிகளில்

**சுந்தர்சன்**
யாழ் வீதி, மானிப்பாய்.
2011 ஜனவரி மாதம் 21ஆம் 22ஆம் திகதிகளில்

மு.ப 9.00 முதல் பி.ப 4.00 வரை

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்
டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் தனியார் நிறுவனம்
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
DELMEGE CONSTRUCTION PRODUCTS
உடனடி அழைப்பு: 077 1095270


## ஆறுகால வழிபாடு

யாழ்ப்பாணம், ஜன.19

சாவகச்சேரி வேம்பிராய் சத்திய ஞானக் கோட்ட தருமச்சாலையில் தைப்பூச தினத்தை முன்னிட்டு ஏழுதிரைகளும் நீக்கி ஆறு கால வழிபாடு இன்று புதன்கிழமை முதல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

இன்று காலை 8.30 மணிக்கு கொடியேற்றம் ஆரம்பமாகி தொடர்ந்து வைபவங்கள், பண்ணிசைக் கச்சேரிகள், பட்டிமன்றங்கள், நாட்டிய நிகழ்வுகள் ஆகியன இடம் பெறும். (ற-10)

## நூலகம் திறப்பு

கோப்பாய், ஜன.19

நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சன சமுக நிலைய நூலகத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் கலந்து கொள்வார். (ஒ-72)

## அதிபர் கூட்டம்

புலோலி, ஜன.19

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வலயத் தகவல்தளம், 'யுனிசெவ்' மேற்கொள்ளும் வேலைகள், வருடாந்த அமுலாக்கல் 2011, உயர் கல்வி குணநலன் உள்ளீடு, மற்றும் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-319)


பனை அபிவிருத்திச் சபை
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

## பிரதேச இணைப்பாளர்கள் பதவிகளுக்கான வெற்றிடங்கள்

01. பனை அபிவிருத்திச் சபையின் பிரதேச இணைப்பாளர்கள் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கல்வித் தகைமைகளும் அனுபவமும்:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பதவிக்குப் பொருத்தமான பட்டம் பெற்றவர்கள் அல்லது அதற்குச் சமமான தகைமை.

அத்துடன்

அரச நிறுவனமொன்றில் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட கால பதவிக்குப் பொருத்தமான சேவை அனுபவம்.

03. ஏனைய தகைமைகள்: கணினி அறிவு, முகாமைத்துவத்தில் சிறந்த திறமை, பனை சம்பந்தமான துறையில் அறிவு

04. வயது எல்லை:
45 வயதுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

05. மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:
JM 1-1-2006- Rs.20, 490-10x325-18x475-Rs.32,290

06. நியமனத்தின் தன்மை: நிரந்தரமானது.

07. தேர்வு முறை:
விண்ணப்பதாரி சுயவிவரக் கோவை ஆய்வு, திறனாய்வு மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்.

08. பொதுவான நிபந்தனைகள்:

I. தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை ஆவணங்களின் பிரதிகளுடன் *"தலைவர், பனை அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு 02.02.2011 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

II. அரச/பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் அரச நிறுவனங்களில் தொழில் புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தேவையான ஆவணங்களின் பிரதிகளுடன் அந்நிறுவனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்ப வேண்டும்.

III. இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் தனது மாதாந்தச் சம்பளத்தில் 8 சதவீதம் ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்புச் செய்வதுடன், ஊழியர் சேமலாப நிதி, உழியர் நம்பிக்கை நிதிக்கு முறையே 12 சதவீதமும், 3 சதவீதமும் சபை பங்களிப்புச் செய்யும்.

IV. விண்ணப்பதாரிகள் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராக இருக்க வேண்டும்.

V. மேற்குறிப்பிட்ட அனைத்து நிபந்தனைகளையும் தகைமைகளையும் உள்ளடக்காத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

பசுபதி சீவரத்தினம்
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/574976)






சீட்டிழுப்பு இலக்கம் 717 திகதி 17-01-2011

வெற்றி எண்கள்

19 26 50 53 T

ஜக்பொட் பரிசு ரூ. 22,162,840/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 22,162,840/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 21 | 2,000/= | 42,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 423 | 1,000/= | 423,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 755 | 1,000/= | 755,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 17882 | 60/= | 1,072,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8459 | 40/= | 338,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 211124 | 20/= | 4,222,480/= |
| | | மொத்தம் | ரூ. 7,653,760/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 600724623-6-46 |
| கண்டி | 600723782-5-45 |
| கொழும்பு | 600738788-1-31 |
| வவுனியா | 600738348-7-27 |
| திருகோணமலை | 600728432-3-43 |
| மட்டக்களப்பு | 600732126-1-01 |
| நுவரேலியா | 600737649-1-41 |
| மொனராகலை | 600721664-0-30 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,053,760/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 22,733,620/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஜனவரி 20 ஆம் திகதி வியாழக்கிழமை
சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை.
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335546/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுவால் வரும் நோய்க்கு சிகிச்சை: பணம் அறவிட மருத்துவர்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜன.19

மதுபாவனை காரணமாக நோய்களுக்கு ஆளான அல்லது விபத்துக்குள்ளானவர்களின் மருத்துவ சிகிச்சைகளுக்கு கட்டணம் அறவிடும் நடைமுறைக்கு அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மது அருந்தியவர்களிடம் இவ்வாறான தருணங்களில் கட்டணம் அறவிடுவது தமது மருத்துவத் தொழில்முறைக்கு முரணானது என்றும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சட்டம் குறித்து அரசு தொடர்ச்சியாகக் கூறி வருகின்ற போதிலும் வைத்திய சாலைகளுக்கு இதுவரை சுற்று நிருபங்கள் விநியோகிக்கப்படவில்லை என்று சங்கம் கூறியுள்ளது.

நாம் சத்தியப் பிரமாணம் செய்யும்போது நோயாளிகளின் இரகசியத்தை பாதுகாப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம். அது இத்தகைய சட்டங்களின் கீழ் சாத்தியமில்லாமல் போகலாம் - என அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஜயலத் பண்டார கூறினார்.

மதுபாவனையைக் குறைப்பதற்காக அரசு இதைச் செய்கின்றதென நாம் நம்பவில்லை. கடந்த சில வருடங்களில் மதுபான தயாரிப்பு மற்றும் விற்பனை அனுமதிப்பத்திரமுள்ள மதுபானசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை தரவுகள் காட்டுகின்றன என்றும் டாக்டர் ஜயலத் பண்டார சுட்டிக் காட்டினார்.

கட்டணம் செலுத்த நேரிடும் என்பதால் நோயாளிகள் தமது நாளாந்த பழக்க வழக்கங்கள் குறித்து உண்மை பேசாமலும் போகலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# பாதாள உலகக் குழுவினரின் கைதை அரசியல் தலையீடுகள் தடுக்கின்றன

கொழும்பு, ஜன.19

அரசியல்வாதிகளின் தலையீடு காரணமாக பொலிஸாரினால் கைதுசெய்ய முடியாத பாதாள உலகக் குழுத் தலைவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அதிக குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சுமார் 16 பாதாள உலகக் குழுத் தலைவர்களுக்கு அரசியல்வாதிகள் அடைக்கலம் வழங்கியுள்ளனர். அரசியல் தலையீடு காரணமாக குறித்த பார்தாள உலகக் குழுத் தலைவர்களைக் கைது செய்யமுடிவதில்லை எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரின் நடவடிக்கைகளினால் கடுமையான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுத் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, மாத்தறை, கண்டி, கம்பஹா மற்றும் களுத்துறை போன்ற பிரதேசங்களில் இந்தப் பாதாளக் குழுத் தலைவர்கள் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பாகிஸ்தான் இராணுவ தளபதி இன்று இலங்கை வருகிறார்

கொழும்பு,ஜன 19

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஆஷ்பாக் காயானி இன்று புதன்கிழமை இலங்கை வருகிறார்.

மூன்றுநாள் பயணத்தை மேற்கொண்டு அவர் இலங்கை வருகின்றார்.

இந்த வருகையின் போது பாகிஸ்தானிய இராணுவத் தளபதி, ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை இந்திய வான் படைத் தளபதி எயார்சீவ் மார்ஷல் பிரதீப் வசந்த் நாயக் நேற்றுமுன்தினம் இலங்கையின் கூட்டுப்படைத் தளபதியைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு கொழும்பு வான் படைத் தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.இதன்போது இந்திய வான் படைத் தளபதிக்கான மரியாதை அணி வகுப்பும் இடம்பெற்றது. (த)

## அழைப்பு....



மதிப்பளித்தல்: கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் மதிப்பளித்தல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் எஸ்.திருவாகரன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், அதிபர் இ.ராகவன், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்பலவாணர் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (319)

# தன்னியக்க வீதி விளக்குத் திட்டத்தில் மின்சாரம் சேமிப்பு

கொழும்பு,ஜன.19

தன்னியக்க வீதி விளக்குகள் திட்டத்தின் மூலம் 30 சதவீத மின்சாரத்தை சேமிக்க முடியும் - என இலங்கை மின்சாரசபைத் தலைவர் சந்தன ஹப்பு தந்திரி தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் பரீட்சார்த்த ரீதியாக பேலியகொடை பகுதியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், இத்திட்டத்தின் கீழ் 1,200 வீதி விளக்குகள் தன்னியக்கமாக இயங்கி வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மின்சாரத்தை சேமிக்கும் திட்டத்தின் கீழ் அறிமுகமாகியுள்ள இந்த தன்னியக்க முறை பெரும் வெற்றியளித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

2010 ஆம் வருடத்தில் மாத்திரம் வீதி விளக்குகளுக்கு செலவிட்ட மின்சாரத்தின் பெறுமதி 43 கோடி 70 லட்சம் என மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தன்னியக்க வீதி விளக்குகள் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# உள்ளூராட்சி சபைகளை அதிகார சபையாக்க எதிர்ப்பு

## மேல் மாகாணசபை உறுப்பினர் ராம் விசனம்

கொழும்பு, ஜன.19

கொழும்பு மாநகரசபை, கல்கிஸை - தெஹிவளை மாநகர சபை மற்றும் கோட்டே மாநகர சபை உட்பட மேலும் பல உள்ளூராட்சி சபைகளை அதிகார சபையாக மாற்றுவதற்கு அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையானது மக்களின் ஜனநாயக உரிமைகளை அப்பட்டமாக மீறும் எதேச் சாதிகார நடவடிக்கையாகும் - என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான சி.வை.பி. ராம் தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கைக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் திருப்பவை வருமாறு:-

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் எந்த வொரு செயற்பாட்டுக்கும் அரசியல் கட்சிகளும், மக்கள் பிரதிநிதிகளும் துணை போகக்கூடாது.

மாநகரசபை, நகரசபைகளை அதிகாரசபைகளாக மாற்றுவதானது வீண் விரயம், ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றுக்கு வழி வகுப்பதுடன் ஜனநாயக நிர்வாக செயற்பாட்டுக்கும் குந்தகமாக அமையும்.

மக்களின் வாக்களிக்கும் உரிமை, ஜனநாயக நடவடிக்கைகள் என்பவற்றுக்கு பெரும் பாதகமாக அமையவுள்ள இத்திட்டத்தை அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தல் நடத்தப்படும் போது அதில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகர முதல்வர் வேட்பாளராக நான் போட்டியிடுவேன்.

எதிர்வரும் தேர்தலில் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளராக நான் நியமிக்கப்படுவேன் என கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் உறுதியளித்திருந்தார் இவ்வாறு மாகாணசபை உறுப்பினர் ராம் தெரிவித்தார். (சி)

# பாதிக்கப்பட்டோருக்கு அமெரிக்கா உதவி

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணத்துக்காக அமெரிக்கா மூன்று லட்சம் டொலர்களை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெற்றீசியா பியூட்டினியஸ் விடுத்துள்ளார்.

இந்த நிதியுதவியின் மூலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருள்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேலும் பல இலங்கை அகதிகள் கனடா செல்லத் தயாராகின்றனர்

மேலும் பல இலங்கைத் தமிழ் அகதிகள் கனேடிய பிரிடிஸ் கொலம்பியா கடற்பிராந்தியத்தை வந்து அடைவதற்கான தகவல்கள் கிடைதுள்ளதாக கனேடியப் புலனாய்வுத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். இந்தத் தமிழர்கள் தென்கிழக்காசிய நாடுகளில் இருந்து கனடா செல்வதற்காக தயாராவதாகப் புலனாய்வுத் தரப்பினரை மேற்கோள் காட்டி கனேடிய ஒட்டாவா சிட்டிசன் செய்தி வெளியிட் டுள்ளது.

அவர்களை கனேடிய கரைக்கு கொண்டு வருவதற்காக தென்கிழக்காசிய நாடுகளில் இரு ஆள்கடத்தல் குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும் அந்த எச்சரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்களைக் கொண்டுவரும் கப்பல்களில் 200 முதல் 300 பேர் பயணிக்கக் கூடிய வசதிகள் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சன்சீ கப்பல் மூலம் கனடா சென்ற அதிக எண்ணிக் கையிலான இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் வன்குவாரில் உள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கை வெள்ள உதவிகள் மூலம் இழந்த நற்பெயரைத் திருப்பலாமாம்

கொழும்பு, ஜன.19

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் இலங்கை அரசு தமிழ்மக்கள் மத்தியிலும் சர்வதேச மட்டத்திலும் இழந்த பெயரை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் - எனக் கனேடிய யோர்க் பல்கலைக்கழகத்தின் அகதிகள் கல்வி சார்ந்த விரிவுரையாளர் ஜெனீபர் ஹைன்ட்மென் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் கடந்த இரண்டு வருடங் களுக்கு முன்னர் வெற்றி பெற்றது. எனினும், தற்போது இலங்கை முழுவதிலும் சமாதானத்தை ஏற்படுத்தும் மிகப்பெரிய பணி அரசின் முன்னால் இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் மூலமே சமாதானமான சூழ்நிலையை உருவாக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலமாக பெய்து வந்த மழை காரணமாக வடக்கு, கிழக்கில் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள அவர், அரசு அவர்களைப் புறக்கணிக்காமல் அவர்களுக்கான நிவாரணத் தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலம் இழந்த பெயரை மீண்டும் பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி

**மேடம்:**
மனதில் மகிழ்ச்சி, உற்சாகம் குடிகொள்ளும் நாள். பல நாள்களாகத் தடைப்பட்ட பணவரவு ஒன்று, இன்று மாலையில் வரலாம். நண்பர்களுடன் சேர்ந்து, சில முக்கிய காரியங்களில் இறங்கலாம். அரசியல் வாதிகளுக்குச் செல்வாக்குக் கூடும். சிலரிடம் ஏட்டிக்குப் போட்டியாகப் பேசி அவர்களை வெறுப்பேற்றுவீர்கள். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிக்ழும்.

**இடபம்:**
உங்களின் செயற்பாடுகளை சிலர் விமர்சிக்கலாம் அல்லது பாராட்டலாம். பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். வீட்டிற்கு வரும் விருந்தினர் களால் உங்களின் வழக்கமான பணிகளை மாற்றி அமைக்கலாம். பெண்கள் வழியில் முக்கிய செய்திகளைக் கேட்கலாம். மற்ற வர்களுக்காகப் பிணைகொடுக்க வேண்டாம்.

**மிதுனம்:**
இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். நீண்ட நாகாலை நேரத்தில் தேவையற்ற மன உளைச்சல்களை யும், மாலை நேரத்தில் மனதிற்கு இனிய அனுபவங்களை யும் எதிர்கொள்ளும் நாள். குடும்ப உறுப்பினர்கள் அனு சரணையாக நடந்து கொள்வர். தொழில் ரீதியான வேலைப் பளுவால் அவதிப்படலாம். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும்.

**கடகம்:**
வரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகள் காத்தி ருக்கும் நாள். புதியவர்கள் சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்க லாம். வெளியூர் பயணம் சென்றவர்கள் மீண்டும் ஊர் திரும்பலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர் கள். சிவாலய வழிபாடு சிறப்பு தரும்.

**சிங்கம்:**
பொறுமை, நிதானத்துடன் செயற்பட்டு பெருமை சேர்ப்பீர்கள். பெற்றோர் வகையில் ஏற்பட்ட பிரச்சி னைகள் தீர்விற்கு வரும். நீண்ட நாள்களாக சந்திக் காத உறவினர் ஒருவரை திடீரெனச் சந்திக்கலாம். ஆசைப்பட்ட சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். விருந்து, விசேடங்களால் சந்தோஷம் உண்டு. உற்சாகம் பெருகும் நாள்.

**கன்னி:**
புத்திசாலித்தனம் வெளிப்படும் நாள். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி தெம்பு பெறுவீர்கள். சொத்து, கொடுக்கல் வாங்கல் விவ காரங் களில் முன்னேற்றம் உண்டு. நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நாவன்மை கூடும்.

**துலாம்:**
குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். முடிந்து விட்ட தாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். ஆலய வழிபாடுகள் மூலம் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். இது வரை வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். நண் பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். கனவுத் தொல்லையுண்டு

**விருச்சிகம்:**
நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். உங்களுக்குச் சாதகமான வகையில் சில வேலை களை முடித்துக் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர் கள் உங்களின் குறைகளைச் சுட்டிக் காட்டலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்பு கொண்டு பேச முற் பட்டு முடியாமல் போகலாம்.

**தனுசு:**
சுபச் செலவுகள் கூடும் நாள். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றலாம். வியாபாரி களுக்கு கொடுக்கல் வாங்கல்களில் திருப்திகரமான நிலை உண்டு. எதிர்பாராத ஒருவர் மூலம் ஆதாயம் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பழைய நண்பர் களைச் சந்தித்து பழங்கதைகள் பேசுவீர்கள்.

**மகரம்:**
காரியங்கள் தங்கு, தடையின்றி நடக்கும் நாள். குடும்ப விடயங்களில் சில மாற்றங்களைச் செய்வீர் கள். அயலார் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதி கரிக்கும். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சிலர் உங்களைத் தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். கடன் மிகுதி ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். கலகலப்பான அனு பவம் உண்டு.

**கும்பம்:**
உற்றார் உறவினர்கள் தொல்லைகளுக்கு ஆள்பட லாம். பயணங்களால் செலவு, அலைச்சல் அதிகரிக்கும். பழைய பொருள்களை மாற்றிவிட்டுப் புதிய பொருள்கள் வாங்கலாம். மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். ஆன்மிக நாட்டம் உண்டாகும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, சில பொருள்களை எடுத்துச் செல்ல மறந்து விடலாம்.

**மீனம்:**
விடா முயற்சி மூலம் வெற்றி பெற வேண்டிய நாள். தடை, தாமதங்களுக்குப் பின், சில வேலைகள் முடிவுக்கு வரலாம். உறவினர்கள் சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு அதை காப்பாற்ற முடியாமல் போகலாம். யாரிடமும் கடும் வார்த்தைகளால் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். சில விடயங்களில் சுய நலமாக நடந்து கொள்வீர்கள்.

# அந்த அரைமணி நேரத்தில் பூம்புகார் கிராமம்

எதால எங்கட வீட்டுக்கு போறதெண்டே தெரியேல்ல. பாதையளும் தெரியுது இல்ல. இஞ்சதான் நாங்கள் முந்தி இருந்தனாங்களோ எண்டு சந்தேகமாய் இருக்கு. அவ்வளவுக்கு இடம்மாறிப்போச்சு.

இவையொன்றும் வலிவடக்கு மக்கள் மீளக்குடியமரச்சென்றபோது ஒலித்த குரல்கள் இல்லை.

வலி வடக்கு மக்களைப்போன்று ஆனால் பெரிதும் வெளித்தெரியாது இடம்பெயர்ந்து இருந்த அரியாலை பூம்புகார்ப் பிரதேச மக்களின் குரல்.

1995குடாநாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது யாழ்.மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் இடம்பெயர்ந்திருந்தார்கள். அந்தவகையில் குடாநாட்டின் தென்பகுதிக் கரையாக அமைந்திருந்த அரியாலை கிழக்கு, பூம்புகார் பிரதேச மக்களும் இடம்பெயர்ந்திருந்தார்கள்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இடம் பெயர்ந்தால் அந்தப் பிரதேசங்களில் மீள்குடியேறுவது எவ்வளவு சுலபமான காரியம் என்று தெரிந்திருக்கும். அந்தச் சுலபமான காரியத்துக்காக இந்தப் பூம்புகார் மற்றும் அரியாலைப் பிரதேச மக்கள் 15 வருடம் விலைகொடுத்திருக்கின்றார்கள்.

இந்தமாதம் 13ஆம் திகதி அந்தப் பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெறும் என்ற செய்திகளை கேள்விப்பட்ட மக்கள் காலை முதலே பூம்புகார் சந்தியில் கூடத்தொடங்கின்ர். ஏ-9 பிரதான வீதியிலிருந்து கிட்டத்தட்ட 5 தொடக்கம் 8 கிலோமீற்றர் வரை உள்ளே செல்லவேண்டும். ஆரம்பத்தில் தார் ஊற்றிய வீதிகள், பின்செல்லச் செல்ல மணல் பாதைகள்.


> "எதம்மா எங்கட வீடு? இது யார் வீடு?" ஒரு சிறிசு தன் தாயுடன் தான் வாழத்துடிக்கும் வீட்டைத் தேடித்திரிந்தது. உன்ர வீட்டுக்கு இந்த றோட்டால உள்ளுக்குப் போவேணும் என்று அந்தத் தாயின் பதில் வர வாம்மா போவம் என்று அந்தச் சிறிசு அந்தப் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. பாவம் இவ்வளவு காலமாக வேறு வீடுகளில் வாழ்ந்த சிறிசு தன் சொந்த வீடுகாணத் துடியாய் துடிக்கிறது. இந்த ஏக்கங்கள் எங்கே புரியப் போகின்றது அதிகாரப்பிடியில் இருப்பவர்களுக்கு.

பூம்புகாருக்குச் செல்லும் வழி, அரியாலை கிழக்குச் செல்லும் வழி இரண்டும் சந்திக்கும் இடத்திலுள்ள சந்தியில் பூம்புகார் செல்லும் பிரதான வீதியின் பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் விழாப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களும் அவர்களின் வாரிசுகளும் தாம் வாழ்ந்த இடத்திற்கு மீளத்திரும்பும் சந்தோசத்தில் வந்திருந்தார்கள்.

மழையில் நனைந்தபடி அவர்கள் பல மணி நேரம் காத்திருந்தனர் - தம் விடியலுக்காக - ஒரு மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகை தந்தார். மக்கள் மத்தியில் ஏற்பாட்டாளர்கள் அமைச்சரை உரையாற்றுமாறு கேட்க அமைச்சர் மழையில் மக்கள் நனைந்து கொண்டிருக்கிறார்கள் தான் பேசவில்லை என்றார். இருப்பினும் அமைச்சரை ஒரு சில வார்த்தைதன்னும் பேசு...வு அழைக்க அமைச்சர் சம்மதித்து உரையாற்றினார்.

அப்போது அமைச்சர், ஜனாதிபதி யாழ்.வந்து சென்றதன் பிற்பாடு உங்களை இந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாகக் கலந்துரையாடுவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டவேளை மக்கள் தம்மை இப்போது தமது பூம்புகார் பிரதேத்தினுள் அழைத்துச்செல்ல வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து விடாப்பிடியாக நின்றனர். இறுதியில் தலைசாய்த்த அமைச்சர் மக்களுடன் தானும் சேர்ந்து மக்களின் வாழ்விடங்களைப் பார்ப்பதற்காகச் சென்றார்.

மக்கள் எந்த இடத்திலும் இவ்வாறு தமது இலட்சியத்தில் உறுதியாய் இருந்தால் அதனை எவராலும் தட்டிக்களிக்க முடியாதென்பதை இதன்போது புரிந்துகொள்ள முடிந்தது. பூம்புகார் பிரதேச மக்களுக்கு, 1995இற்கு முன்னர் அவர்கள் வாழ்வதற்கான காணிகளை அரசே பார்த்துக்கொடுத்து வீடுகளையும் அமைத்துக் கொடுத்தது.



விழா இடம்பெற்ற இடத்திலிருந்து பிரதான வீதியின் இருமருங்கிலும் வீடுகள் எதனையும் காணமுடியவில்லை. சில வீதிகள் இருப்பதற்கான அடை யாளமும் அதனை இராணுவத்தினர் பயன்படுத்தியமைக்கான அடையாளமும் தெரிந்தன. பெரிய மண் அணையும் அதனுடன் இணைந்ததாக இராணுவக் கொட்டில்களும் அமைந்திருந்தன.

அந்த மண் அணைகளின் எல்லைக்குள் உட்பிரவேசிக்கும்போதே ஏதோ ஒரு வெறுமையான உணர்வு மனதில் ஏற்பட்டது. மக்கள் பாவனையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல்லாத மனித நடமாட்டம் அற்று ஓர் இருண்ட பூமியாக ஒருபக்கமும். காணும் இடமெல்லாம் வெளியாக மறுபுறம். ஆங்காங்கே கதவுகள் இல்லாத சுற்றுமதில்கள் இல்லாத வீடுகள் காட்சி தந்தன. அந்த இடத்துடன் சம்பந்தமில்லாத என்னுள்ளேயே இவ்வளவு உணர்வுகள் கொட்டித்தீரும் போது அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து அங்கேயே நம் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கழித்த மக்களின் உணர்வுகள் எழுத்தில் வடிக்கையில் சில வேளைகளில் அவர்களின் உணர்வுகள் முழுமை பெ[illegible]துபோகலாம். ஏனெனில் அத்தகைய வார்த்தை வடிவங்களைச் சொல்வதற்கு எழுத்தின் வடிவங்கள் போதாது.

"இதுதான் என்ர வீடு, வீடு கிடக்கு பரவாயில்லை, இதுதான் மாமா வீட்டை போறது. மாமா வீட்டை காணேல்ல. அதிலதான் கிடந்தது" பிறந்து 3 வயதுப் பிஞ்சுக்கு அந்த மண்ணின் வாசனையை அந்தத் தாய் சொல்லிக் கொண்டிருக்கிறாள். சொல்லும்போதே அவர் முகத்தில் சந்தோசத்தின் உச்சியில் நிற்பது தெரிந்தது.

"எதம்மா எங்கட வீடு? இது யார் வீடு. ஒரு சிறிசு தன் தாயுடன் வாழத்துடிக்கும் வீட்டைத் தேடித் திரிந்தது. உன்ர வீட்டுக்கு இந்த றோட்டால உள்ளுக்குப் போவேணும் என்று அந்தத் தாயின் பதில் வர வாம்மா போவம் என்று அந்தச் சிறிசு அந்தப் பாதையில் பயணிக்கத் தொடங்கிவிட்டது. பாவம் இவ்வளவு காலமாக வேறு வீடுகளில் வாழ்ந்த சிறிசு தன்[illegible]சொந்த வீடுகாணத் துடியாய் நடக்கிறது.



இந்த ஏக்கங்கள் எங்கே புரியப் போகின்றது அதிகாரப்பிடியில் இருப்பவர்களுக்கு.

ஒரு நடுத்தர வயது தாய் பிரதான வீதியின் தரையில் நின்று கடலையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். அவரது முகபாவனை எதையோ தேடுகிறார் என்பதை மட்டுமே உணர்த்தியது. அவரது தேடலுக்கு விடை கிடைத்ததோ தெரியவில்லை. இருப்பினும் அரைமணி நேரத்தில் மீண்டும் திரும்பியதால் அவரது தேடல் ஏக்கமாகவே இருந்திருக்கும்.

இதில் சிலர் தமது மனத்திரைகளைத் திறந்து எம்மோடு தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

**எஸ்.சிவகுருநாதன் (வயது - 66)**
**(பூம்புகார், 52 ஆம் காணி)**



1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்களின் இடப்பெயர்வுடன் இந்தப் பிரதேச மக்களும் இடம்பெயர்ந்து சென்றனர். இடப்பெயர்வுக்கு முன்னரான காலப்பகுதியில் இங்கு வைத்தியசாலை, ப.நோ.கூ. சங்கம் என்பன அமைந்திருந்தன.

புலிகள் இயக்கத்தினர் இந்த மக்களின் சுயதொழில் மூலமான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மிகப்பெரிய தும்புத்தொழிற்சாலையினை அமைத்துத் தந்தனர். இங்கு பெரும்பாலானவர்கள் கடற்தொழில் செய்பவர்கள். இதனைவிடத் தச்சுத் தொழில், மேசன் வேலை ஏனைய தொழில்களையும் மேற்கொண்டிருந்தனர். இடப்பெயர்வுக்கு முன்னரான காலத்தில் 262 குடும்பங்கள் வரை வசித்துவந்தோம்.


சமாதான காலம் நிலவிய 2003ஆம் ஆண்டில் சிலநாள்கள் இப்பிரதேத்தில் தங்கியிருந்தோம். பின்னர் எம்மை இராணுவத்தினர் வெளியேற்றியிருந்தனர்.

நாங்கள் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கியிருந்தோம். 15 வருடங்களின் பின்னர் இந்தப் பிரதேசத்திற்குத் திரும்பியிருக்கின்றோம். எங்களுடைய வீடுகள் எல்லாம் சேதமடைந்திருக்கின்றன. எமக்கு ஏதாவது உதவிகள், வசதிகள் செய்து தந்தால்தான் மீண்டும் புதிய நிம்மதியான வாழ்க்கை வாழமுடியும் என்றார்.

**- உசிலமணி -**

அந்தப் பூம்புகாரில் பிறந்ததுடன் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்துவிட்டு இன்று தனது மழலை ஞாபகங்களை மீட்டியபடி சில இளைஞர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் தாம் முன்னர் அந்த இடங்களில் விளையாடிய இடங்களும் மரங்களும் இப்போதும் இருப்பதைக் கண்டு அந்த நிழலின் சுகத்தை இரசித்த வண்ணம் எம்முடன் உரையாடினர்.

**சிறிகாந்தன் அமல்காந்தன்**
**(வயது - 19) (பூம்புகார், 98ஆம் காணி)**



சின்னவயசில இந்த இடத்தைவிட்டு இடம்பெயர்ந்து போனனாங்கள். இங்க இருக்கிற பாலர் பாடசாலையில தான் படிச்சனான். பின்னர் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் இஞ்ச இருந்த பூம்புகார் அ.த.க.பாடசாலை, கிழக்கு அரியாலை அ.த.க பாடசாலை என்பன சேர்ந்து இயங்கியதால் அங்கே படித்தோம் என்றார் மகிழ்ச்சியுடன்.

இவர்களின் மகிழ்வு நீண்டநேரம் நீடித்திருக்கவில்லை. அரைமணிநேரத்திலேயே அமைச்சருடன் மீண்டும் திரும்பினர். கைக்குக் கிடைத்தது வாய்க்கு எ[illegible]இல்லை.

# நல்லதை நோக்கி நடப்போம்



உற்சாகமாக இருக்கும் காலம் இளமைக் காலம். கையில் இறுதியாக வைத்திருக்கும் பணத்தைக் களவு கொடுத்தாலும் சோகம் இல்லாமல் வியந்து பேசும் மனங் கொண்டவர்கள் இளம்பருவத்தினர்.

காற்றைக் கிழித்துக் கொண்டு பறக்க இரண்டு இறக்கைகள் இல்லாததுதான் குறை. கண்ணிலும் இதழிலும் வாலிபக் கதையெழுதி வண்ணம் செய்யும் பருவம் அந்தப் பருவம்.

அந்தப் பருவத்தில் தீயவர்,கயவர் போன்றோர் தோளில் கை போட்டு நெருங்கி விட்டால், ஒரு பாரதப் புதல்வன் கெட்டுப்போய் விடுகிறான்.

சொற்பொழிவு, உபந்நியாஸம் என்று எங்கு நிகழ்ந்தாலும், வருபவர்களில் ஒரு சிலர் வாழ்க்கையை ஏறத்தாழ நடத்தி முடித்தவர்கள். கண்ணாடிக்குள் புதைக்கப்பட்ட கண்களின் ஓரத்தில் காலம் உழுது போட்ட கரிசல் கோடுகள் உடைய அறிவு ஜீவிகள்.

இன்னொரு பக்கமாக, இனி தெரிந்து கொள்ள எதுவுமில்லை என்கின்ற உண்மை உணர்ந்த உயர்ந்தோர்கள். கேட்டு என்ன ஆகப் போகிறது, எதுவுமில்லைத்தானே இருந்தாலும் கேட்பது மூச்சுவிடுவது போல் பழக்கமாகி விட்டபடியால்,வந்து அமரும் அறிவுச்சுடர்கள்.

ஒட்சிசன் நாசி வழியாக ஏற்றப்படும் போது ஹடயோகம் படிக்க முடியுமா? இரத்தம் போத்தல் வழியாக ஏற்றப்படும் போது சித்தம் சிவமாக வேண்டும் என்று யாரும் சத்தம் போட வேண்டியதில்லை. அப்போது பயமும் பக்தியும் ஞானமும் தானாகவே வரும்!

மழைக்காகப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தினால் குழந்தைகள் குடை எடுத்துக் கொண்டு வருவார்கள். பெரியவர்களோ பிரார்த்தனை பலித்து மழை எங்கே பெய்யப் போகிறது என்று வெறுங்கையுடன் வருவார்கள்.

குமார சம்பவத்தில் மேரு மலைச்சாரலில் அம்பிகை தவம் பண்ணப் போகிறாள். ஐந்து வயது 'இந்த வயதில் தவமா?' என்று அம்மா அழுகிறாள். தவம் செய்தால் தேவியின் உடல் தாங்காது என்பதை "பூவின் மேல் வண்டு உட்கார்ந்தால் தாங்கும், பறவை அமர்ந்தால் தாங்குமா?" என்று கேட்பதாக காளிதாஸன் உவமை கூறுகிறார். ஆனால் தவம் செய்யப் பிள்ளைப் பிராயமே நல்லது என்பதை அம்பிகை நிரூபித்தாள்!

பிள்ளைப் பருவத்துப் பிடிவாதம் நல்ல விடயங்களுக்குத் தாவினால் கொள்ளை கொள்ளையாய் வெற்றி வரும்.

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப,எண்ணியார்**
**திண்ணியர் ஆகப்பெறின்"**

என்பது தமிழ் மறை. இந்தப் பிடிவாதத்தை நம் இளம் பிள்ளைகளுக்கு யாராவது சொல்லியா கொடுக்க வேண்டும்? எனவே தான் இளமையில் செம்மைப்பட அழைக்கிறேன். நல்லதை நோக்கி நடவுங்கள் என்று நண்பர்களை வற்புறுத்துகிறேன் வாழப்பழகுவோம் என்று வாழ்த்தி வரவேற்கிறேன்.

நம்மிடம் எந்தவிதமான தவறும் இல்லை என்கிற போது,நம் மீது நமக்கே ஒரு மரியாதை வரும். நமக்கே நம்மை மதிக்கத் தோன்றும். மெல்ல மெல்ல வாழ்வில் மேலே உயரக் கீதையும் குறளும் நமக்குப் பாதை வகுத்துக் கொடுக்கும்.

அமைதியான ஆரண்யத்தில் நிசப்தமான சூழலில் - சாந்தி தவழும் சந்தர்ப்பத்தில் கீதை எழவில்லை. அல்லல் மிகுந்த அமர்க்களத்தில், குழம்பிக் கிடக்கும் இளைய இந்தியனுக்கு பரம்பரை பரம்பரையான பெருஞானத்தை கண்ணன் வடிவத்தில் இந்தக் கீதையை உரைத்தார்.

முதல் விடயம் குழப்பம் அடையாதே, மனத்தைத் தளர விடாதே. குழப்பத்திலும் தளர்ச்சியிலும் செயலை விட்டு விலகுவது பேடித்தனம். அது தவறு. அதைச் செய்யாதே.

ஞானத்திலும் சாந்தத்திலும் செயலை விட்டு விலகுவது சரி. அஞ்ஞானத்திலும் குழப்பத்திலும் செயலை விட்டு விலகுவது, வெளியேறுவது சரியல்ல.

கீதை சிந்திக்கத் தூண்டுகிறது. அது மனிதனைச் செயலில் செலுத்துகிறது. செயல் ஒழிந்த குழப்பத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

கீதையின் ஒவ்வோர் அத்தியாயமும் 'யோகம்' எனப்படுகிறது. 'யோகம்' என்ற சொல்லுக்குப் பொருந்துதல் என்று பொருள். நம் மனம் ஒன்றில் பொருத்தும் போது துயரம் அடைகிறது. அமைதியின்மை வருகிறது. ஆகவே நம்மை உலகில் பொருந்தும் பெரும்பணியே கீதையின் சாரம்.

பொருந்துக... படிப்பதில் பொருந்துக, சிந்திப்பதில் பொருந்துக. ஓய்வெடுக்கிறாயா? முழுமையாக ஓய்வெடு சாப்பிடுகிறாயா? சாப்பாட்டில் பொருந்து, தூங்குகிறாயா? தூக்கத்தில் பொருந்து. எதைச் செய்தாலும் முழுமையாகச் செய்! இதுதான் கீதை. சாப்பிடும்போது விளையாட்டில் மனம் இருந்தால் சாப்பாடும் சுவையாக இருக்காது; விளையாட்டிலும் இரசனை இருக்காது.

தொலைக்காட்சியில் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டே சாப்பிட்ட பிள்ளைகளைக் கேளுங்கள். 'என்ன சாபிபிட்டாய்?' என்று அவர்களுக்குத் தெரியாது!

தூங்கும் போதே, 'ஐயோ தூங்குகிறோமே, நிறைய வேலை இருக்கிறதே'என்று கவலைப்படுவது சிலரது வழக்கம். தூக்கத்தில் வேலையைப் பற்றிக் கவலைப்பட்டால்,வேலை பார்க்கும் போது தூக்கம் வரும். எதைச் செய்தாலும் அதை முழுமையான ஈடுபாட்டுடன் செய்வதுதான் வாழ்வில் உயரும் வழி.

செயல் செய்யும் போது அந்தச் செயலில் ஆர்வம் வேண்டும். செயலின் விளைவுகளில் ஆர்வம் காட்டினால் செயல் வீணாகி விடும். அவரவர் செய்யும் வேலைகளில் ஈடுபாடும் நிறைவும் அவசியம். செயலின் விளைவுகள் பற்றிய கற்பனையிலேயே இருந்தால் செயல் வீணாகிவிடும்.

இன்றைக்கு நாட்டில் இந்த நிலை இருக்கிறதா? செயலை -செயலுக்காகவே செய்யும் பக்குவம் எத்தனை பேருக்கு இருக்கிறது? அதனால் வரும் சுயலாப நஷ்டங்களைக் கணக்குப் பார்த்துச் செய்கிறார்கள். இது நமக்கு உரிமை இல்லை என்பதே கீதா போதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 ஜனவரி 2011 புதன்கிழமை

# தொலைக்காட்சியும் பெண்களும்




தொலைக்காட்சிகள் பல ஆண்டுகளுக்கு முன்பு அறிவை வளர்க்கும் சாதனமாகவும் பொழுதுபோக்குச் சாதனமாகவும் பயன்படுத்தப்பட்டது. அதன்பின்னர் காலப்போக்கு மாற மாறத் தனியார் தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்புக்கள் தொடர ஆரம்பித்தன. ஆனாலும் தற்போதுள்ள தொலைக்காட்சிகள் குடும்பங்களுக்குள் தொல்லைக் காட்சிகளாக மாற ஆரம்பித்து விட்டன.

எப்போது தொலைக் காட்சிகளில் தொடர்நாடகங்கள் ஒளி பரப்பப்பட்டதோ அப்போதே எமது பெண்கள் மனதில் தொலைக் காட்சி பற்றிய கருத்துக்களும் நிகழ்ச்சிகளும் ஆழமாகப் பதியத் தொடங்கிவிட்டது. தற்போதைய நாகரிக வளர்ச்சியில் தொடர் நாடகங்களைப் பார்க்காமல் இருக்கமுடியாது என்ற நிலையில் பெண்கள் உள்ளனர். இவ்வாறு தொடர்நாடகங்கள் பெண்கள் மனதைக் கவர்ந்து இழுத்ததற்குக் காரணம் நடுத்தரக் குடும்பங்களைச் சார்ந்த கதைகளை நாடகங்களாக வடிவமைத்து ஒளி பரப்பி வருவதே. இதனால் இக்கதைகளில் தம்மை முழுவதுமாக உள்வாங்கி நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களாகத் தங்களையே எண்ணி தாங்களும் அதில் ஒரு நடிபங்குகள் போல ஆகி விடுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில்ஆரம்பத்தில் தொலைக்காட்சிச் சனலாகப் ''பொதிகை'' மட்டும் தான் இருந்தது. இச் சேனலில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே தொடர்நாடகம் ஒளிபரப்பப்பட்டது.

ஆனால் தற்போது 'கேபிள்' இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் எதைப்பார்ப்பது? எப்போது பார்ப்பது? என்ற திண்டாட்டத்தில் பெண்கள் அங்கலாய்க்கின்றனர். அதில் குறிப்பாகப் பெண் ரசிகர்களே அதிகம் என்று கூறலாம். நவீன காலத்துப் பெண்கள் தங்களுடைய உறவினருக்கோ, அல்லது நண்பருக்கோ ஏதாவது துன்பமோ, கஷ்ரமோ ஏற்பட்டால் அதைப்பற்றிக் கவலைப் படுவதில்லை. ஆனால் தொடர்நாடகங்களில் வரும் கதாநாயகிக்கோ அல்லது கதாநாயகனுக்கோ ஏதாவது துன்பம், கஷ்டம் ஏற்பட்டால் அதைப்பற்றி கவலைப்பட்டு அன்றையதினம் தங்களின் குடும்பங்களில் உள்ளவர்களைப் பட்டினி போட்டும் அவர்களைக் கஷ்ரப்படுத்தியும் வருகிறார்கள்.

சில குடும்பங்களின் தொடர்நாடகங்கள் முடிந்த பின்னர் தான் பிள்ளைகளுக்கு என்ன சாப்பாடு என்றே சிந்திப்பார்கள். அதுவரைக்கும் யாரும் இவர்களைத் தொந்தரவு செய்ய முடியாது.

இந்தத் தொடர்நாடகங்களில் குடும்பப் பெண்களை உயர்த்தியும் கணவனைத் தாழ்த்தியும் காட்டப்படுவதோடு பெண்ணுக்குப் பெண் தான் எதிரி என்பதை மக்கள் உணரும் முகமாகவும் அற்புதமாகவும் நாடகங்களை உருவாக்கி ஒலிபரப்பி வருகின்றார்கள். தற்போதைய நாடகங்களில் புதிய கலாசார முறைகளைப் பின்பற்றித் தொடர் நாடகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதாவது எமது தமிழ் கலாசாரத்திற்குப் புறம்பான செயற்பாடுகள் பெண்கள் திருமணம் செய்த பின்னர் தனது கணவருக்குத் தெரியாமல் வேறொரு ஆணைக் காதலிப்பது அல்லது அவனுடன் ஊர் சுற்றுவது போன்ற காட்சிகளும், கணவருக்கு வேறொரு பெண்ணைத் தானே திருமணம் செய்து வைப்பது போன்ற காட்சிகளும் ஒலிபரப்பப்படுகின்றன.

இது எமது பெண்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. இதில் வரும் கதாபாத்திரங்களாகத் தம்மை நினைத்துக் கொண்டு அதுபோலவே தம்மையும் மாற்றிக் கொள்கிறார்கள். மாமியாரை நல்லவராகக் காட்டும் எந்தத் தொடர்களும் இல்லை. பெண்களைத் தூக்கிப் பிடிப்பது, ஆண்களை மட்டந்தட்டிக் கீழ் நிலையில் காட்டுவது இதுவே இன்று எமது நாட்டில் உள்ள இளம் பெண்கள் மற்றும் குடும்பப் பெண்கள் சீரழிவதற்குக் காரணமாகின்றது. இத் தொலைக்காட்சித் தொடர்கள் ஒலிபரப்பப்படுவதால் பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வராமல் தொலைக் காட்சியே தஞ்சம் என இருக்கிறார்கள்.

இன்றைய அவசரமான உலகில் ஆண், பெண் இருவருமே உழைத்தால் தான் அன்றாடச் செலவுகளைச் சமாளிக்க முடியும் என்ற நிலை உள்ளது. எனவே தொலைக்காட்சித் தொடர்களை உங்களது உணவாகவோ அல்லது அன்றாடச் செயற்பாடாகவோ கருதாது இதனை ஒரு பொழுது போக்குக் கருவியாக மட்டுமே கருதவேண்டும். அவ்வாறு கருதும்போது எமது குடும்பம் மேன்மையடையும், இளம் சந்ததியினரும் சீர் கெட்டு வாழாது நல்லவழியில் வாழ உறுதுணையாக அமையும்.

## விழித்தெழு பெண்ணே!

பெண்ணே!
காலத்தின் கொடுமை- நீ
கல்லறை போகும் வரைக்கும்
கண்ணீரே உன் வாழ்வா?

அடுப்படியில் அடிமையாகி
அழுதழுது முகம் சிவத்து
அவதிப்பட்டது போதும்

வானிலே ஏறி
வலம்வரும் காலம் உனக்கிது
வீரம் கொண்ட பெண்ணாக
விழித்தெழு!
வீரசாகசங்கள் நீ புரிய

கலக்கங்கள் ஏதுமின்றிக்
காரியங்கள் பல ஆற்றிடு
காலத்தால் அழியாத
காவியங்கள்தனைப் படைத்திட
விழித்தெழு!
வீரசாகசங்கள் நீ புரிய

## எது மனைவி

நடு நிசிப் பொழுதில்
பௌர்ணமியாய் எனக்கு
கிடைத்தவள்- எனது
ஜென்மத்தின் பலனை
இப்பொழுதே அவளால்
அடைந்து விட்டேன்
உடல் பிரிந்தால் கூட
உள்ளத்தில் என்றும்
அவள்தான்- என்
நினைவுகள் முழுவதும்
அவளுடனேயே என்றும்
இருக்க வேண்டும்- இதுதான்
கடவுளிடம் கேட்பது.

க.ஜீவன்.

# நிறவெறியை வென்ற தமிழ்ப் பெண்



தென்னாபிரிக்க தேசத்தின் முதல் பெண் நீதிபதி நவீபிள்ளை. 66 வயதான இந்த நீதிபதி தமிழ் வம்சாவளிப் பெண்! நிறவெறி மிகுந்த தென்னா பிரிக்காவில், இந்தியப் பெண்ணான இவர் நீதிபதியாக உயர்ந்ததே மாபெரும் சாதனைதான். இப்போது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நீதிபதியாக.. அகில உலகமும் ஆச்சரியத்துடன் பார்க்கும் உயரத்தில் ஜொலிக்கிறார் இந்த நீதி தேவதை.

தன் வாழ்க்கை முழுவதுமே பல வேதனைகளைச் சந்தித்த இவர் பிறந்து, வளர்ந்தது எல்லாமே தென்னாபிரிக்காவில்தான். ஏழைக் குடும்பத்தில் ஒரு பஸ் சாரதியின் மகளாகப் பிறந்த இவரை, உலகப் புகழ் பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகம் வரை சென்று சட்டம் படிக்கச் செய்தது இவருடைய அம்மாதான். பெண்களுக்குக் கல்வியும் சுதந்திரமும் அவசியம் என்று அவர் நம்பியதால்தான், இன்று நான் இப்படி ஒரு பதவியில் வந்து உட்கார்ந்திருக்கிறேன்! என்கிறார். நவீபிள்ளை 1950ஆம் ஆண்டுகளில் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்தபோதே நிறவெறிக்கு எதிராக மிகுந்த உறுதியுடன் குரல் எழுப்பினார் நவீபிள்ளை. இதற்காகத் தென்னாபிரிக்காவை ஆண்ட வெள் ளையர்களால் இவர் சந்தித்த பிரச்சினைகள் ஏராளம். ஒரு கட்டத்தில் இவருடைய 'பாஸ்போர்ட்' முடக்கி வைக்கப்பட்டது. அதற்கெல்லாம் அசந்து விடாமல் சட்டத்தின் மூலமே தன்னைத் தற்காத்துக் கொண்டதோடு நிறவெறியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விடிவெள்ளியாகவும் விளங்கினார்.

நிறவெறிக்கு எதிராக 28 ஆண்டுகள் போராடி சட்டக்கல்லூரியில் வெள்ளையர் அல்லாதவர்களுக்கான தனிவகுப்பறையில் படித்துச் சட்டம் முடித் தேன். ஒரு வழக்கறிஞராக நீதிமன்றத்தில் பிறரின் உரிமைகளுக்காக வாதாடிய சமயத்திலும்கூட, நான் வெள்ளையர்களில் ஒருத்தி இல்லை என்ற ஒரே காரணத்துக்காக நீதிபதியின் அறைக்குள் நுழையும் உரிமை எனக்குத் தரப்படவில்லை. ஆனால் அந்த வலிகளெல்லாம் எனக்கு வலிமை தந்தன என்றார் நவீபிள்ளை. 1992 இல் தன்னுடன் வேலை பார்த்த சக வழக்கறிஞர்கள் இருவரின் துணையுடன் பெண்களுக்கான மனித உரிமை அமைப்பைத் தோற்றுவித்துப் பெண்களின் நலனுக்காகப் போராடி வருகிற இவர், கறுப்பு இன மக்களின் மனதில் எவரெஸ்ட்டாக உயர்ந்து நிற்கிறார்.

இந்தச் சாதனைக்குப் பின்னால் நிச்சயம் என் கணவர் பரஞ்ஜோதியின் பங்கு இருக்கிறது. அவரும் வழக்கறிஞர்தான். நிறவெறிக்கு எதிராக அவர் வாதாடியதால் ஐந்து மாதங்கள் சிறையில் தள்ளப்பட்டார். இப்போது அவர் உயிருடன் இல்லை என்றாலும் என் மனதிலும் நினைவில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். ஒரு காலத்தில், வெள்ளையர்களின் இரத்தத்திலேயே கலந்திருக்கும் நிறவெறிக்கு ஒரு முற்றுப்புள்ளி வருமென நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இப்போது உள்ள குழந்தைகளுக்கு நிறவெறி என்றால் என்ன என்று கூடத் தெரியவில்லை. அதுதான் எங்களின் வெற்றி. நீதி என்றும் யாருக்கும் பயப்படுவதில்லை என்றார்.

# பெண்கள் வேலைக்குச் செல்வது கேவலமா?

இன்று பெண்கள் கால் பதிக்காத துறையே இல்லை எனலாம். ஆகாயத்தில் பறப்பதாகட்டும், அலுவலக நிர்வாகம் ஆகட்டும், அரசியலாகட்டும், எதிலும் சாதிக்கின்றனர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற காலமெல்லாம் மலையேறி விட்டது. எத்தனையோ மாற்றங்கள், வியத்தகு முன்னேற்றங்கள்... சந்தோஷமாயிருக்கிறது.

ஆனால் பெண்கள் வேலைக்குச் செல்வதைக் கேவலமாகக் கருதும் சிலர் இன்னமும் இருக்கின்றனர் என்பது வருத்தம் தரும் உண்மை. எனக்குத் தெரிந்த பெண், பொறியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி புரிபவர் நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம். அங்கு வந்த ஒரு பெண்மணியிடம் அவரது மகளின் படிப்புக் குறித்து விசாரித்தார். அவர் பெருமையாக மகள் சென்னையில் பொறியியற் கல்லூரியில் இறுதியாண்டு படிப்பதாகக் கூறியதுடன் கர்வத்தோடு, ''சேச்சே நான் வேலைக்கு அனுப்புறதுக்காகப் படிக்க வைக்கவில்லை; எங்களுக்குத் தேவையும் இல்லை என்றார்''. இவருக்கு கோபம் வந்துவிட்டது. வேலைக்கு அனுப்பவில்லை என்றால் ஏன் படிக்க வைக்கிறீங்க? எதாவது டிப்ளோமா படிக்க வைக்க வேண்டியது தானே என்று பொரிந்து தள்ளினார். அந்தம்மா போய்விட நான் இவரிடம் ஏதோ படிக்க வைக்கிறாங்களே, அதைச் சொல்லுங்கள் என்றேன். ஆனால் சிந்திக்க வைத்தது.

இப்படித்தான் சிலர் 100% வேலை வாய்ப்புத் தரும் முன்னணிக் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஆனால் படிப்பைப் பாதியில் விட்டு விட்டுத் திருமணம் செய்து கொள்கின்றனர். அல்லது வேலைக்குப் போகாமலிருந்து விடுகின்றர். இதனால் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இந்த கல்லூரியில் படிக்க விழையும் மற்ற மாணவர்களின் வாய்ப்புக்களை இவர்கள் வீணாக்குகிறார் கள். இது கிராமங்களில் தான் என்றில்லை, நகர்ப்புறங்களிலும் தொடர்கிறது. என் மகன் படிக்கும் போது உடன் படித்த மாணவிகளில் ஏழு பேர், படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டுத் திரு மணம் செய்துகொண்டனராம். வேலை, திருமணம் என்பதெல்லாம் அவரவர் சொந்த விடயம் என்றாலும் மற்றவர்களுக்கான வாய்ப்புக் கெடுவது அவர்களுக்குப் புரிவதில்லை. ஆனால், இப்படிப் படிப்பைப் பாதியில் கைவிடும் பெண்கள், தங்கள் குழந்தைகளுக்கு இந்தத் தவறைச் செய்யமாட்டார்கள் என நிச்சயம் நம்பலாம்.

சாணக்கியா.

## பெண்ணின் நிபந்தனை

* தங்களை ஈனப்பிறவி என்று நினைத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இந்த வார்த்தை பிடிக்காது தான். இப்போது தாலி கட்டிக் கொண்டிருக்கும் பெண்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி வந்திருந்தால் அறுத்தெறியட்டும். அல்லது -கணவனின் கழுத்திலும் ஒரு கயிறு கட்ட வேண்டும். தங்களைத் தாங்களே அடிமை என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற சமூகம் என்றும் உருப்படியாகாது.
* நமது இலக்கியங்கள் யாவும் நியாயத்திற்காக, ஒழுக்கத்திற்காக எழுதப்பட்டிருந்தால் பெண்களுக்கு என்னென்ன நிபந்தனைகளை வைத்திருக்கின்றோமோ! அவ்வளவு நிபந்தனைகளையும் ஆண்களுக்கும் வைத்திருக்க வேண்டுமல்லவா?
* மேல் நாட்டுப் பெண்களின் இன்றைய தகுதியை எடுத்துக் கொண்டால் அவர்கள் எந்நாட்டு ஆண்பிள்ளைகளுடனும் எத்துறையிலும் போட்டி போடத் தகுந்த கல்வியும் தொழில் திறமையும் கொண்ட சக்தியை உடையவர்களாய் இருக்கின்றார்களே ஒழிய இந்திய சங்கீதம்- கோலாட்டம்- பின்னல்- குடும்ப சாஸ்திரங்கள் ஆகியவைகளைக் கற்று சீதையைப் போலவும், சந்திரமதியைப் போலவும், பெண் இனமான வாசுகியைப் போலவும்- நளாயினியைப் போலவும் இருக்கத் தகுதியற்றவர்களாகவே இருப்பார்கள்.

இ.இலக்கியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பெருமைகள் கொண்ட நெடுந்தீவுக் கிராமம்

"கடுகு சிறிதென்றாலும் காரம் பெரியது" நெடுந்தீவும் அப்படித்தான். சிறிய கிராமம் என்றாலும் அதன் வரலாற்றுப் பெருமைகள் பெரியது. 1972 ஆம் ஆண்டில் நெடுந்தீவுக்கு வந்திருந்த அமைச்சர் கே.குமாரசூரியர் இது ஒரு தனி நாடு போல் இருக்கிறது என்று கூறியுள்ளார். அவர் சிறிமாவோ அம்மையாரின் அரசில் தபாலமைச்சராக இருந்தவர்.

கி.பி.1ஆம், 2ஆம் நூற்றாண்டுகளை மையமாகக் கொண்டதே வெடியரசன் காலம். இது சிலப்பதிகார காலமாகும். வெடியரசன் கோட்டை நெடுந்தீவு மேற்குப்பகுதியில் உள்ளது. வெடியரசனின் மனைவி தனது உயிரைப் போக்கிக் கொண்ட தாலிக் கிணறு இருந்த பகுதியில் ஒரு சைத்தியத்தின் கட்டுமானம் காணப்படுகின்றது. எனினும் கடற்கரை வரையான பகுதிவரை தூண்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இந்தப் பிரதேசத்தில் 1976 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அகழ்வுகளின் போது கூரை ஓடுகள், ஓடுகளான் சிறிய மணிகள், சோழர் கால நாணயங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

இந்த ஆய்வுகள் இடம்பெற்ற சமயம் அது ஒருதிட்டமிட்ட முடிவுகளை எடுக்கும் நோக்குடன் செயற்படுவதாகக் கருதிய தீவுப் பகுதியின் நடாளுமன்ற உறுப்பினராக இருந்த பண்டிதர் கா.பொ. இரத்தினத்தின் நடவடிக்கையை அடுத்து அகழ்வு வேலைகள் நிறுத்தப்பட்டன. நடைபெற்ற அகழ்வு வேலைகள் இந்தப் பகுதியின் வரலாற்று உண்மைகளைக் கண்டறிவதற்கு மட்டுமே என்ற நிலையில் இடம் பெற்றிருந்தால் தமிழகத்துக்கும் நெடுந்தீவுக்குமான தொடர்புகள் பற்றிய முக்கிய தடயங்கள் கிடைத்திருக்கலாம்.

தமிழ் நாட்டின் விராலிமலைக்கும் புதுக்கோட்டைக்குமிடையில் நெடுந்தீவில் காணப்படும் சைத்தியங்கள் போன்று இருப்பதுடன் புத்தசிலைகளும் இருக்கிறன. அது அமைந்திருக்கும் ஊர் சித்திராங்கல் என ஞாபகம். பௌத்தமதம் தமிழர்களாலும் கைக்கொள்ளப்பட்டது. மணிமேகலை ஒரு பௌத்த துறவி என்பதும் கவனிக்கப்பட வேண்டியது. ஓர் இனத்தை அடையாளப்படுத்தும் நோக்கமாக அன்றி வரலாற்று உண்மைகளைக் கண்டறியும் நோக்குடன் இது எதிர்காலத்தில் ஆராயப்பட வேண்டும். தற்சமயம் இந்தப் பகுதி எல்லைகளிடப்பட்டுள்ளன. மீண்டும் அங்கு ஆய்வுகள் இடம்பெறலாம். பௌத்த மதம் சிங்கள மக்களுக்குரியதல்ல. விராலிமலை புதுக்கோட்டைப் பகுதிகளில் ஆதிகாலம் தொட்டு வாழ்ந்து வருபவர்கள் தமிழர்களே.

வெடியரசன்கோட்டை தவிர்ந்த சோழர்காலத்தைச் சேர்ந்த ஆலயத்தின்சிதைவுகளையும் புக்காட்டுப் பகுதியிலும் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு அணித்தாக போத்துக்கேயரின் கோட்டை. ஒன்றையும் அழிந்தும் சிதைந்தும் உள்ள நிலையில் காணலாம்.

இவைதவிர ஒல்லாந்தர் காலக் கட்டிடங்கள், புறாக் கூண்டுகள், குதிரைலாயங்கள் விக்டோரியா மகாராணியின் ஆட்சியை நினைவுபடுத்தும் குயின்ரவர் கோபுரம், இறுக்கமான கட்டமைப்புக் கொண்ட கல்வேலிகள், பழைமை வாய்ந்த ஆலயங்கள், 250 வருடங்களைத் தாண்டியும் செழிப்புடன் கிளைபரப்பி நிற்கும் ஆலமரம், 300 வருட வயதைக் கொண்ட பெருக்கு மரம் என நீண்ட காலமாக நெடுந்தீவுக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் இந்தச் சான்றுகளைப் பேணிக்காக்க எவருமே முன்வராதது ஒரு துரதிர்ஷ்டமானதே. 30 வருடங்களுக்கு முன் 7 ஆயிரத்துக்கும் அதிகமாக வெல்லைப் பகுதிகளில் சுதந்திரமாக மேய்ந்து கொண்டு திரிந்த குதிரைக் கூட்டங்களை இன்று காணமுடியவில்லை.

**நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடவும் பறவையினங்களைப் பார்த்து ரசிப்பதற்கும் வெளிநாடுகளிலிருந்து உல்லாசப் பயணிகள் வருகின்றனர்**

குதிரைக் கூட்டங்களையும் இதர புராதன சான்றுகளையும் பாதுகாக்க வேண்டுமென 1972 ஆம் ஆண்டில் நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் அப்போதைய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரிடம்(DRO)விடுத்த கோரிக்கை ஏற்கப்பட்டு, புராதன சின்னங்களைப் பாதுகாக்கும் படியும் குதிரைகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடாதெனவும் பகிரங்க உத்தரவு விடுக்கப்பட்டிருந்தும் இரவோடிரவாக யாருக்கும் தெரியாமல் குதிரைகளை வெளியிடங்களுக்குக் கொண்டு சென்ற சம்பவங்களும் இடம் பெறாமல் இல்லை.

யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடவும், பாஸ்போட் விசா இன்றிப் பறந்து வந்து இங்குள்ள நீர்த்தேக்கங்களில் நீந்திக்களிக்கும் பறவை இனங்களைப் பார்த்து ரசிப்பதற்குமாகத் தினமும் பத்துக்கும் அதிகமான பாஸ்போட் விசா பெற்ற உல்லாசப் பயணிகள் வெளிநாடுகளில் இருந்து நெடுந்தீவுக்கு வருவதுண்டு. இந்த உல்லாசிகள் இன்று நாகரிகம் என்ற பெயரில் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் தள்ளி வைக்கும் ஒடியற் கூழையும் ருசித்தும் ரசித்தும் சாப்பிடுவதுண்டு. துறைமுகத்தை அண்மித்திருந்த வாடி வீடு இவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருந்தது. வாடி வீட்டில் தங்கிச் சுடச் சுடக் கூழ் குடிக்கும் வெள்ளைக்காரர்கள் இது-கொட் (COT) ஆக இருக்கும் கூல் (கூழ்) COOLL என்று சொல்லுகிறார்கள் ஏனோ என்று ஆராய்ச்சி செய்த சம்பவங்களும் உண்டு.




இன்றைக்கு எல்லாமே வெறிச்சோடிக் கிடக்கிறது. குடியிருக்கும் பட்சத்தில் வளவுகளில் தென்னை நன்றாகக் காய்க்கும் என்பது போல் தினமும் ஓரளவு உல்லாசப் பயணிகள் வந்து சென்றால் இந்தச் சின்னங்களில் சிதைவுகள் பெருமளவில் இருந்திருக்காதோ என்னவோ. இன்று விஷஜந்துக்களின் குடியிருப்பாக பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள் மாறிவருவது தான் யதார்த்தமாகும்.

பொதுமக்கள் வெறும் நாகரிக மாயைகளில் இருந்து விடுபட்டு இந்தத் தீவின் பெருமைகளைக் காப்பதில் முன்னிற்க வேண்டும். ஊராளுமன்றமாயினும் சரி ஏனைய அரச திணைக்கங்களங்கள் சரி அதன் எதிர்காலம் எமது ஊரின் பெருமைகளை வரலாற்றுச் சிறப்புகளைப் பேணுவதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும். அண்மையில் ஈராக்கில் இடம்பெற்ற போரினால் அழிந்துபோன வரலாற்றுச் சின்னங்களை எண்ணி உலகம் கண்ணீர் சிந்தியது மக்கள் அறியாததல்ல. நமது முன்னோர்கள் தர மறந்த பல விடயங்களால் முக்கியத்துவம் வாய்ந்த பல சம்பவங்களை நாங்கள் தெரிந்து கொள்ள முடியாத நிலையில்லுள்ளோம்.

கடந்த காலங்களில் இங்கு வரும் உல்லாசப் பயணிகள் இந்தச் சின்னங்கள் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். சிதைந்து அழிந்து கொண்டு போகிறதே என்ற வருத்தத்தைக் தெரிவிக்கிறார்கள்.

இங்குள்ள புராதன சான்றுகள் "கிராமத்தின் "மகுடம்." அதைப் பாதுகாப்பதில் உள்ளுராட்சி மன்றம், உதவி அரச அதிபர் பணிமனை, பொதுமக்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் ஒன்றிணைய வேண்டும். ❋

# வேலணை மத்திய கல்லூரி



வேலணை மத்திய மகாவித்தியாலயம் தீவுப்பகுதியில் சிறந்த கல்விப் பாரம்பரியம் உருவாக முன்னிலை வகித்த கல்லூரியாகும். இலவசக் கல்வித்திட்டத்தின் தந்தை எனக் கூறப்படும் சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா கல்வி அமைச்சராக இருந்த சமயம் 1945 ஆம் ஆண்டில் கல்வி வளர்ச்சிக்கும், முக்கியமாக ஆங்கிலக் கல்விக்குமென மகாவித்தியாலயங்களை அமைக்கவேண்டுமென எண்ணியதும் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கிய அரசசபை உறுப்பினர் சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமியின் ஆர்வமும் இந்தப் பாடசாலை அமையக் காரணங்களாக இருந்தன. இலங்கையில் அவரால் அமைக்கத் தீர்மானிக்கப்பட்ட 54 மத்திய கல்லூரிகளில் இதுவும் ஒன்றாக அமைந்தது.

இக்கல்லூரி தற்சமயம் அமைந்துள்ள இடம் சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமியால் தெரிவு செய்யப்பட்டது. அவரது வழிகாட்டலுடன் வேலணைக் கிராமசபைத் தலைவராக இருந்த இ.மருதையினாரதும், மக்களிடமிருந்து கிடைத்த பணத்தின் உதவியுடனும் இதற்கெனக் கொட்டில்கள் அமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் முதல் அதிபராக ஏ.கே.கந்தையா 1945 இல் நியமிக்கப்பட்டார். இந்த அதிபரினால் அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆறாம் வகுப்பில் ஆங்கிலமொழிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற "சீனியர். ஸ்கூல் சேட்டிபிக்கட் "(எஸ்.எஸ்.சி) பரீட்சையில் ஆங்கிலத்தில் நூறு வீத மாணவர்கள் முதல் தடவையிலேயே சித்தியடைந்தனர். இதற்காக அதிபரும் ஆசிரியர்களும் கடினமான அர்ப்பணிப்பை வழங்கியிருந்தார்கள். இவரது காலத்தில் தோட்ட வேலைகள், விளையாட்டுப் போட்டிகளிலும் கல்லூரி சிறப்புப் பெற்றிருந்தது.

தீவுப்பகுதி மாணவர்களின் முக்கிய கல்வி நிலையம் இது என்பதால் அவர்கள் தங்கிப் படிக்கக்கூடியதாக விடுதி வசதிகள் தேவைப்பட்டன. இதற்கென வீடுகளை வாடகைக்குப் பெற்று ஆண், பெண்களுக்கான விடுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

இந்த விடுதிகளின் மேற்பார்வையாளராக முதன்முதலில் இருந்தவர் திருமதி சபாரட்ணம். மாணவர்களின் வருகை அதிகரிப்பினால் 1957 ஆம் ஆண்டில் புதிய மாடிக்கட்டடங்கள் அமைக்கும் பணி ஆரம்பித்தது. 1954 ஆம் ஆண்டு முதலாவது கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தவர் அப்போதைய பிரதமர் சேர்.ஜோண் கொத்தலாவல. வேலணை மத்திய கல்லூரிக்கான அத்திவாரக்கல் நாட்டியவர் சோல் பரிபிரபு ஆவார். இவர் இலங்கையின் தேசாதிபதியாக இருந்தவர். ஆரம்பம் முதல் இற்றைவரை கலை, விஞ்ஞானத் துறைகளில் மாணவர்கள் மிகுந்த திறமை பெற்றவர்களாக வரவேண்டும் என்பதில் அதிபர், ஆசிரியர்கள் மிகுந்த கரிசனையுள்ளவர்களாக இருந்து வருகின்றனர்.

1969 ஆம் ஆண்டில் மிகப் பெரிய அளவில் கலை, விஞ்ஞான கைப்பணிக் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. இது பாடசாலை மாணவர்களுக்குப் பயனுள்ளதாகவும் பெற்றோர்களது பாராட்டுக்களைப் பெற்றதாகவும் அமைந்திருந்தது. இந்தக் கண்காட்சி தொடர்பான நூலும் அப்போது வெளியிடப்பட்டது.

அதிபர் தம்புவின் காலத்தில் இருந்து இன்றுவரை கலை, மருத்துவம், பல் மருத்துவத்துறைகளுக்கெனப் பெருந்தொகை மாணவர்கள் தெரிவாகி பல்கலைக் கழகம் சென்று கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆங்கில அறிவை மேம்படுத்தும் வகையில் 'ஸ்போக்கின் இங்கிலீஸ்' கற்பித்தலும் முன்னைய காலங்களில் இடம் பெற்றிருந்தது.

முதலாவது அதிபர் ஏ.கே.கந்தையாவைத் தொடர்ந்து 1951 ஆம் ஆண்டில் தம்புவும் 1962 ஆம் ஆண்டில், ஏ.ரி.சபாரட்ணம், 1965 ஆம்ஆண்டில் சிவசிதம்பரம், 1967 ஆம் ஆண்டில் கே.எஸ். அரியரட்ணம், 1972 ஆம் ஆண்டில் சி.இராசநாயகம், 1984 ஆம் ஆண்டில் சிவராஜரட்ணம்,1987ஆம் ஆண்டில் எஸ்.சண்முகநாதன், 1989 ஆம் ஆண்டில் பொ.கேதாரநாதன், 1993 ஆம் ஆண்டில் க.கலாதரன் ஆகியோர் அதிபர்களாக இருந்தனர். தியாகராசா, பி.குண பாலசிங்கம், பண்டிதர் க.ராசையா, வி.பொன்னுத்துரை ஆகியோர் இடைக் காலங்களில் அதிபர்களாக இருந்துள்ளனர். மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கு உதவும் வகையில் முன்னாள் அதிபர் தம்புவின் நினைவாக ஞாபகார்த்த நிதியம் ஒன்றும் உள்ளது. பாடசாலையின் முன்புறம் அமைந்துள்ள நடராஜர் சிவகாமசுந்தரி ஆலயமும் பிரதமர் கொத்தலாவலாவினால் நாட்டிவைக்கப்பட்ட மலை வேம்பும் பாடசாலைக்கு மெருகூட்டும் வகையில் நிமிர்ந்து நிற்கின்றன.

இங்கு கல்விகற்ற பல பட்டதாரிகள் ஆசிரியர்களாக இங்கேயே இணைந்து தமது சொந்த ஊரின் கல்வி வளர்ச்சிக்காகச் சிறந்த சேவைகளை வழங்குகின்றனர் என்பதில் இப்பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை 2011 பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்

edexcel INTERNATIONAL BTEC

# HND
## Business Management



முகாமைத்துவத் துறையில் உங்கள் தகுதியையும், தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

"கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்"

## IIS CITY CAMPUS

200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk Web : www. iis.edu.lk

## விண்ணகப் பேரின்ப வாழ்வில்

12ஆம் ஆண்டு நினைவு | 2ஆம் ஆண்டு நினைவு





**அமரர் சு.அருளானந்தம்**
அன்னை மடியில் : 12.10.1926
ஆண்டவன் அடியில்: 19.01.1999

**திருமதி அ.மரியம்மா**
அன்னை மடியில் : 25.05.1929
ஆண்டவன் அடியில் : 21.01.2009

"கிறிஸ்துவோடு இறந்தோமாயின்-அவரோடு வாழ்வோம் என்பதை நம் விசுவாசம்".

அன்புடன் எம்மைப் பெற்றெடுத்து பாசத்துடன் வளர்த்தெடுத்து
வாழ்க்கைக்கு நல் வழிகாட்டிய எம் அன்புப் பெற்றோரின் ஆன்மா
இறைவன் சந்நிதானத்தில் இன்புற்றிருக்க இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்....

"ஞானவாசம்"
அம்பலவாணர் வீதி, உடுவில்.
தொ.பே: 0212240968

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**கனகரட்ணம் தங்கம்மா**

மண்ணில்: 25.05.1949 விண்ணில்: 29.01.2010

தெய்வமாகி உங்கள் அன்பு மட்டும்
எம் மனதை விட்டு அகலவில்லையே
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன அப்பா
உங்கள் அன்பைப் போல வருமா?
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் நித்தமும்
உங்கள் நினைவுகள்நிழலென
எங்களுடன் தொடர்ந்து வரும்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

### கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஜன.19

விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான இலவசக் கண்பரிசோதனை முகாம் இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு சுன்னாகம் ஐயண்ணா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.குகதாசன் பரிசோதனைகளை மேற்கொள்வார்.

இந்த இலவச பரிசோதனை முகாம் சுன்னாகம், மானிப்பாய் வட்டம், இணுவில், திருநெல்வேலி வட்டம், மல்லாகம்-தெல்லிப்பழை ஆகியவற்றின் லயன்ஸ் கழகங்களும் கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. (ஓ-10-313)

### தேவார முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.19

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணை தினத்தில் நடாத்திவரும். அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் புதன்கிழமை காலை 8.00 மணி முதல் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் கோண்டாவில் மேற்கு பார்வதி அம்பாள் ஆலயத்தில் ஆலய அறங்காவற் சபையினரின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

(வ)

கரைச்சி வடக்கு ப.நோ. கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன் (வரையறுக்கப்பட்டது)

## கேள்வி விண்ணப்பம் கோரல்

பின்வரும் தேவைகளுக்காக லொறி உரிமையாளர்களிடமிருந்து லொறிக் கூலிக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிமெந்து வவுனியாவிலிருந்து பரந்தனுக்கு (பக்கெற் ஒன்றுக்கான கூலி எவ்வளவு என்பதையும்)
2. சிமெந்து உள்ளூர் விநியோகத்துக்கு (கிளிநொச்சி மாவட்டம்) கூலி கோரல் எவ்வளவு என்பதனை (பக்கெற் ஒன்றுக்கான கூலி எவ்வளவு என்பதையும்.)
3. சோடா கொழும்பு - பரந்தன். (சுமைக்கான கூலி கோரல் எவ்வளவு என்பதனை குறிப்பிடுதல் வேண்டும் - பரந்தனிலிருந்து கொழும்பு செல்லும் போது வெற்றுப் போத்தல் ஏற்றிச் செல்லுதல் வேண்டும்).
4. உலக உணவுத்திட்டம் - கிளிநொச்சியில் இருந்து கிளைகளுக்கு ஏற்றிப் பறித்தல் (கிலோ மீற்றருக்கு எவ்வளவு எனக் கோரப்படுகின்றது)

மேற்கூறப்பட்ட கேள்வி விண்ணப்பம் 31.01.2011க்கு முன் *தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கம், பரந்தன்.* என்ற முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பப் படிவத்தை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.

அ.கேதீஸ்வரன்,
தலைவர்.

(சி- 574972)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - பளை)

தோற்றம்
22-02-1924

மறைவு
20-12-2010

சென்ற 20.12.2010 ஆம் ஆண்டில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.01.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"எம்மையெல்லாம் வாழ்வில் உயர்ச்சிபெற வழிகாட்டிய தந்தையே!! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"வாகையடிச் சந்தி"
மீசாலை மேற்கு, மீசாலை.

குடும்பத்தினர்
நிரந்தர முகவரி: இத்தாவில், பளை.

தை 2011 பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

## Advanced Diploma in Web Development

அதிக சம்பளத்துடன் கூடிய உடனடி வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தரக்கூடிய கற்கை நெறி.



**Course Content**
- Fundamentals of Computing
- Internet Application
- Web Development & Scripting Technology
- Advanced Web Development
- Content Management System
- LAMP Solution
- Wep Development Project

**Job Opportunities**
- Web Developer
- Web Designer
- Project Manager
- Search Engine Optimizer (SEO)
- Search Engine Marketer (SEM)
- PPC Specialist

"கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்"

## IIS CITY CAMPUS

200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk Web : www. iis.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

7



"ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்". ஆத்திரம் உடனடியாகவே அறிவைத் தவறான பாதையிலேயே வழிநடத்தும். அதன் பின்விளைவுகள் எதனையும் பற்றி யோசிக்காமல் முடிவுகளை எடுத்து விட்டுப் பின்னர் அந்த முடிவினை ஏன் எடுத்தோம்? என வருந்துகிறவர்கள் நிறையப்பேர்.

இந்த உத்தியைத்தான் யூலியன் அசாஞ்சே செய்தான். தனது எதிரிகளுக்கு அவர்களை அறியாமலே ஆத்திரத்தை உண்டுபண்ணி, அறிவுரீதியான முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக உணர்ச்சிவசப்பட்ட செயற்பாடுகளை அவர்கள் தெரிவு செய்யும் வண்ணம் யூலியன் திட்டமிட்டுக் காய் நகர்த்தினான். தன்னுடைய பொறிக்குள் நோர்டெல் நிறுவனமும் அவுஸ்திரேலியப்பொலிஸாரும் அப்பாவித்தனமாக மாட்டவேண்டிய இக்கட்டான சூழல் நீதிமன்றத்தில் ஏற்படப்போவதை எண்ணியே யூலியன் ஒரு ஏளனப் புன்னகையை உதட்டினில் தவழவிட்டான். நிகழப்போவது எதனையும் அறியாதவர்களாக யூலியனை அவசர அவசரமாக நீதிமன்றக் கூண்டில் பொலிஸார் ஏற்றினர். விசாரணை ஆரம்பமானது. அதிமேதாவித்தனமாக யூலியனை மாட்டவைத்து விட்டோம் என்ற எண்ணத்தில் அரச தரப்புச் சட்டத்தரணி யூலியனிடம் கேள்விகளைத் தொடுத்தார். அப்போதும் அவனது முகத்தில் எந்தவிதப் பதற்றமும் இல்லை;அதே புன்னகையே மாறாது குடிகொண்டிருந்தது.

அரச சட்டத்தரணி- (யூலியனிடம்) நீங்கள்தான் நோர்டெல் நிறுவனத்தை 4 நாள்கள் இயங்க விடாது முடக்கி வைத்திருந்தீர்களா?

யூலியன் - அப்படிச் செய்வதற்கு அந்த நிறுவனத்தின் தொடர்பாடல் இணையப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமானவையா?

அரச சட்டத்தரணி- அதைப்பற்றித் தெரியாது. ஆனால் மேற்குறித்த குற்றத்தை நோர்டெல் உங்கள் மீது சுமத்தியுள்ளது.

யூலியன் - என்ன குற்றம்?

அரச சட்டத்தரணி- சுமார் 4 லட்சம் வாடிக்கையாளர்கள் உங்களது முறைகேடான இணையத் திசைதிருப்பலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

யூலியன் - மன்னிக்கவும், இத்தகவல் தவறானது.

அரச சட்டத்தரணி-இல்லை. அந்த நிறுவனம் ஆதாரபூர்வமாக -எழுத்து மூலமாக -இதனைத் தெரிவித்துள்ளது.

யூலியன் - கனம் நீதிபதியவர்களே! ஒரு தயவானவேண்டுகோள். சட்டத்தரணி தெரிவித்த தரவுகள் உண்மையெனில் என்னைக் கைது செய்வதற்குப் பதில் நோர்டெல் நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தான் கைது செய்யவேண்டும்.

அரச சட்டத்தரணி- என்ன உளறுகிறீர்கள்?

நீதிபதி- திரு.யூலியன் போல் அசாஞ்சே நீங்கள் இவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன?

யூலியன் - காரணம் இருக்கிறது. இம்மாதம் நோர்டெல் நிறுவனம் தனக்கு வெறும் 2 லட்சம் வாடிக்கையாளர்களே இருப்பதாகக் கூறி அதற்குரிய வரியை மட்டுமே செலுத்தியுள்ளது. எனவே தவறான தகவலை அரசுக்கு வழங்கி, குறித்த நிறுவனம் வரி ஏய்ப்புச் செய்துள்ளது. அவ்வாறில்லாமல் 2 லட்சம்தான் அதன் உண்மையான வாடிக்கையாளர் எண்ணிக்கை எனில் நீதிமன்றத்தை அந்நிறுவனம் ஏமாற்றியுள்ளது. அத்துடன் நான் 'ஹக்கிங்' செய்தமைக்கு ஆதாரங்களை முன்வைத்தால் நான் எனது குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். அவ்வாறில்லாவிட்டால் ஏலவே குறிப்பிட்ட குற்றங்களுக்காகக் குறித்த நிறுவனத்தினரே தண்டிக்கப்படவேண்டும்,

(நோர்டெல் நிறுவன இயக்குனர் விசாரணைக் கூண்டில் ஏற்றப்படுகின்றார்)

நீதிபதி- யூலியன் போல் அசாஞ்சே கூறுவது உண்மையா?உங்களின் உண்மையான வாடிக்கையாளர் எண்ணிக்கை எவ்வளவு?

நோர்டெல் நிறுவன இயக்குனர் - (தடுமாறியபடி) 4 லட்சம்

நீதிபதி- இந்த எண்ணிக்கை எவ்வளவு காலமாக நீடிக்கிறது?

நோர்டெல் நிறுவன இயக்குனர்-4 மாதங்கள்

நீதிபதி- ஆனால் நீங்கள் வெறும் 2 லட்சம் வாடிக்கையாளர்களைக் கணக்குக் காட்டி அவர்களுக்கான வரியை மட்டுமா செலுத்தியுள்ளீர்கள்?

நோர்டெல் நிறுவன இயக்குனர்- ஆம்

நீதிபதி- யூலியன் போல் அசாஞ்சே உங்கள் தொடர்பு வலையமைப்பைத் தடை செய்தமைக்கு என்ன ஆதாரம் உண்டு?

நோர்டெல் நிறுவன இயக்குனர்- இப்போதைக்கு ஒன்றுமில்லை. ஆனால் அவர் விட்டுச்சென்ற குறிப்பு ஒன்று இணையத்தில் இருந்தது. ஆனால் அதுவும் சில நிமிடங்களில் அழிந்துவிடும் வகையில் செய்யப்பட்டிருந்ததால் அதனையும் சமர்ப்பிக்க முடியவில்லை. ஆனால் இதை யூலியன்தான் செய்தார் என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

வேறு விசாரணைகள் இன்றி, தகுந்த ஆதாரங்கள் இல்லாததால் யூலியன் விடுவிக்கப்பட்டான். அவுஸ்திரேலியப் பொலிஸாரின் முகத்தில் கிலோக்கணக்கில் கரி பூசப்பட்டது. ஆனால் நோர்டெல் நிறுவனம் அரசை ஏமாற்றியமைக்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டியேற்பட்டது. ஏறக்குறைய அத்துடன் நோர்டெலின் ஆட்டமே அடங்கிப்போனது. நோர்டெல் தளத்தினுள் தன்னுடைய ஹக்கிங் கெட்டித்தனத்தால் உள் நுழைந்த மறு நொடியே அதன் சுத்து மாத்துக்களை யூலியன் அக்கு வேறு ஆணிவேறாக அறிந்து வைத்ததாலேயே அவர்களை அவர்களது வாயாலேயே சிக்கவைக்க அவனால் முடிந்தது.

ஒளண்யன்

தன்மீதான ஆத்திரம் அவுஸ்திரேலியப் பொலிஸுக்கு அதிகரித்துள்ளதால் தன்மீதான கண்காணிப்பு அதிகரிக்கும் என்று யூலியன் எண்ணினான். கவனமாக இருக்கவேண்டும் எனச் சிலநடவடிக்கைகளை மேற்கொண்டான்.

எவ்வளவுதான் கவனமானவனாக இருந்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டும் யூலியனால் வெற்றிபெற முடியவில்லை. அவனும் மகாதவறொன்றை இழைத்தான். அத்தவறு இன்னமும் யூலியனை வாட்டியே வருகின்றது.

(திரைகள் இன்னும் திறக்கும்)

## அர்ஜுன ரணதுங்கவுக்கு பிடி ஆணை

கொழும்பு,ஜன 19

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் காலி நீதிமன்றில் பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டணியின் தலைவருமான சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்துள்ளதாக அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட சிலர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது. அது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் காலி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர் சமூகமளிக்கத் தவறியதன் காரணமாகவே அவருக்கெதிராகப் பிடி ஆணை உத்த பிறப்பிக்கப்பட்டுள்ளது. அர்ஜுன ரணதுங்க வெளிநாடு சென்றிருப்பதன் காரணமாகவே நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை என்று அவர்சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். (த)


## 31ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 13 ★ 06 ★ 1946

மறைவு 20 ★ 12 ★ 2010



கடந்த (20.12.2010) திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பஞ்சலிங்கம் செல்வராஜா**

(ஓய்வுபெற்ற சாரதி, சாலைப் பரிசோதகர்- இ.போ ச.)

அவர்களின் அந்தியேட்டி சபீண்டீகரணக் கிரியைகள் இன்று (19.01.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மில் லேன்,ஏழாலை மேற்கு, ஏழாலை. (109282)

மனைவி,பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 16.02.1934

தேவனடியில்: 19.01.2008

திருமதி

**சரஸ்வதி வடிவேலு**

ஆண்டவரை நேசித்து
அவனடியைப் போயடைந்தீர்!
ஆண்டுகள் மூன்று ஆனது இன்று
ஆயினும் உங்கள் அன்பான நினைவுகள்
ஆழ் மனதில் நிலைத்து நின்று
ஆசிகள் வழங்குதம்மா!

மீசாலை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

## வீடுகள் விற்பனைக்குண்டு

சுண்டிக்குளிப் பகுதியில் (பழையபூங்கா வீதியிலும், சுவாமியார் வீதியிலும்) வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு - 077 6146434

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011 ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

- ★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ P.ரவி,தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- ★ ஜெஸ்சி பாம், 1ஆம்கட்டை, பருத்தித்துறை.

T.P No 021 222 2867, 0776090926

## காவலாளி/தோட்டப் பராமரிப்பாளர் தேவை

**கொக்குவிலில் உள்ள வீட்டுக்கு காவலாளி/ தோட்டப் பராமரிப்பாளர் 50வயதுக்கு மேற்பட்டவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.**

தொடர்பு: 0779065666

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் அதிகாரசிங்கம்**

மலர்வு 08★03★1957

உதிர்வு 19★01★2009


அன்பின் அணிகலனாக
ஆண்டு இரண்டு உருண்டோடிய போதும்
பாசத்தின் உறைவிடமாய் விளங்கி
எம்மையெல்லாம் வழிநடத்தி
அன்பையும் அரவணைப்பையும் காட்டி வளர்த்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த
எமது அன்புத் தெய்வமே!

என்றும் நினைவு கூரும்:

சுன்னாகம், கந்தரோடை.

திருமதி கருணை நாயகி அதிகாரசிங்கம் அன்பின் மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், பேறாமக்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


தெற்கு சூடான் ஜனாதிபதி சல்வா கிர்(மத்தியில்), ஜிபாவில் சேவை செய்துவரும் கத்தோலிக்க பேராயர் பாலினோ லுகுடுவை தழுவி தனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்.

# சூடான் பிரிந்து செல்வதற்கு பெரும்பாலானோர் ஆதரவு

ஜூபா,ஜன. 19

ஆபிரிக்காவின் சூடானில், பிரிவினைக்காக நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பு முடிவடைந்தது. இதையடுத்து, ஐரோப்பா வாழ் சூடானியர்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பு எண்ணிக்கை பற்றிய முடிவு சனிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதில், ஐரோப்பா வாழ் சூடானியர்கள், பிரிவினைக்கு ஆதரவாக பெரும்பான்மை விகிதத்தில் வாக்களித்திருந்தனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தால் 2005இல் மேற்கொண்ட அமைதி ஒப்பந்தப்படி, கடந்த 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நாடு இரண்டாகப் பிரிவது குறித்த பிரிவினைக்கான பொது வாக்கெடுப்பு நடந்து முடிந்தது.

இதில் உள்நாடு மற்றும் ஐரோப்பா வாழ் சூடானியர்கள் கலந்துகொண்டு வாக்களித்தனர். வெள்ளிக்கிழமை வாக்குப் பதிவு முடிவடைந்ததை அடுத்து, முதல் நடவடிக்கையாக ஐரோப்பா வாழ் சூடானியர்களின் வாக்குகள் எண்ணப்பட்டு சனிக்கிழமை முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, பதிவான 640 வாக்குகளில் 97 சதவீதம் வாக்குகள், புதிய நாடு உருவாகுவதற்கு ஆதரவாக அளிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, நூற்றுக்கணக்கான சூடானியர்கள் இந்த வெற்றியை ஆரவாரத்துடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடினர்.

வாக்கெடுப்பின் முழு முடிவுகளும், பெப்ரவரி 6 அல்லது 14ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# தாயார் 'இன்ரர்நெற்' பார்க்க தொட்டியில் மூழ்கியது குழந்தை

நியூயோர்க்.ஜன. 19

அமெரிக்காவிலுள்ள டென்வரைச் சேர்ந்தவர் ஷன்னான் ஜோன்சன் (வயது - 43). இவருக்கு 13 மாத ஆண் குழந்தை இருந்தது.

சம்பவத்தன்று அக்குழந்தையை வீட்டிலுள்ள தண்ணீர் தொட்டியில் குளிக்க வைத்தார். அந்தக் குழந்தை தானாகக் குளித்துக்கொண்டிருந்தது.

இதைத் தொடர்ந்து அவர் ஒரு இணையத்தளத்தில் பலவித கேளிக்கை விளையாட்டுக்களை விளையாடினார். மேலும், அதில் பல நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எனவே, இணையத்தளத்தில் மூழ்கிய அவர் தனது குழந்தையை மறந்துவிட்டார். இதற்கிடையே குளித்துக்கொண்டிருந்த குழந்தை தண்ணீரில் மூழ்கி திணறிக்கொண்டிருந்தது.

திடீரென அவருக்கு குழந்தையின் நினைவு வந்தது. உடனே, பதறியடித்தபடி அங்கு ஓடினார். தண்ணீருக்குள் மூழ்கி கிடந்த குழந்தையைத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினார். அக்குழந்தையை பரிசோதித்த டாக்டர் இறந்துவிட்டது எனத் தெரிவித்தார்.

இச்சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்தது. இதைத் தொடர்ந்து அவரை பொலிஸார் கைதுசெய்தனர். அவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. தற்போது வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

குழந்தையை குளிக்க வைத்துவிட்டு இணையதளத்தில் மூழ்கிய ஷன்னான் ஜோன்சன் குற்றவாளியே என நீதிமன்றம் அறிவித்தது. (த)

# இந்திய அதிகாரியின் மனைவி தலைமறைவு

லண்டன், ஜன. 19

பிரிட்டனுக்கான இந்திய தூதரகத்தில் பணியாற்றும் இந்திய உயரதிகாரி ஒருவரின் மனைவி, கணவரின் அச்சுறுத்தலுக்குப் பயந்து தன் ஐந்து வயது மகனுடன் தலைமறைவாகிவிட்டார்.

பிரிட்டனில் தொடர்ந்து தங்கியிருப்பதற்கு அனுமதியளிக்கும் படியும், தனக்கு பாதுகாப்புக் கோரியும் அரசுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

மேற்கு பங்களாதேஷைச் சேர்ந்தவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியான அனில் வர்மா. இவர், பிரிட்டன் தலைநகர் லண்டனிலுள்ள இந்திய தூதரகத்தில் பொருளாதாரத்துறை உயரதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

இந்தியத் தூதுவர், துணைத் தூதுவர் ஆகியோரை அடுத்து மூன்றாவது இடத்தில் அனில் வர்மா உள்ளார். இவரது மனைவி பரோமித வர்மா. இவர்களுக்கு ஐந்து வயதில் ஒரு புதல்வன் இருக்கிறார்.

வர்மா ஒரு நாள் தனது மனைவியைக் கடுமையாகத் தாக்கினார். இதனால் மனைவி வீட்டிலிருந்து வெளியேறி பொலிஸில் முறைப்பாடு செய்தார். பதவியின் காரணமாக அவரிடம் பொலிஸாரால் அதிகளவில் விசாரணை நடத்த முடியவில்லை.

பரோமிதாவையும், அவரது குடும்பத்தையும் ஒழித்துக் கட்டி விடுவதாகவும், அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்து விடுவதாகவும் மிரட்டினார். இதனால் பயந்து போன பரோமிதா, தனது ஐந்து வயது புதல்வருடன் தலைமறைவானார்.

பிரிட்டன் அரசுக்கு அவர் எழுதிய கடிதத்தில், தன் விருப்பத்துக்கு மாறாக கணவர் இந்தியாவுக்கு அனுப்ப முயற்சிப்பதால், தான் பிரிட்டனில் இருக்கும்படி மனிதாபிமான அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

இதுகுறித்து, இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், இவ்விவகாரத்தை அமைச்சகமும், இந்தியத் தூதரகமும் விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவரிகோஸ்ட் மீது பொருளாதாரத் தடை

அபிட்ஜான், ஜன. 19

பதவி விலக மறுக்கும் ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி லோரன் பேக்போவுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் விதத்தில் எண்ணெய் நிறுவனங்கள், வங்கிகள், துறைமுகங்கள் ஆகியவற்றின் சொத்துகளை முடக்கும் விதத்தில், ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதி லோரன் பேக்போ, பதவி விலக மறுத்து வருகிறார். இதனால், அவரை பதவி விலக வைப்பதற்கான நெருக்கடி கொடுக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்தது.

இதையடுத்து, பேக்போ, அவரது மனைவி, அமைச்சர்கள், இராணுவ உயரதிகாரிகள், தளபதிகள், பாதுகாவலர்கள், சில செய்தி பத்திரிகைகளின் ஆசிரியர்கள் உள்ளிட்ட 84 பேரின் சொத்துகளை முடக்கி ஐரோப்பிய ஒன்றியம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், அரசுக்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, இரப்பர் தொழிற்றுறை, மின்சார உற்பத்தி நிறுவனம், தேசிய செய்தி நிறுவனமான ஆர்.டி.ஐ. ஆகியவற்றின் சொத்துகளையும் ஐரோப்பிய ஒன்றியம் முடக்கியுள்ளது.

இந்நிறுவனங்கள், பேக்போவின் சட்டவிரோத அரசுக்கு நிதியுதவி செய்வதால், இவற்றின் சொத்துகள் முடக்கப்பட்டன என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

அதேநேரம், செனகலில் இயங்கிவரும் மேற்கு ஆபிரிக்காவின் மத்திய வங்கியான பி.சி. இ.ஏ.ஓ.விலிருந்து பேக்போ தினமும் நிதியுதவி பெற்று வருகிறார். (த)

# சுவிஸ் வங்கிக் கணக்குகளின் விவரங்கள் விக்கிலீக்ஸிடம்

சுவிஸ் வங்கியின் ரகசிய கணக்கு விவரங்கள் விக்கிலீக்ஸுக்கு கிடைத்துள்ளதாக அதன் நிறுவநர் அசாஞ்சே அதிரடியாக அறிவித்துள்ளார்.

இந்த தகவல்களை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த விக்கிலீக்ஸ் ஆதரவாளரான றுடோல்வ் என்பவர் கையளித்ததாகவும் தெரிகிறது.

சிடி மூலம் பதிவுசெய்து இவ்வாறு கையளிக்கப்பட்ட தகவல்களில் உலகெங்கிலும் இருந்து சுமார் 2000 பேருடைய ரகசிய சுவிஸ் வங்கி கணக்கு விவரங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் இதில் இந்தியத் தொழிலதிபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசியல்வாதிகள் கணக்குகள் இருக்குமா என்று சந்தேகமும் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த முன்னாள் வங்கி அதிகாரியான றுடோல்வ் என்பவரால் தன்னிடம் இந்த தகவல்கள் கையளிக்கப்பட்டதாக அசாஞ்சே தெரிவித்துள்ளார்.

இத்தகவல்களை விக்கிலீக்ஸில் வெளியிடுவது தொடர்பாக ஆலோசித்து வருவதாக தெரிவித்திருக்கும் அசாஞ்சே தன்னிடம் கிடைத்த தகவல்களில் இருப்பவர்கள் ஆசியா, அமெரிக்க, பிரிட்டன், ஒஸ்ரியா மற்றும் ஜேர்மன் நாடுகளைச் சேர்ந்தவர்களாவர் என்றும் கூறியுள்ளார். (த)

# நைஜீரியாவின் ஜனாதிபதித் தேர்தல் ஏப்ரல் மாதத்தில்


அபுஜா, ஜன. 19

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில், தற்போது குட்லக் ஜோனாதன் ஜனாதிபதியாக இருக்கிறார். ஜனாதிபதிக்கான பொதுத்தேர்தல், எதிர்வரும் ஏப்ரலில் நடக்க இருக்கிறது.

ஆளுங்கட்சியான மக்கள் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக ஜோனாதனும், பிரதான எதிர்க்கட்சியான நைஜீரிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில் நுஹு ரிபாட் என்பவரும் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் வாக்களிப்பதற்கான வாக்காளர் பதிவு சனிக்கிழமை ஆரம்பமாகியது. இதில், ஏழு கோடி பேர் பதிவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பதிவு, எதிர்வரும் 29ஆம் திகதி வரை நடக்கும்.

அங்கு வாக்களிப்பதற்கு 18 வயது குறைந்தபட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (த)



ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டிற்கு சென்றிருந்த ஐ.நா.பொதுச்செயலாளர் பான்-கீ-மூனை அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சுல்தான் அகமத் அல்-ஜாபர், அபுதாபி நகரில் உள்ள அமைச்சக அலுவலகத்தில் வரவேற்றார்.

# 23 சிப்பாய்களுக்கு பங்களாதேஷில் 7 ஆண்டுகள் சிறை

டாக்கா, ஜன. 19

பங்களாதேஷில் வடக்கு தினாஷ்பூர் மாவட்டத்தில் புஸ்பரி என்ற இடத்தில் இராணுவ ஆயுதக் கிடங்கு உள்ளது. அங்கு பணியிலிருந்த எல்லை பாதுகாப்புப் படை இராணுவச் சிப்பாய்கள் கல்வரத்தில் ஈடுபட்டனர்.

இதில் 57 இராணுவ அதிகாரிகள் உட்பட 72 பேர் கொல்லப்பட்டனர். மேலும் அங்கிருந்த ஆயுதங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதியும், 26ஆம் திகதியும் நடந்தது. இது தொடர்பாக பல இராணுவச் சிப்பாய்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மீது பங்களாதேஷ் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் 23 பேருக்கு தலா 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறினார். (த)

# 1, 400 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின

## ஆஸியில் தொடர்கிறது மழை

கான்பரா,ஜன.19

ஆஸ்திரேலியாவின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு தற்போது அதன் தென்பகுதி மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக்க ஆரம்பித்துவிட்டன.

விக்டோரியா மாகாணத்தில் 1,400இற்கும் மேற்பட்ட வீடுகள், வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 3,500 மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில், 'லா நினா' பருவநிலை மாறுபாட்டால் கடந்த 50 நாள்களுக்கும் மேலாக வரலாறு காணாத மழையும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளன.

இந்த வெள்ளத்தால் நாட்டின் வடபகுதி மாகாணமான குயின்ஸ்லாந்து மோசமாகப் பாதிக்கப்பட்டது. அம்மாகாணத்தில் வெள்ளத்திற்குப் பலியானோரின் எண்ணிக்கை 18ஆக உயர்ந்துள்ளது.

நாட்டின் மூன்றாவது பெரிய நகரும், மாகாணத் தலைநகருமான பிரிஸ்பேனில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட குப்பைகள், 3 மீ. உயரம், 3 மீ. அகலத்தில் 100 மீ. நீள பரப்பளவில் தேங்கியுள்ளன.

தற்போது, குயின்ஸ்லாந்து மீண்டுவரும் வேளையில், வெள்ளம் தெற்கு நோக்கிப் பாய ஆரம்பித்துள்ளது. நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா ஆகிய மாகாணங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்தின் பல நகரங்கள் வெள்ளத்தால் துண்டிக்கப்பட்டு விட்டதால், ஆயிரக்கணக்கான மக்கள் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர்.

விக்டோரியாவில், ஹோர்ஷாம், ரோச்செஸ்டர் ஆகிய நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 1,400 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. மூவாயிரத்து 500 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். (த)

# டுனிசியாவில் புதிய அரசு

வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்று வந்த டுனிசியா நாட்டில் புதிய அரசு ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரதமர் மொஹமட் கனோச்சி இதனை நேற்றுமுன் தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இந்த நிலையில், அரசில் இருந்து வெளியேறி இருந்த வெளிநாட்டு, பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு அமைச்சர்கள் தமது கடமைகளுக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

# 6 வருடங்களில் மம்மத் யானைகள்

## குளோனிங் முறையில் உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சி

சுமார் 12 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் அழிந்ததாக கூறப்படும் மம்மத்கள் எனப்படும் இராட்சத யானைகளை மீண்டும் குளோனிங் முறையில் உருவாக்க விஞ்ஞானிகள் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜப்பான், அமெரிக்க மற்றும் ரஷ்ய விஞ்ஞானிகள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக சீ.என்.என் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஆறு ஆண்டுகளில் குளோனிங் முறையில் மம்மத் குட்டி ஒன்றை உருவாக்க முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ரஷ்யாவில் மீட்கப்பட்ட மம்மத் இன இராட்சத யானையின் எச்சத்தில் இருந்து டீ.என்.ஏக்களை பெற்று, ஆபிரிக்காவில் உள்ள யானையின் கருமுட்டையில் செலுத்தி, குளோனிங் முறையில் இந்த குட்டி உருவாக்கப்படவுள்ளது.

ஜப்பானின் கயோட்டோ பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பேராசிரியர் அக்கீரா இரிடானி தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்த முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

# அமெ.டொலருக்குப் பதிலாக யுவான்

அமெரிக்க டொலரினால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட சர்வதேச நாணய முறைமை கடந்த காலத்திற்குரியதென இவ்வாரம் அமெரிக்காவுக்கான விஜயம் மேற்கொள்ளவுள்ள சீன ஜனாதிபதி ஹு ஜிந்தாவோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்க டொலருக்குப் பதிலாக சீன நாணயமான யுவானை சர்வதேச அளவில் புழக்கத்தில் விடுவதற்கு சீனா நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஜிந்தாவோ தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனுக்கான தனது விஜயத்திற்கு முன்னர் இரு அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறான கருத்தினை தெரிவித்துள்ளார்.

ஹூ ஜிந்தாவோவின் கருத்துக்கள் இரு வல்லரசு நாடுகளிடையேயும் (அமெரிக்கா, சீனா) நாணய விவகாரத்தில் பதற்றம் தொடர்வதை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

ஏனைய நாடுகளின் ஏற்றுமதிச் செலவீனத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதியை குறைக்கும் நடவடிக்கை என கருதப்படும் அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கான 600 பில்லியன் டொலர் நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும் ஹு ஜிந்தாவோ கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் நாணயக் கொள்கையானது உலக பொருளாதார பின்னடைவு மற்றும் மூலதனப் பாய்ச்சல் ஆகியவற்றின் மீது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அமெரிக்க டொலரின் திரவத் தன்மையினை ஸ்திரமாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாக தக்கவைத்துக் கொள்ளவேண்டும் எனவும் வாஷிங்டன் போஸ்ற் மற்றும் வால் ஸ்ட்ரீட் ஜேர்ணல் ஆகிய பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் ஜிந்தாவோ குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

**கரவெட்டி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**
**நெல்லியடி, கரவெட்டி**

கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்தல் 22.01.2011 சனிக்கிழமை

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20.02இன்படி தன்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக, இக்கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கு அமைய கீழ் குறிப்பிடும் கால அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

01. கிளைப் பொதுச்சபைக் கூட்ட ஆரம்பம் - 22.01.2011 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி.
02. கூட்டம் நடைபெறும் இடங்கள் விவரம் கீழ்வருமாறு.

| தொ.இல | கிளை இல | கிளைப்பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 1 | 146 | மடத்துப்புலம் | கலைமகள் ச.ச.நிலையம், இமையாணன் |
| 2 | 147 | கரணவாய் தெற்கு | வள்ளுவர் ச.ச.நிலையம், கரணவாய் |
| 3 | 148 | உடுப்பிட்டி | நாவலர் பாலர் பாடசாலை, உடுப்பிட்டி |
| 4 | 149 | கம்பர்மலை | கலைவாணி ச.ச.நிலையம், கம்பர்மலை |
| 5 | 150 | வல்வெட்டி | பராசக்தி ச.ச.நிலையம், மாவடி |
| 6 | 151 | கரணவாய் வடக்கு | கலைமதி பாலர் பாடசாலை, நவிண்டில் |
| 7 | 152 | இமையாணன் | கலைமகள் பாலர் பாடசாலை, இமையாணன் |
| 8 | 153 | கரவெட்டி மேற்கு | திருவள்ளுவர் பாலர் பாடசாலை, கரவட்டி தெற்கு |
| 9 | 157 | கரவெட்டி வடக்கு | நரசிங்கர் ஆலயம், தேவரையாளி |
| 10 | 158 | அல்வாய் தெற்கு | மனோகரா ச.ச.நிலையம், அல்வாய் |
| 11 | 159 | மண்டான் | மாவலி ச.ச.நிலையம், மண்டான் |

கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி,
17.01.2011

(சி-574988)

கி.யோகநாதன்,
கௌரவ செயலாளர்,
கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## University of Jaffna
## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

| Works / Service Details | Security deposit (Rs.) | Non-refundable deposit(Rs.) | Approximate diret cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|
| Improvements to Parking Facilities-Construction of Garages / Rest room near Administration Building, University of Jaffna | 25,000.00 | 750.00 | 2.3 | C8 (Buildings) |

Bid forms may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the shroff's Counter, University of Jaffna till 01.02.2011.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work / service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.O. Box 57, Thirunelvely, Jaffna. or could be deposited in bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m. on 07.02.2011 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of tenders.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

*P.O. Box 57,*
*Thirunelvely, Jaffna.*
*18.01.2011*

(C/574981)

Registrar,
*University of Jaffna.*

# கொவிசெத
**உத்தியோகப்பூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு இலக்கம் **790**
சீட்டிழுப்பு திகதி **17.01.2011**

எழுத்து: **T**
வெற்றி இலக்கங்கள்: **03 07 21 23**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,051,752.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 16 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 329 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 667 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16392 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9348 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 233142 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 36771 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **10,056,380.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 11,600,947.20**

வெற்றிப் பெறும் சீட்டுகள் மோதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473560
இணையதளம்: www.nlb.lk

# 3M Sri Lanka




3M நிறுவனத்தின் வாகன பராமரிப்பு உற்பத்திகள் மற்றும் அதன் பாவனை முறைகள் தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 23ம் திகதி ஜனவரி 2011 பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள IIS City Campus மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு எமது நிறுவனத்தின் வாகன பராமரிப்பு உற்பத்திகள் மற்றும் பாவனை முறைமைகளை அறிந்து கொள்ளுமாறு அன்புடன் வரவேற்கின்றோம்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் அதற்கான அழைப்பிதழ்களை பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

**Mobile: 0712797894 (G.Sunderesh)**

3M

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
25
05
1937

மறைவு
22
01
2008



## சின்னையா குணரட்ணம்
**(உரிமையாளர், லக்கி கிறீம் ஹவுஸ்)**
**திதி: பூரணை**

எங்கள் அன்புத் தெய்வமே! வருடங்கள் மூன்று மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் எம்மோடு நீங்கள் வாழ்ந்த
பசுமையான நினைவுகள் அத்தனையும்
என்றென்றும் எம்மனதில் நிறைந்திருக்கும் நிலைகொள்ளும்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'... வாசா',
... வடக்கு, மானிப்பாய்.

**குடும்பத்தினர்.**

(109466)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம்
## GENERAL PHYCHOTHERAPHY

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

**20.01.2011 முதல் 25.01.2011 வரை யாழில்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெறப் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். எந்தவித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம்: 250/=

**கமல் ரூறிஸ்ற் இன்**
(வெலிங்டன் சந்திக்கருகில் பெருமாள் கோவிலுக்கருகில் இடையில்)
(ரிவதுர்ஷன் எலக்ரோனிக் பேஸ்மாநு)
392, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.: 0719315664, 0777569205



# UK STUDENT VISA

- IELTS: Not Necessary
- College Admission arranged
- Bank Sponsors arranged
- 100% Visa Success

**SIC CENTER**
734, Hospital Road, Jaffna.
Tel: 0776 209887 / 0777 767818



# Gods own Children (G.O.C) இன்
## இலவச தையல் பயிற்சி (சங்கானையில்)



உடல், உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்களுக்கும் தையல்பயிற்சிவகுப்புகள் இலவசமாக வழங்கப்படும்.தையல் பயிற்சி நெறிக்கு மேற்கூறப்பட்ட தகுதியுடைய பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவத்தினை கீழுள்ள முகவரியில் பெற்று 25.01.2011 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கவும்.

முகவரி:- British Business School
நிகரை வைரவ கோயிலடி,
(AGA அலுவலகம் அருகில்) சங்கானை.

தொ.பே: 021 222 5796


# மரண அறிவித்தல்



## இராசா முருகையா

கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா முருகையா 17.01.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும் வீரகத்தி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மீனாதேவியின் அன்புக் கணவரும் சுகிந்தா (டென்மார்க்), சுகிந்தன், வனிதா (நோர்வே), முகுந்தன் (ஜேர்மனி), சுரேகா (பிரித்தானியா), ஜெயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலகுமார் (டென்மார்க்), பிறேமகாந்தன் (நோர்வே), ராதா (ஜேர்மனி), சந்திரன் (பிரித்தானியா) ஆகியோரின் அருமை மாமனும் மயில்வாகனம், அன்னம்மா, பூமணி, இரத்தினம், நல்லம்மா ஆகியோரின் ஆசைத் தம்பியும் இராசா, இந்திராணி, ஐயாத்துரை, மங்களம், இராசலஷ்மி, செல்லத்துரை, சதாசிவம், நவரத்தினம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திசானா, சவீதா, ஹரணி (டென்மார்க்), அபிஷன், தேனுஜா (நோர்வே), கனிஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (21.01.2011) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தரோடை மேற்கு,*
*சுன்னாகம். தொ.பே.: 021 224 1006*

தகவல்:
குடும்பத்தினர்.

# சங்காபிஷேகம்

கோப்பாய், ஜன.19

கோப்பாய் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோயில் வருடாந்த சங்காபிஷேகப் பெருவிழா நாளை வியாழக் கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் (ஒ-72)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜன.19

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற உள்ளது.

பாடசாலையின் பிரதி அதிபர் செல்வி றூபி இராஜரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், ஓய்வுபெற்ற ஆசிரியர் க.துரைசிங்கம், பழைய மாணவர் சா.தங்கரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-10-55)

# வேலணைக் கோட்ட அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.19

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

2011ஆம் ஆண்டுக்கான முன்திட்டமிடல்கள், பாடசாலை மட்ட அபிவிருத்திக் குழுக்கள், பாடசாலைத் தேவைகள் ஆகியன தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

# வடமராட்சி கிழக்கில் தற்காலிக வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.19

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை கிராம அலுவலர் பிரிவில் ' ஐ.ஓ.எம்., கே.எஸ்.ஏ.சி. , இசட் ஓ. ஏ ஆகிய நிறுவனங்களால் அமைக்கப்பட்ட 100 தற்காலிக வீடுகள் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு உடுத்துறையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராகளாக ' ஐ.ஓ.எம்.' நிறுவன வட மராட்சி கிழக்குப் பொறுப்பதிகாரி சொபி நியோன் , ஜே.எஸ்.ஏ.சி. நிறுவன இணைப்பாளர் என். சுகிர்தராஜ், இசட் ஓ.ஏ நிறுவன திட்டமுகாமையாளர் ஜே. ஜனடி வோல்ரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-10)

# தைப்பூசத் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.19

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்று அம்பாள் அழகிய கைலாய வாகனத்தில் வீதியுலா வருவார். அன்றைய தினம் வித்தியாரம் பம், அன்னப்பிரசரத்னம், கர்ணவேதனம் ஆகியனவும் இடம்பெறும்.

* * *

யாழ்.நகரில் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலில் தைப்பூசத் திருவிழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-10)


## வேலை ஆள்கள் தேவை

காகிதாதிகள் விற்பனை நிலையத்துக்கு இளமைத் துடிப்பும், ஆர்வமும் உள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் மற்றும் காசாளர் மட்டும் முன் அனுபவமுள்ளவர் உடன் தேவை.
300, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.



# தேவை

கடற்கரையை அண்மித்த காணி, காரியாலய இடவசதி மற்றும் யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துள்ள காணி உடனடியாகத்தேவை.

ஹோட்டல் செயற்றிட்டங்கள் மற்றும் காரியாலய இடவசதிக்கான கடற்கரைக்கு முகப்பாக அமையப்பெற்ற காணி மற்றும் யாழ் குடா நாட்டின் மத்தியில் அமையப்பெற்ற காணி ஆகியன உடனடியாக தேவைப்படுகின்றன. தங்களின் காணி பற்றிய விபரங்களை அறியத்தரவும். மேற்படி இடங்களை பார்வையிடும் பொருட்டு ஜனவரி 21ஆம் திகதி முதல் 23 வரை ஹோட்டல் 'டில்கோ' மற்றும் யாழ்ப்பாண சர்வதேச சந்தையில் இல.149 மற்றும் 150 இல் அமைந்துள்ள 'மெக்வூட்' காட்சியறையிலும் நாம் பிரசன்ன மாயிருப்போம்.

தொடர்புகளுக்கு :
சூதீன் : 0778424248
வித்யா : 0774632726
தொலைநகல் : 0115338024
மின்அஞ்சல் : projects@mackwoods.com


# கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தின் ஆரம்பகால தலை வரும் கழக உறுப்பினருமாகிய சி.பாஸ்கரன் (தம்பி) அவர்களின் பாசமிகு தாய்

## சின்னத்தம்பி நாகம்மா

அவர்களின் மறைவையொட்டி எமது கழகத்தின் சார்பில் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆவரங்கால்.* (109480) மத்திய விளையாட்டுக் கழகம்.


# பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை

பாவிக்கப்பட்ட பழைய கணினிகள், பிரிண்ரர்கள், ரயர்கள், மர, இரும்புத் தளபாடங்கள் மற்றும் நானாவித உபகரணங்களின் ஏல விற்பனை

காலம்: 27.01.2011 வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி
இடம் : சுகாதார கிராமம், பண்ணை
பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பணிமனையில் நேரடியாகத் தொடர்பு கொண்டு (Procurement & Logistic Unit இல்) பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
(சி/574995)


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்வராசா துளசிதாசன்

(TULSI CABLE TV - உரிமையாளர்)

இகம்: 12-06-1974
பரம்: 22.01.2008
திதி: தை மாத பூரணை




எங்கள் குடும்பத்தின்
தீபமாய்த் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் எம்மைப் பேணிப்
பாதுகாத்து நல்லறிவூட்டி
நல்வழிப்படுத்தி இன்று
எம்மை யெல்லாம்
விட்டுப் பிரிந்து மூன்று
ஆண்டுகள் சென்றாலும்
உங்களை நாம் மறவோம்.

*கலட்டி, கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.'*
Tulsi cable T.V., Jaffna,
T.P.: 0773144991

என்றும் உங்கள் நினைவுடன்
வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பார்வைக்கு உலகக் கிண்ணம்



யாழ்ப்பாணம்,ஜன.19

ஐ.சி.சி உலகக்கிண்ணம் யாழ்ப்பாண மக்களின் பார்வைக்காக நேற்றுக் காலை முதல் யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியின் நடுவில் வைக்கப்பட்டது.

முன்னதாக நேற்றுக்காலை யாழ்.பொலிஸ் நிலையத்திலிருந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்புடன் உலகக்கிண்ணம் பவனியாக எடுத்துவரப்பட்டு யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக வைக்கப்பட்டது.

இலங்கை அணி 1996 ஆம் ஆண்டு உலக்கிண்ணத்தை வென்றபோது அந்த அணியில் இடம் பிடித்திருந்த பந்து வீச்சாளரான ரவீந்திர புஸ்பகுமார பவனியில் கிண்ணத்தை ஏந்தி வந்தார்.

பவனியாகக் கொண்டு வரப்பட்ட கிண்ணம் யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. உலகக்கிண்ணத்துடன் மிகப் பெரிய கிரிக்கெட் பந்து ஒன்றும் அங்கு கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டிருந்தது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய



நாடுகள் இணைந்து நடத்தும் இவ்வாண்டு உலகக்கிண்ணப் போட்டியில் இலங்கை அணி கிண்ணத்தை வெல்லவேண்டும் என வாழ்த்துக் கூறி உலகக் கிண்ணத்துடன் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த மிகப் பெரிய வெள்ளை நிற



கிரிக்கெட் பந்தில் இந்த வைபவத்தில் கலந்து கொண்ட இராணுவ அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொலிஸார் எனப்பலர் வர்ண அடையாளங்களைப் பதித்தனர்.

இந்த வைபவத்தில் இராணுவ உயர் அதிகாரிகள், பாடசாலைச்சமூகத்தினர், பொலிஸார், கல்வி அதிகாரிகள் உட்படப்பலர் கலந்து கொண்டனர்.

உலக்கிண்ணப் பார்வைக்கு வைக்கும் ஏற்பாடுகளை யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கம் மேற்கொண்டிருந்தது. நேற்று பிற்பகல் 1 மணி வரை யாழ்.நகரப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த உலகக்கிண்ணம் மாலை பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டது. (த-23)

## குறுக்கறுத்து ஓடும் போட்டியில் வென்றோர்

வலி.வடக்கு, ஜன.19

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் பெண்களுக்கு இடையே நடத்திய கிராமங்களைக் குறுக்கறுத்து ஓடும் போட்டியில் முதல் இரண்டு இடங்களையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த என்.சுமதி, கு.ஜனுஷா ஆகிய இருவரும் பெற்றுக்கொண்டார்கள். (த-86)

### வீரம் செறிந்தவர்கள்...



தொடரட்டும்: வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த டிசெம்பர் மாதம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 8 வயது பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்ற சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி ஏஞ்சலினுக்கு மேசைப்பந்தாட்டச் சம்மேளனச் செயலாளர் சந்தன பெரேரா சன்றிதழ் வழங்குகின்றார். (23)

# குறுக்கறுத்து ஓடும் போட்டியில் யாழ்ப்பாண வீரர்கள் ஆர்வமில்லை

வலி.வடக்கு, ஜன.19

இவ்வாண்டு நடைபெற்ற கிராமங்களைக் குறுக்கறுத்து ஓடும் போட்டியில் ஆகக் குறைந்தது எண்பது வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் குறைந்த எண்ணிக்கையானவர்களே கலந்து கொண்டார்கள்.

யாழ்.மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எப். ஏ.ரூபசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

நவாலி மகா வித்தியாலயத்தில் கிராமங்களைக் குறுக்கறுத்தோடும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட விளையாட்டு அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிராமங்களை குறுக்கறுத்தோடும் போட்டி முதல்தடவையாக யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது. கடந்த ஆண்டு மாகாண மட்டப்போட்டிகளில் யாழ்.மாவட்ட வீரர்கள், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதில் கலந்து கொண்டபோதிலும் பலர் வெற்றிகளை ஈட்டியுள்ளார்கள்.

இது ஒருமரதன் ஓட்டப்போட்டி அல்ல. எமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் எமது பகுதியில் உள்ள வீரர்கள், வீராங்கனைகள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடல், உள பாதிப்புகளுக்கு உள்ளாகியதுடன், வளங்களும் இல்லாமல் இருந்தனர். இதனால் பல பின்னடைவுகளை நாம் சந்திக்க வேண்டிய நிலைகாணப்பட்டது.

கடந்த காலத்தில் விளையாட்டு அலுவலர்கள் பதவிகளில் பல வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், யாழ்.மாவட்ட அணி மாகாண மட்டத்தில் வெற்றிகளைப் பெற்றதுடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் சாதித்தது.

கடந்த ஆண்டுகளைப் போல இல்லாமல் இவ்வாண்டு நூறு வீதமாக விளையாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன்மாவட்ட மட்டப் பயிற்றுவிப்பாளர்களும் உள்ளார்கள்.

இந்த நிலையில் வட மாகாண ஆளுநர், கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சின் செயலாளர், விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ஆகியோர் எமது வீரர்கள் தேசிய ரீதியில் சிறந்த பெறு பேறுகளைப் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள்.

இதற்கு அனைத்து விளையாட்டு அலுவலர்களும், வீரர்கள், வீராங்கனைகளும் கடுமையாக உழைக்க வேண்டும் - என்றார்.

நவாலி மகா வித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் தனது உரையில், இன்று நடைபெற்ற போட்டியில் எமது பாடசாலை வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்ளாமை கவலை தருவதாக உள்ளது. குறிப்பிட்ட போட்டி நடைபெறுவது தொடர்பான தகவல் எமக்குப் பிந்திக் கிடைத்தமையால் எமது பாடசாலை அணியினர் இதில் கலந்து கொள்ள முடியவில்லை. அடுத்த ஆண்டு நடைபெறும் போட்டிகளில் எமது பாடசாலை வீரர்கள் நிச்சய[illegible] கலந்து கொள்வார்கள்.

இத்தகைய போட்டிகள் கிராம மட்டங்களில் நடைபெறுவது வரவேற்கத்தக்கதாகும். இது கிராம மட்டத்தில் ஒரு விழிப்புனர்வை ஏற்படுத்துவதுடன் மனமாற்றங்களையும் கொண்டு வரக்கூடியதாகும்.

மாணவர்கள் கல்வியுடன் மட்டும் நிற்காது விளையாட்டுத் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். இன்று விளையாட்டுத்துறையும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் துறையாகக் காணப்படுவதுடன் அதிக பணம் ஈட்டும் துறையாகவும் உள்ளது - என்றார். (த-86)

# உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, ஜன.19

வலிகாமம் வலயக் கல்விக் கோட்டங்களுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட 17, 19 வயதுப் பிரிவுப் பாடசாலை அணிகளுக்கு இடையே உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று புதன்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானங்களில் ஆரம்பமாகவுள்ளன.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டிகளின் விவரம் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

**காலை 8.30 மணி**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.
* வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**முற்பகல் 11 மணி**

* தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
* தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

**19 வயதுப் பிரிவு**

* அராலி இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
* இணுவில் மத்திய கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

**காலை 8.30 மணி**

* அராலி இந்துக் கல்லூரி எதிர் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம்.
* வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

**முற்பகல் 11 மணி**

* வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.
* அராலி இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**முற்பகல் 11 மணி**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.
* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணிக்கு 274 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது நியூஸி.



பிரெண்டன் மக்கலம்

வெலிங்டனில் நடைபெற்றுவரும் டெஸ்ட் மோதலில், பாகிஸ்தானுக்கு நியூஸிலாந்து 274 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்துள்ளது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது. இந்நிலையில், கடந்த சனியன்று இரண்டாவது ஆட்டம் ஆரம்பமானது.

நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸிற்காக 356 ஓட்டங்களையும், பாகிஸ்தான் அணி 376 ஓட்டங்களையும் சேர்த்தன.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது விக்கெட் இழப்பின்றி 9 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. குப்தில் ஓர் ஓட்டத்துடனும், மக்கலம் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுத் தனது இன்னிங்ஸை மீண்டும் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, முதல் விக்கெட்டுக்காக 120 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது, ஆரம்ப வீரரான மக்கலத்தை இழந்தது. அவர் 64 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த வில்லியம்சன் (15) சிறிது நேரம் ஆடிவிட்டு ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்ப வீரரான குப்தில் 73 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

பின்னர் வந்த ரெய்டர் (17), பிராங்ளின் (6), யங் (20) ஆகியோரும் விரைவாகவே ஆட்டமிழந்து சென்றனர். ஒரு முனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நின்று நிதானமாக ஆடிக்கொண்டிருந்த ரெய்லர் அரைச்சதம் (52) அடித்த கையோடு ஆட்டமிழந்து சென்றார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து வந்த வீரர்களான வெற்றோரி (1), ஆர்னெல் (0), மார்டின் (1) ஆகியோர் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினர்.

இறுதியில் நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 293 ஓட்டங்களைச் சேர்த்தது. சௌத்தி ஆட்டமிழக்காது (22) களத்தில் இருந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், உமர் குல் 4 விக்கெட்டுகளையும், அப்துல் ரெஹ்மான் 3 விக்கெட்டுகளையும், மொஹமட் ஹபீஸ் 2 விக்கெட்டுகளையும், தன்வீர் அஹ்மட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நியூஸிலாந்து அணி 293 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம், பாகிஸ்தான் அணிக்கு 274 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்துள்ளது. இன்று தனது இரண்டாவது இன்னிங்ஸை பாகிஸ்தான் அணி ஆரம்பிக்கும்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாள் என்பதால் இந்தப் போட்டியில் எது வேண்டுமானாலும் நடக்கக்கூடிய நிலையே காணப்படுகிறது.

# நேற்றைய ஆட்டத்தில் இந்தியா 'திரில்' வெற்றி



இந்தியாவுக்கும் தென்னாபிரிக்காவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 2 விக்கெட்டுகளால் இந்திய அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்றியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தென்னாபிரிக்க அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி சார்பில் டுமினி (52), பெனுசிஸ் (60), ஸ்மித் (43), அம்லா (16), இம்ரான் (10), டிவில்லியஸ் (16) ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்து வீச்சில் சகீர்கான் 9.2 ஓவர்கள் பந்துவீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் எம்.எம்.பட்டேல் 10 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 42 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும், ஹர்பஜன்சிங் 9 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

221 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி 48.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பில் யூசுப்கான் (59), ரெய்னா (37), யுவராஜ் (16), கோஹ்லி (28), முரளி விஜய் (01), சர்மா (23), டோனி (05), நெஹ்ரா ஆட்டமிழக்காமல் 6 ஓட்டங்களையும் ஹர்பஜன் ஆட்டமிழக்காமல் (23) ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆட்ட நாயகனாக யூசுப் பதான் தெரிவு செய்யப்பட்டார்.

(23)



# இந்திய அணியில் இடம் இல்லை என்ற செய்தியை கேட்டதும் எனது இதயமே சுக்கு நூறாக நொறுங்கிவிட்டது - ஸ்ரீசாந்த்



புதுடில்லி, ஜன. 19

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் எனக்கு இடம் கிடைக்கவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் எனது இதயமே சுக்கு நூறாக நொறுங்கிவிட்டது.

- இவ்வாறு இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளரான ஸ்ரீசாந்த் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் கேரள வீரரான ஸ்ரீசாந்த்துக்கு இடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

ஸ்ரீசாந்துக்கு அணியில் இடம் கிடைக்காதமை குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலியும் ஆச்சரியம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து டுவிட்டர் இணைய தளத்தில் ஸ்ரீசாந்த் கூறியிருப்பவை வருமாறு:-

இந்திய அணியில் எனக்கு இடம் கிடைக்கவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் எனது இதயமே நொறுங்கிவிட்டது.

ஆனாலும், இதுகுறித்துக் கவலை இல்லை. எனக்கு உரிய நேரம் வரும் எனக் காத்திருக்கிறேன். ஒரு போதும் எனது ஆக்ரோஷமான விளையாட்டை விட்டுவிடமாட்டேன். நான் கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கிறேன். இன்னும் சிறப்பாகச் செயற்பட முயற்சிப்பேன்.

எனவே, எனது வழியில் எனது ஆட்டம் தொடரும். வாய்ப்புகள் கிடைக்கும்போது கிடைக்கட்டும். கடவுளை நான் மிகவும் நம்புகிறேன். இந்திய அணி சிறப்பாகச் செயற்பட எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயம் இந்திய அணி வெற்றி பெறும் என நான் நம்புகிறேன்.

- இவ்வாறு ஸ்ரீசாந்த் கூறியுள்ளார். (12)

# ஆஸி. அணியில் லீ, டெய்ட் சேர்ப்பு

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான பிரெட்லீ மற்றும் டெய்ட் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கான 15 வீரர்களைக் கொண்ட ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் இருக்கும் மைக் ஹஸியின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், அவர் உலகக் கிண்ணத் தொடரில் ஆடுவது சந்தேகமே.


வேகப்பந்துவீச்சாளர்களான பிரெட் லீ, ஷேன் டெய்ட் ஆகியோரும் அணியில் சேர்க்கபட்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி விவரம் வருமாறு:-


ஷேன் வோட்சன், பிராட் ஹெடின், ரிக்கி பொண்டிங், கிளார்க், மைக் ஹஸி, டேவிட் ஹஸி, கமரூன் ஒயிட், ரிம் பெய்ன், ஸ்ரீபன் ஸ்மித், ஜோன் ஹேச்டிங்ச், மிட்செல் ஜோன்சன், நத்ன் ஹரிட்ஸ், பிரெட் லீ, ஷேன் டெய்ட், டக் போலிஞ்சர்.



பிரெட் லீ



டெய்ட்



31 நாட்களே

உதயன் உலகக்கிண்ண கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள்
எழுத்துக்களை. பார்த்த அனுபவங்கள்.
ரசித்த போட்டிகள். எழுந்த
எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
19 ஜனவரி 2011 புதன்கிழமை

# விண்ணப்பம் கோரல்

சாந்திகம் உளவளத்துணை நிலையம் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

பதவி: இணைப்பாளர் - பயிற்சிக்கிளை

தகைமைகள்: உளசுகாதார, உளவியல், உளசமூக சமூகவியல் துறைகளில் பட்டதாரி அல்லது

A/L சித்தி - 5 வருட உளசமூக கற்கை நெறிகளில் பயிற்சி அளித்தல் சம்பந்தமான துறைகளில் அனுபவம்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் டிப்ளோமா உளவளத் துணை, டிப்ளோமா, உள சமூகவியல் பெற்றிருப்பின் - 5 வருட பயிற்சி அளித்தல் சம்பந்தமான துறைகளில் அனுபவம்.

சம்பந்தப்பட்ட பாட விதானங்களைத் தயாரித்து, பயிற்சி வழங்கும் ஆற்றல் மற்றும் கள அனுபவம் விரும்பத்தக்கது.

அத்துடன் கணினி அறிவும் ஆங்கில அறிவும் கருத்திற் கொள்ளப் படுவதுடன் உளவளப் பயிற்சிகளை வழங்கும் ஆற்றலும் உடையோராக இருத்தல் வேண்டும். இத்துறையில் (TOT) மேலதிக பயிற்சிகளைப் பெற்றிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

வயது - 30 - 40 வருடங்கள்

விண்ணப்ப முடிவுத்திகதி -29.01.2011

சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிவரத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம். மின்னஞ்சல் அனுப்ப விரும்புவோர் psych@sltnet.lk என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சாந்திகம்,
8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-574997)

# இதய இஞ்சலி



## அமரர் மா. சிவஞானசுந்தரம்

(நில அளவையாளர் - இடைக்காடு)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் அறிவுத் திறத்துடன்
நேரத்தின் பெறுமானத்தை உணர்த்தி நேர்த்தியாய் வாழ்ந்தீர்!
எமது இராஜமாணிக்கம் மண்டபத் திறப்பு விழாவில்
கௌரவ விருந்தினராய் கலந்து சிறப்பித்தீர்!
மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் கண்டு கலந்துரையாடிய
காலங்கள் கரைந்தனவே! காலன் கவர்ந்தானே!
உங்கள் அறிவுரைகள் என்று வழிகாட்டும்...
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

வீடியோ கலாமினி,
அச்சுவேலி.

(சி/574985)

# இதய அஞ்சலிகள்

## செல்வி தர்மலிங்கம் கோகுலவாணி

(மாணவி, இனியவாழ்வு இல்லம், வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு)



கோகுல வாணியே....
கோகுலா என எம்முன் உலவிய
மென்மையான சகோதரியே
உடலில் பலம் இல்லாமல்
உள்ளத்தில் பலம் கொண்ட
எம் இல்லத்து உறவே
பத்து வருடங்களுக்கு மேலாக
எம்மோடு உலவிய உயிரே
பறந்து சென்றாயே...
ஏன் உன் பாச உறவுகள் எமைவிட்டு
உன் பிரிவு உலகை விட்டு...
எமை விட்டு அல்ல...

இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இனியவாழ்வு இல்லம்
நிர்வாகத்தினர், ஆசிரியர்,
பணியாளர்கள், மாணவர்கள்.

(109475)

veta®
Experts in English Training
An ISO 9001:2000 Certified Company
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் ஆங்கில பயிற்சி மையம்
Spoken English
veta 1
2011 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
இலகுவான முறையில் ஆங்கிலம் பேசப் பயிலலாம்.
veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 க்கும் மேற்பட்ட கிளைகள்
ஆங்கிலத்தை பயிற்றுவிப்பதில் வல்லுனர்கள் 25 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் பேச்சுத்திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்
veta Foundation ENGLISH
veta English First Step
veta English Next Step
ஆங்கிலத்தை ஆரம்பத்தில் இருந்து கற்க விரும்புவர்களுக்கு...
இலக்கணத்தை பாடரீதியாக கற்பதைவிட செயல்முறை ரீதியில் கவனம் செலுத்தி வெற்றியளித்த செயன்முறை.
பல்வேறு சூழ்நிலைகளில் தன்னம்பிக்கையுடன் பேச மற்றும் செயற்பட 100 % ஒலி, ஒளி காட்சிகளுடன் கூடிய பாடத்திட்டம்.




DMI COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403
M. M. V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470

# மஹாகும்பாபிஷேகம்

கோப்பாய், ஜன.19

கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாயாக கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதமகுரு கிரியா இரத்தினம் சிவஸ்ரீ வே.கனகசபைக் குருக்கள் தலைமையில் பல குருமார்கள் கும்பாபிஷேகத்தை நடத்துவார்கள்.

தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ஒ-ஐ-72)

* * *

சாவகச்சேரி ஜனவரி 19

எழுதுமட்டுவாழ் வடக்கு கல்யாணக் குளம் விநாயகர் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் நாளை முற்பகல் 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்பு நடைபெற்று நாளையதினம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.சோமசுந்தரக்குருக்கள் தலை மையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

(ஒ-10-131)

# அரச ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

யாழ்ப்பாணம், ஜன.19

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்காக சகல அரச ஊழியர்களது விடுமுறைகளும் தேர்தல் ஆணையாளரின் சுற்றுநிருபத்துக்கு அமைவாக இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவத்தாட்சி அலுவலர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் கடமைகளில் ஈடுபட விரும்பும் அரச ஊழியர்கள் அவர்களது திணைக்களங்களுக்கு அனுப்பப் பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். அவர்களது சம்பளத்தின் அடிப்படையிலேயே அவர்களது தேர்தல் கடமை பதவி நிலை தீர்மானிக்கப்படும் - என்றார். (ஒ-15)

# சீனப் பிரஜைகள் இருவர் கைது

இலங்கையிலிருந்து 92 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை சீனாவுக்குக் கடத்த முயன்ற சீனப் பிரஜைகள் இருவரை சுங்க அதிகாரிகள் நேற்று அதிகாலை விமான நிலையத்தில் கைதுசெய்துள்ளனர்.

'சீ x 710' என்ற விமானத்தின் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஹொங்கொங் வழியாக சீனா செல்லவிருந்த இவர்களை சுங்க அதிகாரிகள் நேற்று அதிகாலை) சோதனையிடும்போதே சட்டவிரோதமாக எடுத்துச் செல்லப்படவிருந்த வெளிநாட்டு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன என்று சுங்கப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்தார்.

பயணப் பொதிக்குள் மிகவும் நுட்பமான முறையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நாணயங்களுள் அமெரிக்க டொலர், யுவான் உட்பட ஏனைய நாட்டு நாணயங்களும் உள்ளடங்கும் என்றும் அவற்றின் பெறுமதி 92 லட்சம் ரூபா என்றும் அவர் கூறினார். கைதுசெய்யப்பட்ட சீன பிரஜைகளிடம் சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகி ன்றனர்.

அதேவேளை, கடந்த 14ஆம் திகதி இலங்கையிலிரு ந்து சிங்கப்பூருக்கு 64 லட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் களைக் கடத்த முயன்ற சீன நாட்டுப் பிரஜைகள் இருவர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய் யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-சி)

# வலயக்கல்வி அலுவலகம் - கிளிநொச்சி

## உணவு சிற்றுண்டி வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்படவிருக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உணவு தேநீர் மென்பானம், சிற்றுண்டிகள் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பூநகரி, முழங்காவில், ஜெயபுரம், பளை, கண்டாவளை, முரசுமோட்டை, வட்டக்கச்சி, இராமநாதபுரம், பரந்தன், அக்கராயன், கிளிநொச்சி நகரம் ஆகிய பிரதேசங்களில் நடத்தப்பட விருப்பதால் மேற்படி பிரதேசங்களில் உணவுப் பொருள்களை வழங்க விரும்பும் வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேற்படி உணவுப்பொருள்களை வழங்க விரும்பும் வழங்குநர்கள் இவற்றுக்கான விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தின் நிதிக்கிளையில் 24.01.2011 ஆம் திகதி முதல் மு.ப. 10 மணிக்கும் பி.ப. ஒரு மணிக்கும் இடையில் ரூபா 100.00 ஐச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்று கொள்ளமுடியும். பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 02.02.2011 நண்பகல் 12.00 மணியாகும்.

02.02.2011 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அந்தநேரத்தில் கூறுவிலைகள் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் சமுகமளிக்கலாம். மேலதிக விவரங்கள் விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும்.

த.குருகுலராஜா,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(சி/574998)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 27.09.1955



மறைவு 19.01.2009

## திருமதி கலாசோதி இதயகுமார்

(ஆசிரியை, யாழ்.கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை, கொழும்பு நாரகன்பிட்டி மகவத்த அ.த.க. பாடசாலை)

ஆண்டுகள் இரண்டு கடந்தனவே
அம்மா உனை பிரிந்த விழிகளின்
ஈரம் மட்டும் காயவில்லை

பிரிவால் துயருறும்,
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்

(சி-574296)

# 31ஆம் நாள் நினைவலை

மண்ணில் மலர்வு 30.05.1946



இறையுள் நிறைவு 20.12.2010

## கனகரத்தினம் அமிர்தலிங்கம்

(சமாதான நீதிவான்)

ஞாலத்தில் எம்மை நன்றாக வாழவைப்பீர்
நாம் மகிழ்ந்திடலாம் என்றிருந்தோம்
காலத்தின் வயப்பட்டு எம்மைக் கண்ணீர்
சிந்தவைத்து கனதூரம் சென்றதேனோ
ஆலமரமாய் நீயிருக்க விழுதுகளாய் நாம்
என்றும் இருப்போமென்று கனவு கண்டோம்
சீலமதில் வேதனை தான் எஞ்சியதே
நீர் பிரிந்து மாதமும் ஒன்றானதுவே!
எந்தையே இனி உங்கள் சிரித்த
முகத்தைக் காண்பது தான் எப்போ!

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்
தொ.இல - 0217900313

(109481)

# மரண அறிவித்தல்



## கனகசபை கதிரவேலு

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை கதிரவேலு நேற்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்புச் சகோதரரும், ஜெயதேவன், கிருஷ்ணதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், வீகாஸ், ஆதேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.01.2011) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி தெற்கு இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:- 0776450269.

அராலிதெற்கு,
வட்டுக்கோட்டை.

(109465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.க. அதிக சபைகளைக் கைப்பற்றும்

## திஸ்ஸ அத்தநாயக்க நம்பிக்கை

கொழும்பு,ஜன. 19

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிக எண்ணிக்கையிலான சபைகளை வெற்றி கொள்ளும். கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் இவ்வெற்றிக்காக ஒற்றுமையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதென முடிவெடுத்துள்ளனர் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தேர்தலுக்கு முன் கட்சியின் புதிய நிர்வாகிகளை நியமிப்பதில்லை என்று கட்சி முடிவெடுத்துள்ளது. தேர்தல் முடிவடைந்து மார்ச் 12 ஆம் திகதிக்குப் பிறகே நிர்வாகிகள் தெரிவு இடம் பெறும்.

ஆனால், இது தொடர்பில் கருத்து வேறுபாடு கொள்ளாது ஐ.தே.க. தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் இத்தேர்தலில் ஒன்றிணைந்து செயற்படுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாம் இத்தேர்தலில் அதிக சபைகளைக் கைப்பற்றுவோம். மக்கள் அரசுடன் இல்லை என்பதை நாம் இத்தேர்தலில் வெளிப்படுத்துவோம்.

மக்களின் பிரச்சினைகளை அரசு கவனத்தில் கொள்வதில்லை. பொருள்களின் விலைகள் உயரவில்லை என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். ஆனால், இதற்கெல்லாம் மக்கள் இத்தேர்தலில் பதிலளிப்பர்.

வெள்ள அனர்த்த நிலைமையைக் கூட அரசு சரியாகக் கவனிக்கவில்லை. அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு அரசு நிவாரணம் வழங்கவில்லை.

அரசு வழங்கிய சொற்ப நிவாரணங்களையும் அரசியல் நோக்கிற்காகவே பயன்படுத்தியது - இப்படி அவர் தெரிவித்தார். (ஏ-இ)

# இதுவரை எந்தப் பேச்சும் இல்லை என்கிறார்; பத்மினி

யாழ்ப்பாணம்,ஜன.19

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக எந்தவிதமான பேச்சுக்களும் இடம்பெறவில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதரம்பரநாதன் தெரிவித்தார். (ஒ-ஐ)

# நீர்வேலி அத்தியாரில் கால்கோள் விழா

கோப்பாய், ஜனவரி 19

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி தரம் 01 மாணவர்களை கால்கோள் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை முதல்வர் கு.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-72)

## சிறைகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தபோது, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளும் தங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அல்லது தகுந்த காரணங்களைக் கொண்டு வழக் குத் தொடருமாறும் வேண்டு கோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வேண்டுகோள்களைக் கவனத்திற்கெடுத்த நல்லிணக்க ஆணைக்குழு, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவென விசேட குழுவொன்றை நியமிக்குமாறு சட்டமா அதிபர் மொஹான் பீரிஸிடம் சிபாரிசு செய்தது என்றும் கற்றுக் கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க நேற்று 'உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக சட்டமா அதிபர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியதை அடுத்து ஜனாதிபதி இந்த விசேட குழுவை நியமித்தார் என்று அவர் கூறினார்.

இந்த விசேட குழுவின் தலைவராக பிரதி சட்டமா அதிபர் சவீந்திர பெர்னாண்டோ செயற்படவுள்ளார்.

அத்துடன், சிரேஷ்ட அரச சட்டவாதி பி.குமார ரத்னம், செதிய குணசேகர மற்றும் தினால் ரத்னாயக்க ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள இக்குழு இன்று பூஸா முகாமுக்குச் செல்கிறது. அங்கு தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளைச் சந்தித்து அவர்களின் நிலையைக் கேட்டறியவுள்ளது. அத்துடன், அவர்களுக்கு எதிராகவுள்ள குற்றச்சாட்டுகளைய்யும் திரட்டி, அதனை பரிசீலனை செய்யவுள்ளது என்று நல்லிணக்க ஆணைக் குழுவின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய சிறைச்சாலைகளுக்கும் இக்குழு விஜயம் செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# வெல்லாவெளிப் பாலம் உடைந்ததால் நிவாரணம் வழங்குவதில் சிக்கல்

மண்டூர், ஜன. 19

வெல்லாவெளி - மண்டூர் பிரதான வீதியிலுள்ள பாலம் உடைந்துள்ளதால் மண்டூர் பகுதியில் வெள்ளத்தால் சிக்குண்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதில் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி - மண்டூர் பிரதான வீதியிலுள்ள பூமாவடிப் பாலம் உடைந்துள்ளது. இதனால் மண்டூர் பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மண்டூர் பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் பணிகள் பாதிப்படைந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூமாவடிப் பாலம் முன்னர் சேதமடைந்திருந்த நிலையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து முற்றாக உடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-சி)

## வேட்புமனுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீர்த்தி தென்னக்கோன் இதுதொடர்பாக கூறியவை வருமாறு:-

தேர்தல் அறிவிப்பதற்கு முன் வீதிகளில் மரண அறிவித்தல்களை ஒட்டுவதற்குக்கூட பொலிஸார் அனும தித்ததில்லை. ஆனால், இப்போது தேர்தல் அறிவித்ததும் நாடெங்கிலும் பெரும் எண்ணிக்கையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்னும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்தும் பணக்கார வேட்பாளர்கள் இப்போதே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என்பது ஒரு சிறிய தேர்தல். இத்தேர்தலில் பணக்காரர்கள் இவ்வாறு செயற்படுவதன் மூலம் பணக்காரர்கள் மட்டுமே தேர்தலில் ஈடுபடமுடியும் என்றொரு நிலை உருவாகின்றது.

கடந்த நாள்களில் சுவரொட்டி ஒட்டியவர்கள் பலர் பொலிஸாரால் கைது செய்யபட்டு நீதிமன்றம் முன் நிறுத்தப் பட்டனர். அப்போது இருந்த சட்டம் இப்போது எங்கே? இவ்வாறான மோசமான செயற்பா டுகளில் ஈடுபட்டுத் திரியும் அரசியல் வாதிகளைக் கைதுசெய்ய பொலிஸார் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அவர்கள் வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்கின்றனர் - என்றார்.

## வழமைக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல் நடைபெறுகின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில வீதிகளில் போக்குவரத்து இடம்பெறவில்லை.

கிழக்கு மாகாணத்தில் வீடுகளுக்குத் திரும்பிய மக்கள் தமது வீடு வளவுகளைத் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மக்கள் தமது வழமையான கடமைகளில் ஈடுபட இன்னும் சில தினங்களாகும் என அங்குள்ள எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று மாதங்களுக்கான உலர் உணவுப் பொருள்களை வழங்க உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நேரில் கண்டறிய பிரதியமைச்சர் முத்து சிவலிங்கம் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பொதுமக்களிடம் சேகரித்த நிவாரணப் பொருள்கள் நேற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிக்கப் பட்டன. பாடசாலைகள் கிழக்கு மாகாணத்தில் திறக்கப்பட்டிருந்தபோதும் மாணவர்களின் வருகை மிகவும் குறை வாகக்காணப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.ப. 2 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலையில் நடைபெறும் மருத்துவப் பொருள்கள் வழங்கும் நிகழ்விலும் 3.30 மணிக்கு இடம்பெறும் இந்தியன் வங்கி திறப்புவிழாவிலும் இந்தியத் தூதுவர் பங்குபற்றுவார். (ஒ-ஐ)

## கண்ணி வெடிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழ் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினரால் அரச அதிபரிடம் கையளிக்கப் பட்டது.இருப்பினும் அந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்துவதற்கான பாதுகாப்பு அமைச் சின் அனுமதி இதுவரை கிடைக் கப்பெறவில்லை. இதன் காரணமாகவே அந்தப் பகுதிகளில் மக்களை மீளக்குடி யமர்துவதில் தாமதம் நிலவுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை கண்ணிவெடி அகற்றப் பட்டாமையினாலேயே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமடைவதாகவும் கண்ணி வெடி அகற்றும் பணி நிறைவு பெற்றால் மக்களை மீளக்குடிய மர்த்த முடியும் என்று யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி தெரிவித்திருந்தமை குறிப் பிடத் தக்கது. (ஒ-15)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பார்வையிடுவதற்காக ஐ.நா. மனிதாபிமான விவகாரங்க ளுக்கான உதவிச் செயலாளர் கத்ரீன் இலங்கை வரவுள்ளமை தொடர்பாகவும் 'இன்னர்சிற்றி பிரஸ்' மார்டின் நெஸ்கியிடம் கேள்வி எழுப்பியிருந்தது.

கத்ரீன் விஜயத்திற்கும், ஐ.நா. நிபுணர்கள் குழுவின் விசாரணைக்குமிடையில் தொடர்புள்ளதா என்றும் 'இன்னர்சிற்றி' கேள்வி எழுப்பியது. வெள்ள அனர்த்தம் தொடர்பாக ஆய்வை மேற்கொள்ள மாத்திரமே அவர் இலங்கை செல்கிறார் என்று மார்டின் கூறினார்.

நிபுணர்கள் குழு எந்த நிபந்தனையின் அடிப்படையில் இலங்கை செல்லும் என்றும் அவ்வாறு செல்லாவிட்டால் எந்த நிபந்தனையின் அடிப்படையில் செல்லாது என்றும் 'இன்னர் சிற்றி' கேள்வி எழுப்பியிருந்தது.ஏற்கனவே நிபுணர் குழுவின் செயலாளர் தெளிவான பதிலை வழங்கியுள்ளார் என்று கூறிய மார்டின், இலங்கை செல்வதற்கான திகதியைத் தீர்மானி ப்பதில் ஐ.நா. குழு இப்போது தீவிரமாகக் கலந்தா லோசித்து வருகின்றது - என்றார். (ஒ-சி)

# மரண அறிவித்தல்

## விசுவநாதர் நடராசா (மணியம்)



(அளவெட்டி - மல்லாகம் கூ..சங்க முன்னாள் பணியாளர்)

மல்லாகம் வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதர் நடராசா நேற்று (18.01.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - நாகமுத்து தம்பதியரின் மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கலாவதி (ஜேர்மனி), கலைவாணி (யூனியன் கல்லூரி ஆசிரியை), உமா (குமுழமுனை மகாவித்தியாலய ஆசிரியை), ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலநாதன் (ஜேர்மனி), சிவானந்தன் (உடுவில்), கலாதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் சின்னாச்சிப்பிள்ளை (உத்தரம்), திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோபிகன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவகுலத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.01.2011) புதன்கிழமை மு.பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம் தொ.இல - 0213008025 (சி-575000) தகவல் குடும்பத்தினர்.

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்கு அனுப்பப்படாமல், கொழும்பு அலுவலகத்தின் அறிவுறுத்தல் பெறப்பட்டு இங்கேயே விஸா வழங்கப்படும் என்றார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சந்தித்த பின் தப்பியோடிய விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கனடாவுக்கு குடிபெயர்வதை இலக்காகக் கொண்டுள்ளதாகவும் அப்பத்தி பிரவேசிக்க முயற்சிப் பவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அல்லது அதன் தீவிர ஆதரவாளர்கள் என்றும் அப்பத்திரிகை மேலும் சுட்டிக் காட்டுகின்றது. கனடாவில் மீளிணைந்துள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் வலையமைப்பு தொடர்பான தகவல்களை அந்நாட்டு உளவுத்துறையினர் பெருமளவு திரட்டியுள்ளதுடன் அது தொடர்பான மேலதிகத் தகவல்களை அரசாங்கத்துக்கும் வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் நாள்களில் நானூறுக்கும் அதிக மான அகதிகள் கடல் மார்க்கமாகக் கனடாவுக்குள் பிரவேசிக்கவுள்ள நிலையில், அவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் கனேடிய உள வுத்துறையினரை மேற்கோள் காட்டி 'ஒட்டாவா சன்' செய்தி வெளியிட்டுள்ளது. (ஒ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 லட்சம் டொலர் பெறுமதியான

# இரண்டாம் கட்ட நிவாரணம் அனுப்பி வைத்தது இந்தியா

கொழும்பு, ஜன. 19

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா 10 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான நிவாரணப் பொருள்களை இரண்டாம் கட்டமாக நேற்று முன்தினம் விமான மூலம் அனுப்பி வைத்தது.

முப்பதுதொன் நிவாரணப் பொருள்களில் உலர் உணவுப்பொருள்கள், பால்மா வகைகள், மெத்தைகள், நீர் சுத்திகரிப்பு கருவிகள் மற்றும் வில்லைகள் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. நிவாரணப்பொருள்கள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் கையளிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து முதற்கட்ட நிவாரணப் பொருள்கள் கடந்த 15ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவுடன் மட்டக் களப்புக்கு விஜயம் செய்து நிவாரணப் பொருள்களை விநியோகித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)


**கணினி புதிய பிரிவுகள் ஆரம்பம்**

O/L & A/L — WORKERS

| | |
|---|---|
| Diploma In Ms Office | 2 Months |
| Diploma In DTP | 2 Months |
| Diploma In Web Design | 3 Months |
| Diploma In Graphic Design | 3 Months |
| Internet & E-mail | 1 Month |
| Kids Programe | 1 Month |

162, Main Street, Jaffna.
T.P.No:-021-222-1417
**Sky Computers (Pvt) Ltd.**
'Today You Learn Tomorrow You Lead'


## தென்மராட்சியில் பொங்கல் விழா

தென்மராட்சி பிரதேச பொதுமக்கள் இராணுவ ஒழுங்கமைப்பு அமைப்பின் தைப்பொங்கல் விழாவும் கலாசார நிகழ்வுகளும் நேற்று நடைபெற்றன.

52ஆவது படையணியின் அனுசரணையுடன் 522, 523 ஆகிய படையணிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வுகள் சாவகச்சேரி சிவன் கோவில், தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம் ஆகியவற்றில் இடம் பெற்றன.

522ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேணல் ஹேமஸ்த பண்டார, 523ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரசாத் நெமட்டம் பிட்டிய ஆகியோரின் அழைப்பின் பேரில் 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் அனுர சுதசிங்க முதன்மை விருந்தினராக்கலந்துகொண்டார்.


"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதியம்**

*இசை, நடன, வாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்*

* காலம்:-நாளை (20.01.2011) வியாழக்கிழமை தைப்பூச நற் திருநாள்
* நேரம்:- பி.ப 4 மணி
* இடம்:- வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் அன்னபூரணி அலங்கார மண்டபம்.

யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த ஆசிரியர் குழாம் ஊடாக மேற்குறித்த அனைத்து வகுப்புக்களும் வித்தியாரம்பம் செய்யப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். இவ் வகுப்புகளில் தங்களின் பிள்ளைகளை இணைத்து பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

நாம்

அறக்கொடை நிதியம்



**கலைமகள் அழகு நிலா**
Beauty Academy

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

*பயிற்சி ஆரம்பம் - 1ம் பிரிவு - 24.01.2011, 2ம் பிரிவு - 29.01.2011*

பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். வயதெல் லைகள் கிடையாது பயிற்சியினை பயில விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

*பயிற்சிகள்*

* Facial (10வகை)
* Eye brow Threading
* Pimple Treatment
* Hair Stratening (2வகை)
* Hair Perming (2வகை)
* Hot Oil Massage
* Hair Cutting
* Hair Colouring
* Hair Dye
* Pedeicure Manicure
* கறுப்புக்காய், இயந்திர மூலம் அகற்றப்படும்.
* Bridal Make up (6வகை)
* Wedding Cake Icing
* Waxing
* Bleaching
* தையல்

* பயிற்சிநேரம் - மு.ப. 10 மணி - பிற்பகல் ஒரு மணி வரை.

அனுமதிக் கட்டணம் - 6000/=, தொடர்பு - 0773719071

*சனி, ஞாயிறு தினங்களிலும் பயிற்சிகள் நடைபெறும்*

கலைமகள் அழகு நிலா, 390, பிரதான வீதி, பல்கலைக்கழக..., யாழ்ப்பாணம்.

(C/573813)



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு 01: 23.01.2011
பிரிவு 02: 30.01.2011
பிரிவு 03: 31.01.2011

காலை 10.00 மணி

**IIS Computer Courses**

**Certificate Courses**

Office Solution Development
Hardware Technology
Eng.Drawing & AutoCAD
Database Management System
Computerized Accounting
Desktop Publishing
Web Designing
Networking
Multimedia
Java Programming
Visual Programming

**Diploma Courses**

Software Development
Computer Hardware & Networking Eng.
Business Information System

"IIS உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 E.Mail : iis@iis.edu.lk


## மு.கா. தனித்துப் போட்டி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளில் தனித்துப் போட்டியிடும். ஏனையவற்றில் அரசுடன் இணைந்து போட்டியிடும்.

- இவ்வாறு அக்கட்சியின் செயலாளர் ஹசன் அலி எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை ஆளும் தரப்புக்குத் தெளிவாக விளக்கியுள்ளது எனவும், ஆளும் தரப்பு, காங்கிரஸின் நிலைப்பாட்டைஏற்றுக்கொண்டது எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலுள்ள சில உள்ளூராட்சிச் சபைகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும்.


**வணிகக் கல்வி**

By- S.K Balasbosh(H.N.DIP-in-Acc)

**2012 A/L**

வினா விடை வகுப்பு ஆரம்பம்
(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

ஆரம்பம்:-20.01.2011
வியாழன் பி.ப. 3மணி

BPI குருநகர்

தனிப்பட்ட அனுமதி உண்டு.



**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !!**

சுயமாகத் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கும், வெளிநாடுகள், உள்நாட்டு நிறுவனங்களில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கும் ஏற்ற முறையில் பயிற்சியளிக்கப்படும்.

* Mobile Phone Repairing — காலம் :3 மாதம்
* றேடியோ ரெலிவிஷன் & DVD Player Repairing — காலம் :9 மாதம்
* எலக்ரிக்கல் வயறிங் & றீவைண்டிங் — காலம் :6 மாதம்
* Air - Conditioning — காலம் :6 மாதம்
* Diploma in Computer Hardware — காலம் :3 மாதம்

*சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.*

பயிற்சிகள் ஆரம்பம்: 24.01.2011, 25.01.2011

விபரங்களுக்கு :

JAFFNA TECHNICAL INSTITUTE

No.45,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் T.P:0718561654

கிளை New ASIAN CENTER 56/15"B", ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:0779254078



**Personal Class (கணினி)**

* Laptop மூலமாக கற்கைநெறிகள் யாவும் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
* MS office 2007, DTP, Internet and E-mail, Web Design, Graphic Design
* பயிற்சியின் பின் சான்றிதழ் வழங்கப்படும்.

ஆசிரியர்|- KRC T.P|-0779672038



**உடனடி விற்பனைக்கு**

* அழகான புதிய வகை அலுவலக மேசைகள், கதிரைகள், Stand fan
* தசைவலுவூட்டும் பயிற்சிக்கான உபகரணங்கள்
* GLX 125 TVS மோட்டார் வண்டி

Call:-0770475739, 0776654347



**COMPUTER FOR SALE**
T.P : 021-222 4459, 0774192275


Intel LGA Processor 3.00
GIGABYTE LGA Mother Board
Ram DDR II, 1GB
Hard Disk Sata 80 GB (25,850/=)
DVD Writer
ATX Casing with Power Supply
15" HP / Compaq LCD Monitor
Keyboard, Optical Mouse
2.1 Laptop Woofer

இவை அனைத்தும் ரூபா : 25,850/=
Computer Table- 2850, UPS- 4000

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.


# மரண அறிவித்தல்

## கனகசிங்கம் செல்லத்துரைப் பத்தர்



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடியை இருப்பிடமாகவும் இல.17, திம்பிரிகஸ்யாய குறுக்கு வீதி, ஹெந்தலை, வத்தளை என்னும் முகவரியைத் தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட கனகசிங்கம் செல்லத்துரைப் பத்தர் 17.01.2011 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கப்பத்தர் - மகாலட்சுமி தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புத் துணைவரும், விஜயராகவன் (ஜேர்மனி), காலஞ்சென்ற விஜயமோகன் மற்றும் விஜயபாரதி (ஹொலன்ட்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேந்திரம் (ஹொலன்ட்) அவர்களின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சுந்தரம் மற்றும் சின்னத்துரை, பாக்கியம், அன்னம்மா, சரசு ஆகியோரின் சகோதரனும், விதுரனின் (ஹொலன்ட்) அருமைப் பேரனும் காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் கௌரிமனோகரி, சிவபாதம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2011) புதன்கிழமை, இல.17, திம்பிரிகஸ்யாய குறுக்கு வீதி, ஹெந்தல, வத்தளை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4 மணிக்கு மாதம்பிட்டி பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17, திம்பிரிகஸ்யாய குறுக்கு வீதி,
ஹெந்தல, வத்தளை
T.P:- 0112-940337


(109477)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு நேரத்தில் பறந்த முதலாவது சூரியகல விமானம்




சூரிய சக்தியில் இயங்கும் பெரிய கிளைடர் விமானமொன்று முதற் தடவையாக இரவு நேரத்திலும் நீண்டதூரம் பறந்து சாதனை படைத்துள்ளது. சுவிற்சர்லாந்தில் இந் தச் சாதனைப் பறப்பு இடம்பெற்றுள்ளது. 26 மணித்தியாலங்கள் 9 நிமிடங்கள் இவ்விமானம் பறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தின் அகலம், ஏ 340 எயார்பஸ் ரக விமானங்களின் அகலத்திற்குச் சமமான தாகும் என்பது குறிப்பிடத்தக்கது. விமானங்களின் வரலாற்றில் சூரியசக்தியில் பறந்த மிகப்பெரிய விமானமாகவும் இது விளங்குகின்றது.

தூய்மையான தொழில்நுட்பம் மற்றும் மீளப்பயன்படுத்தப்படக்கூடிய எரிசக்தி ஆகியவற்றுக்கான சாத்தியத்தை இவ்விமானத்தின் வெற்றிகரமான பறப்பு விளக்குகிறது என இத்திட்டத்தின் தலைவரான பேர்ட்ரான்ட் பிக்கார்ட் தெரிவித்துள்ளார். இவர் 1999 ஆம் ஆண்டு வாயு பலூன் மூலம் முதற் தடவையாக உலகத்தைச் சுற்றிவந்து சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த விமானப் பயணத்தின்போது இணை விமானியாகச் செயற்பட்ட அந்ரேபோர்ஸ்ச்பேர்க் கருத்துத் தெரிவிக்கையில், இந்தச் சாதனையை இன்னும் நம்பமுடியாதுள்ளது. நாம் எதிர்பார்த்ததைவிட இந்தப் பயணம் வெற்றிகரமாக அமைந்துள்ளது. நாம் இன்னும் நீண்டதூரம் பயணம் செய்யவிருந்தோம். ஆனால் நாம் செய்ய நினைத்ததைச் சாதித்துவிட்டதால் திரும்பிவந்து விட்டோம் - எனக் கூறியுள்ளார்.

# உணர்வோடு உறவாடும் இயந்திரம்



சக மனிதனின் உணர்வுகளை மதிக்கத் தவறுகின்ற தசையுள்ள மனிதனின் மத்தியில் உணர்வுகளை மதிக்கத்தக்க இயந்திரத்தினை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த ரோபோ மனிதனின் முகபாவங்களை வைத்தே அவர்களின் குணங்களை அறியும் திறனினைக் கொண்டிருக்கிறது. ஒருமுறை ஒருவரின் முகத்தினைப் பார்த்துவிட்டால் அவர்களை ஒருபோதும் மறந்துவிடாது. மறுபடியும் அவர்களைக்காணும் போது அடையாளம் கண்டுகொள்ளும் திறனும் இந்த ரோபோவில் காணப்படுவது சிறப்பம்சமாகும்.

மனிதனால் பாதிக்கப்பட்டு வெறுக்கப்படுகின்றவர்களுக்கு இந்த இயந்திரம் பூரண அன்பினை வெளிப்படுத்தும் என்பது உறுதி!



# 4 ஆயிரம் வருடங்கள் வாழும் தாவரம்

இந்த உலகின் மிகப்பெரிய மற்றும் மிக அதிககாலம் உயிர் வாழும் உயிரியாக இது கருதப்படுகிறது. இந்தத் தாவரம் கலிபோர்னியக் காடுகளில் காணப்படுகிறன. இதன் தண்டு செங்கபில நிறமாகும். இந்தத் தாவரம் என்றும் பசுமையானது, கம்பீரமாக வளரும். 24 மீற்றர் சுற்றளவையும், 120 மீற்றர் உயரத்தையும் உடைய இத்தாவரம் 4 ஆயிரம் வருடங்கள் உயிர் வாழ்வதாக ஆய்வுகளினால் கண்டறியப்பட்டுள்ளன. இதன் எடை சராசரியாக 2 ஆயிரம் தொன் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

# புற்றுநோயைக் கண்டுபிடிக்க ஒரு துளி இரத்தம்

இரத்தப் பரிசோதனை மூலம் உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளித்து வருகின்றனர். இதற்காக ஊசி மூலம் அதிகளவில் இரத்தம் எடுத்து பரிசோதனை நடத்தப்படுகிறது. ஆனால் ஒருதுளி இரத்தம் மூலம் புற்றுநோயைக் கண்டுபிடித்துவிட முடியும். இத்தகைய நவீன தொழில்நுட்பம் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பாஸ்டன் நகர ஆராய்ச்சியாளர்கள் உலகின் முன்னணி மருத்துவக் கம்பெனி உதவியுடன் ஒரு புதிய ஆய்வை மேற்கொண்டனர்.

அதன்மூலம் மார்பகம் மற்றும் நுரையீரல் உள்ளிட்ட பலவிதமான புற்று நோய்களைக் கண்டறிந்துள்ளனர். தற்போது இதேமுறையில் உலகின் பல நாடுகளில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரத்த பரிசோதனைக்கு மைக்ரோசிப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த சிப் வழியாக இரத்தம் செலுத்தப்படுகிறது. அப்போது புற்று நோயை ஏற்படுத்தும் செல்கள் அதில் பந்து போன்று ஒட்டிக்கொள்கின்றன.

இச்சோதனை புற்று நோயாளிகளின் உடலில் வலியை ஏற்படுத்துவதில்லை.

தற்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவரின் உடலில் இருந்து சத்திர சிகிச்சை மூலம் தசைகளை எடுத்துப் பரிசோதனை செய்யப்படுகிறது. இதனால் அவர்கள் கடும் வலியும், வேதனையும் அடைகின்றனர்.

# தலைமுடி உதிர்தலுக்கான அடிப்படைக் காரணிகள் கண்டுபிடிப்பு

ஆண்களுக்கு முடி உதிர்தல் தொடர்பான அடிப்படை காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆண்களுக்கு ஏன் முடி உதிர்கின்றது? என்பது தொடர்பிலான அடிப்படைக் காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உடற் கலன்களில் ஏற்படும் குறைபாடே முடிஉதிர்விற்கான காரணம் என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். முடி உதிர்தலுக்கான அடிப்படைக் காரணிகளை இனங் கண்டு அதற்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் வழுக்கையைக் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


முடி வளர்வதற்கு ஏதுவான உடற் கலன்களில் ஏற்படும் குறைபாடுகளே முடி உதிர்தலுக்கான பிரதான காரணம். இவற்றை அடையாளம் கண்டு அதற்குச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புதியவகை கிறீம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகவும் முடி உதிர்ந்த இடங்களில் இதனைப் பூசுவதன் மூலம் மீளவும் முடியை வளரச் செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 50 வயதைத் தாண்டிய அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் ஏதோவொரு வகையிலான முடி உதிர்வினால் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# படிப்பு சுமையல்ல

தேர்வு காலம் வந்தாச்சு
திறமைகாட்ட வாருங்கள்
தேர்வு காலம் என்றாலே
திறமை காட்டும் காலம் தான்
படிக்கும் நேரம் படிக்காமல்
பயனில்லாமல் ஊர் சுற்றும்
விடலைக் கூட்டம் சேராமல்
வெற்றி காணப் படித்திடுவோம்
நமக்கு முன்னே உயர்ந்தோரும்
நம்மைப் போல படித்தோரே
சுமையாய் படிப்பை எண்ணாமல்
சுவையாய் அதனை ஏற்போமே
அம்மா ,அப்பா நினைவெல்லாம்
அருமைச் செல்வம் நம்முடைய
செம்மையான எதிர்காலம்
சிறப்புமிக்க புகழ் வாழ்க்கை
சின்னச் செடியே பின்னாளில்
செழித்துப் பெரிய மரமாகும்
சின்ன வயதுப் பழக்கம்தான்
திறமை என்று வளர்ந்திடுமே!
நாளை தலைவர் நாமென்று
நம்பும் பெரியார் கனவுதனை
நாளும் உணர்த்தும் கடமையென
நம்மை உயர்த்தும் வழி நடப்போம்.

வி.கீர்த்தனா,
சுதுமலை,மானிப்பாய்.



# மலேரியா நோய்க்கிருமியைக் காவ முடியாத நுளம்பு

மலேரியா நோய்கிருமியைக் காவமுடியாத நுளம்பை மரபணுமாற்ற முறையில் அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அரிஸோனாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய மரபணுவொன்றை இந்த நுளம்பிற்குள் புகுத்தியுள்ளனர். இதன்மூலம் நுளம்பின் ஆயுள்காலமும் குறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நுளம்பினம் எதிர்காலத்தில் சூழலில் விடப்படவுள்ளது. மலேரியா நோயை ஒழிப்பதில் இக்கண்டுபிடிப்பு திருப்புமுனையாக அமையலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த நுளம்பை சூழலில் விடுவதற்கு முன்னர் இந்நுளம்பிற்கு சாதகமான தன்மையையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. அதற்கான ஆய்வுகள் நடைபெறுகின்றன என இத்திட்டத்தின் தலைவரான பேராசிரியர் மைக்கல் ரிச்சல் தெரிவித்துள்ளார்.

சூழலிலுள்ள இயற்கையான நுளம்புகள் இப்புதிய நுளம்பினத்தால் முற்றாக மாற்றீடு செய்யப்படும் நிலை ஏற்படும் போது மலேரியா நோய் ஒழிந்துவிடும் எனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் கிழக்கு ஆசி

# மணி மண்டப திறப்பு விழா





## அருளாசிச் செய்தி



விநாயக அடியார்களுக்குக் கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் திருவருள்துணை கொண்டு பிள்ளையாருக்கென அமைக்கப்பட்ட ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபம் இன்று திறப்புவிழா செய்யப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இங்கு அமையப்பெற்றிருக்கும் இம் மண்டபம் ஆலயத்திற்கும் ஊருக்கும் பெருமையைத் தருவதாகும். நீண்ட காலமாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தத்துவாம்சங்கள் கலையம்சம் பொருந்தியதாகவும் கட்டடங்களை அமைத்துத்தந்து கொண்டிருக்கும் கட்டடக் கலைஞர் திரு. பாலசுந்தரம் இவர்களுடைய குலதெய்வமாகிய விநாயகப் பெருமானுக்குத் தனது எண்ணத்தில் எழுந் த வடிவத்தை நன்கு அழகுறச் அமைத்து சமர்ப்பணம் செய்தது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. இம் மண்டபம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக அமைக்கப் பெற்றமை அனைவருக்கும் பெருமை சேர்க்கிறது. இம்மண்டபத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வோமாக. திரு.பாலசுந்தரம் குடும்பத்தினரையும் உதவி வழங்கிய அன்புள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**நல்லை ஆதீன முதல்வர்.**

## சிவப் பணி மேலோங்க....



யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய வீதியில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் இ.பாலசுந்தரம் அவர்களது மனதில் உருவான ஓர் அழகிய மணிமண் டபம் கண் கவர் அலங்காரங்களுடன் கண் கொள்ளக் காட்சியாக இன்று நிஜத்தில் வந்துள்ளது. இது அவரின் கட்டட நிர்மாணப் பணியில் 108 ஆவது கட் டடமாகத் திகழ்வது பெருமைக்குரியதாகும்.

ஆலயத்தின் நித்திய, நைமித்திய வழிபாடுகளுடன் இணைந்த இம்மண்டபத்தில் கலையம்சம் பொருந்திய கணப திவிக்கிரகம் விக்கினம் தீர்ப்பதற்காக மண்டப வாயிலில் வீற்றிருக்கும் தோற்றம் மெய்சிலிர்க்கவைக்கிறது. அத்துடன் மண்டப வடக்கு வாயிலில் உள்ள கல்யாணக்காட்சி மண்டபத்துள் நடைபெறும் கல்யாண வைபவத்தை மண்டபவாயிலில் பார்ப்பவர் கண் முன்னே தினமும் வெளிக்காட்டி நிற்கின்றது.

தூண் அழகும் கற்பனைச் சிற்பங்களையும் தன்னகத்தே கொண்டு காட்சிதரும் ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணிமண்டபத் திறப்பு விழாவானது விகிர்த்தி வருஷம் தை மாதம் 5ஆம் நாள் (19.01.2011) புதன் கிழமை புனர்பூச நட்சத்திரமும் பௌர்ணமித் திதியும் கூடிய சுபவேளையில் நிகழ இருப்பதையிட்டு மன மகிழ்ச்சியடைகிறேன்.

மண்டபத்துள் பல மணவிழாக்கள், ஆன்மீக சிந்தனைகள், சமயப் பிரசங்கங்கள் போன்ற இந்துமதப் பாரம் பரியத்தை உணரத்தக்க நிகழ்வுகள் யாவும் நடந்தும் ஆலய வளர்ச்சிக்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினரின் இந்த நல்லெண்ணமானது மேலும் வளர்ந்து அறப் பணியாம் சிவப்பணி மேலோங்க இந்த மண்டபத் திறப்பு விழா முன்னுதாரணமாக அமைய வேண்டும் என விக்கினம் தீர்க்கும் விநாயகர் பாதக்கமலங்களை மனம், மொழி, மெய்களால் வந்தித்து வணங்கி ஆசிகூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிரம்மஸ்ரீ இ.இராமலிங்க சர்மா,
பிரம்மஸ்ரீ இ.ரமணிதரக் குருக்கள்
ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம், கோண்டாவில் கிழக்கு.

நிகழும் மங்களகரமான விகிர்தி வருஷம்
தைத்திங்கள் 05ஆம் நாள்
(19.01.2011) புதன்கிழமை முற்பகல்
10.15 மணிமுதல் 11.05 மணிவரையுள்ள
மீனலக்கினமும், புனர்பூச நட்சத்திரமும்,
சித்தயோகமும் கூடிய சுபவேளையில்
எம்மால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
**மணிமண்டபம்**
எமது ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின்
**தலைவர்**
**திரு.லயன் இ.பாலசுந்தரம் J.P., M.J.F**
அவர்களால் மங்களகரமாகத் திறந்துவைக்கப்படும்.

**பிரதம விருந்தினர்:**
**திருமதி இமெல்டா சுகுமார்**
(அரச அதிபர், யாழ்.மாவட்டம்)
**திரு.நா.சண்முகலிங்கன்**
(உபவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்:**
**திரு.சி.குகநேசன்**
(கட்டட பிரதம பொறியியலாளர்)
**திரு.ஜி.சிவபாலன்**
(பொறியியலாளர்- கல்வித்திணைக்களம்)

**நிகழ்ச்சி நிரல்:**

- மணி மண்டபம் திறத்தல்
- மங்கள விளக்கேற்றல்
- மங்கள இசை
- வரவேற்பு நடனம்
- வேத பாராயணம்
  சிவஸ்ரீ இ.இரமணிதரக்குருக்கள் (ஆலயப் பிரதம குரு)
- கடவுள் வணக்கம்

**ஆசியுரைகள்:**
**இ.இராமலிங்க சர்மா** (ஆலயப் பிரதம குரு)
**ஜம்பு மகேஸ்வரக்குருக்கள்**
(பிரதமகுரு, சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்)
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**
(நல்லை ஆதீன முதல்வர்)

**வரவேற்புரை**
**திரு.சு.சுந்தரலிங்கம்**
(செயலாளர், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை)

- ★ தலைமையுரை
- ★ பிரதம விருந்தினர் உரை
- ★ சிறப்பு விருந்தினர் உரை
- ★ கட்டடக் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு

**வாழ்த்துரைகள்:**
**பேராசிரியர் சி.சிற்றம்பலம்**
(தலைவர், இந்து சமயப் பேரவை)
**திரு.பா.செந்தில் நந்தனன்**
(பிரதேச செயலர்- நல்லூர்)
**லயன் டாக்டர் வை.தியாகராஜா**
(உபதலைவர், செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்)
**திரு.ஆறு. திருமுருகன்**
(தலைவர், தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயம்)
**திரு.சி.மாதவகுமார்**
(உதவிக்கல்விப் பணிப்பாளர்- வலிகாமம்
கல்வி்வலயம்)
**திரு.சிவ.மகாலிங்கம்**
(இளைப்பாறிய உதவிப்பணிப்பாளர்)

**நன்றியுரை:**
**திரு.இ.குலசிங்கம்**
(பொருளாளர், ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்
சேவை)

கோண்டாவில் பாமினி என்ஜினியேர்ஸ் ஸ்தாபனத்தின் சார்பில் அதன் அதிபர் **லயன் இ.பாலசுந்தரம்** அவர்களால் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் புற்றுநோயாளர்களுக்குச் சத்துணவும் உடு புடைவைகளும் கருணைப் பாலத்திற்கு அன்பளிப்பு நிதியும் வழங்கப்படும்.
விழா முடிவில் மகேஸ்வர பூசை (அன்னதானம்) இடம்பெறும்.

**ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

## ஆயிரம் ஆயிரம் நிகழ்வுகளைத் தரவேண்டும்



கோண்டாவில் கிழக்கு, ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத் திறப்பு விழாவை முன்னிட்டு இம்மணிமண்டபம் பயன்பாட்டுக்கு வருவதையிட்டு மிகவும் மனமகிழ்வுறுகின்றேன்.

அரசடி விநாயகரின் ஆசியுடன் சிறப்புற, மிக்க அழகுபொலிய வடிவமைக்கப்பட்டுத் தரமுடன் நிர்மாணிக்கப்பட்ட இம்மண்டபம், சூழவுள்ள மற்றும் அயலூர் மக்களுக்குச் சமய, கலாசார நிகழ்வுகளை நடத்துவதற்கு ஆயத்தமாகியுள்ளதையிட்டும் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவமும், தமிழும் தழைத்தோங்க எம்மக்களுக்கு இம் மண்டபம் அளப்பரிய பங்களிப்பை நல்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் ஆசிமட அரசடி விநாயகர் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத்தலைவர் திரு.இலங்கநாதன் பாலசுந்தரம் அவர்கள் (பாமினி என்ஜி னியரிங்) பிரபல்யம் மிக்க ஒப்பந்தகாரர். தனது 108ஆவது நிர்மாண வேலையாக இம்மண்டப நிர்மாண வேலை

விளம்பர அனுசரணையாளர்கள்

பிள்ளையார் எலக்ரிக்கல்
பலாலி வீதி,
கோண்டாவில்

SRIRAAM HARDWARE
Palaly Road,
Kondavil, Jaffna.

து.மகாலட்சுமி
பலாலி றோட்,
கோண்டாவில்.
Tel: 0778000742

தபேஷன் விவசாயமாளிகை
பலாலி வீதி,
கோண்டாவில்

Bharathy.com
Palaly Road,
Kondavil Junction.
0212225148
Bharathy1@live.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமட அரசடி விநாயகர் ஆலய
# ர சிறப்பு மலர்- 19.01.2011





பொறுப்பேற்று முழுமனதுடனும் தரத்துடனும் சிறப்புற மைத்ததையிட்டு மகிழ்வடைவதுடன், இம்மண்டபம் பல ஆண்டுகள்பயனுள்ள ஆயிர மாயிரம் நிகழ்வுகளைத் எம்மக்களுக்கு அரும்பணியாற்ற எல்லாம்வல்ல அரசடி கரைப் பிரார்த்தித்து, வாழ்த்தி நிற்கின்றோம்.

எந்திரி கந்தசாமி குகநேசன்
*கட்டடங்கள் திணைக்களம் (வமா),*
*யாழ்ப்பாணம்.*

## உதவிகளை நன்றியோடு நினைவு கூருகின்றோம்



ஈழமணித்திருநாட்டின் முடியாகத் திகழும் யாழ். குடாநாட்டில் அருள்பாலிக்கும் விநாயகர் ஆலயங்கள் பல இருந்தபோதும் வரலாற்றுப் பெருமையும் வளமும் மிக்க எமது ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம் அருளும், அற்புதமும் நிறைந்த ஒரு திருக்கோயில் என்பதைப் பெருமையோடு பறைசாற்றுகின்றோம்.

சுமார் மூன்று நூற்றாண்டுக்குமுன் தான்தோன்றிப் பிள்ளையாராக வயல்வெளியில் அவதரித்து இன்று பல பரிமாணங்களில் எழுந்து மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றோடு கம்பீரமாக நிற்கும் இவ்வாலயத்தில் அன்னதான மடம் ஒன்று இல்லாதது ஒரு குறையாக இருந்து வந்தது. எல்லாத்தானங்களிலும் சிறந்தது அன்னதானம் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே அன்னதான மண்டபம் அமைக்கும் முயற்சியே ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் அதன் நோக்கம் நாளடைவில் மாறுபட்டு இன்னும் விசாலமான முறையில் ஒரு திருமண மண்டபமாக உருவாகும் விதத்தில் எம்பெருமான் எமக்குக் கிருபையளித்துள்ளார். ஆரம்பத்தில் 2 மாடிக்கட்டடத்திற்குரிய திட்டம் வகுக்கப்பட்டு 25.03.2005 இல் அத்திபாரம் இடப்பட்டது. ஆயினும் எதிர்பாராத அசாதாரண அரசியல் சூழ்நிலைகள், பொருளாதார நெருக்கடிகளால் சிறிது காலம் இம்முயற்சி தடைப்பட்டிருந்தது. மீண்டும் 2009 இல் எமது விநாயக அடியரான அன்பர்களின் ஊக்கத்தினாலும் ஒத்துழைப்பினாலும் அயராத முயற்சியினாலும் தொடர்ந்து கட்டட வேலைகளை ஆரம்பித்து நடத்தி இன்று 19.01.2011 இல் திறந்து வைக்கப் படவுள்ளது. இதற்கான மனப்பூர்வமான ஒத்துழைப் பையும் உதவிகளையும் வழங்கிய சகலருக்கும் இதன்மூலம் பணிவான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இரு மனங்களைச் சேர்த்துவைக்கும் திருமணம் ஓர் ஆயிரம் காலத்துப்பயிர் ஆகும். அத்திருமணக் கைங்கரியங்களை முறைபடி நிறைவேற்றுதற்குரிய ஒரு மண்டபமாக இது திகழும். எமது மக்களின் விருப்பு, வெறுப்புகள், வசதிகள் ஆசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாகச் சகல ஒழுங்குகளும் முக்கியமாக முதிர்ந்த அனுபவ முடைய கிரியா குரு, மங்கல இசை, மணப்பந்தல், விருந்துபசார ஏற்பாடுகளும் நிறைவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இப்பெருந்தொண்டை மக்களுக்கு உதவும் தொண்டாகவே கருதுகின்றேன். இதனைச் செய்து முடிக்கத் தமது பக்தி உணர்வினாலும் ஆன்மீக அர்ப்பணிப்பினாலும் பல அன்பர்களின் உதவிகள் உள்நாட்டில் இருந்தும் கனடா, பிரான்ஸ், லண்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா முதலிய வெளிநாடுகளில் இருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளமையை நன்றியோடு நினைவுகூருகின்றேன். இவ்விடயத்தில் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த நல்லையா லிங்கேஸ்வரன், வல்லிபுரம் மகேந்திரன் ஆகியோருக்கு எனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்குரிய காணியை வழங்கிய சிங்கப்பூர் இராஜரத்தினம் குடும்பத்தினருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

இறுதியாக எனது கட்டட ஒப்பந்த வாழ்வில் 108 ஆவது அரங்கேற்றமாக எனது சகல அனுபவங்கள், கலைத்திறன்கள், ஆர்வங்கள், முயற்சிகளையும் உள்ளடக்கி இதனை அமைத்துள்ளேன் என்பதையும் மிக மகிழ்ச்சியோடு கூறி எம்பெருமானின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

**மக்கள் சேவையே மகேசன் சேவை.**

லயன் இ.பாலசுந்தரம் J.P., M.J.F
தலைவர், ஆலய நம்.பொ.சபை.

## வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஆசிமட அரசடி விநாயகப் பெருமான் ஆலயத்திற்கு ஒரு திருமண மண்டபம் அமைத்திட வேண்டுமென நான்பலகாலமாக எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் விநாயகர் அருளால் நிறைவெய்தியுள்ளதையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன் ஆசிமட அரசடி விநாயகரின் அருளாலும் அடியார்களின் அயராத உழைப்பினாலும், ஆதரவினாலும் ஏற்கனவே ஆலய சுற்றுப்பிரகார மண்டபங்கள், ஆலயமுன் மணிமண்டபம் என்பன கட்டப் பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டு பங்குனி மாதம் 25ஆம் திகதி பங்குனி உத்தர தினத்தில் ஆலய திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்றுவந்தன. மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது இம்மண்டபத்தை இருமாடிக் கட்டடமாக அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கு அமைவாகவே அதற்கான கட்டடவேலைகள் நடைபெற்றுவந்தன.

இக்காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கட்டட வேலைகள் தாமதம் அடைந்த அதேவேளை, இருமாடிக் கட்டடமாக நிர்மாணிக்கும் திட்டம் கைவிடப்பட்டு ஒரு பகுதி மட்டும் மேல்மாடியாக அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அடியார்கள் குழு ஒன்று இம்மண்டபத்தை விரைவில் கட்டி முடிக்க வேண்டுமென நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினருக்கு உந்துசக்தியைக் கொடுத்ததன்மூலம் திருப்பணி வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்றுவந்தன. சபையினருக்கு உந்துசக்தியாக இருந்தவர்களில் திரு.வ.மகேந்திரன் (சின்னமணி), திரு.ந.லிங்கேஸ்வரன் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள் ஆவர்.

இம்மண்டப வேலைகளைத் தனது சொந்த வீட்டு வேலைகள் போல முன்நின்று செய்த நம்பிக்கைப் பொறுப்பாளர்சபைத் தலைவர் திரு.த.இ.பாலசுந்தரம் அவர்களையும் நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். திரு.பாலசுந்தரம் அவர்கள் பல கட்டடங்களைக் கட்டுவித்த அனுபவசாலியாவார். அவரது உள்ளத்தில் உருவான எண்ணக்கருக்களை இத்திருமணமண்டபத்தில் நிர்மாணம் செய்து அனைவரையும் ஆனந்தக்கடலில் ஆழ்த்தியுள்ளார். அதுமட்டுமன்றி இம்மண்டபம் அன்னாரின் 108 ஆவது கட்டட நிர்மாணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. எல்லாம் வல்ல விநாயகர் அருளால் இத்திருமணமண்டபப் பணிகள் பூரணமாக நிறைவேறியதையிட்டு உளமாரப் பெருமகிழ்ச்சி அடைவதோடு, இவ்வரிய கைங்கரியமான இறைபணியில் பங்கேற்ற உள்ளூர், வெளியூர் அடியார்களுக்கும், வெளிநாடுகளில் வாழும் அடியார்களுக் கும் எங்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் இவ்வாலய வளர்ச்சிக்காக அயராது உழைத்தவரும் இவ்வாலச் செயற்பாட்டில் எனக்குக் குருவாக இருந்தவருமான அமரர் திரு.சி.சேனாதிராஜா அவர்களையும் நான் நினைவு கூரக்கடமைப் பட்டுள்ளேன். ஆசிமட அரசடி விநாயகர் ஆலய திருமண மண்டபம் அனைவரும் வியக்கத்தக்க வகையில் அழகுற, சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து அடியார்களுக்கும் வாழ்த்துத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல விநாயகப் பெருமா னின் ஆசிகளை வேண்டி நிற்கிறேன்.

சு.சுந்தரலிங்கம்
*செயலாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.*

## பொருளாளர் உரை



நாடிவரும் அடியவர்க்குத் தேடிவரம் தருபவர் எம் ஆசிமட அரசடி விநாயகப் பெருமான். அவரது அனுக்கிரகத்திற்கு மேலும் புகழ் சேர்ப்பதாக அமைந்துள்ளது புதிதாக அமைக்கப்பட்ட திருமண மண்டபமாகும்.

எமது சமூக வாழ்வின் பாரம்பரியங்கள், கலாசாரங்களை நாம் இன்னும் மதித்துக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு கலாசார ரீதியான மங்கல நிகழ்ச்சிகளே தக்கசான்றாகும். குறிப்பாகத் திரு என்பது தெய்வத்தன்மையையும் மணம் என்பது இணைவதையும் குறிக்கும் . ஒத்த இயல்புடைய ஆண், பெண் இருவரும் மகேஸ்வரன் உமாதேவியாக இணைந்து இல்லறம் நடத்தி இறுதிமூச்சுவரை சிவன் சக்தியாக இருந்து வாழ்வை நிறைவித்துக் கொள்ள அடிஎடுத்துவைக்கும் சிறப்போடு கூடியதே திருமணக்கைங்கரியங்கள். இவற்றை முறையாக நடத்தி எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக எமது ஆலய நிர்வாகத்தினர் உருவாக்கியுள்ள இத்திருமணமண்டபம், திருமணம் மற்றும் வேறு நிகழ்ச்சிகளையும் நடத்தக் கூடியதாக இருப்பதோடு சகலவசதிகளோடும் போக்குவரத்து வசதிக்குரிய மைய இடத்தில் அமைந்துள்ளமையும் இதன் சிறப்பம்சங்களாகும்.

இம்முயற்சி வெற்றி பெறத் தமது சரீரத்தாலும் பொருளாலும் உதவிய சகலருக்கும் சிறப்பாக இதனைப் பொறுப்பேற்று அல்லும் பகலும் பாடுபட்டு நிறைவேற்றிய எமது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர் திரு.த.இ.பாலசுந்தரம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். இத் திருமண மண்டபம் எதிர்காலத்தில் நல்லதொரு ஏற்றத் தை அடைந்து எம் ஆசிமட அரசடி விநாயகரின் அருட்கடாட்சத்தைப் பெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.குலசிங்கம்,
பொருளாளர்.

JAFFNA HARDWARES
ASIAN PANTS
JAFFNA DEPOT
32, Stanley Road,
Jaffna.
Tel: 021 222 7028.

பாமினி
கட்டிட ஒப்பந்தகாரர்
கோண்டாவில்

Vigneswara
Paints -
Electricals
170, Palaly Road,
Kondavil.

சோதி
ஸ்ரோர்ஸ்
கோண்டாவில் கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டக விலை!

ஏறக்குறைய 12 மணித்தியாலங்களுக்கு மேலாக -மழையால் வாய் பிளந்து கிடக்கும் வீதியால் ஏறிக் குதித்து- பஸ்ஸில் பயணித்த களைப்பைச் சுமந்து கொண்டு அந்த நண்பர் யாழ்.பஸ்நிலையத்தில் காலடியெடுத்து வைத்தார். என்னதான் வடக்கின் வசந்தம் ஆஹா! ஒஹோவென்று வீசுவதாகச் சொல்லப்பட்டாலும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கிடையில் ஈரற்குலை வெளியே வந்துவிடுமளவுக்கு பஸ்ஸினுள் துள்ளிக் குதிக்கவேண்டியுள்ளது. மகாவலி கங்கைக்கே சவால் விடுமளவுக்கு வீதிகள் பலவும் மழைவெள்ளத்தைச் சுமந்தபடி கிடங்குமயமாக மாறியிருக்கின்றன. இவ்வளவு அலுப்பையும் சகித்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கால் வைத்த நண்பர் அவசரமாகக் கொக்குவில் பகுதிக்குச் செல்லவேண்டும்.

ஆனால் அவரது துரதிர்ஷ்டம், அந்தப் பாதையூடாகச் செல்லும் பஸ்கள் எதுவும் கண்ணுக்குத் தென்படவில்லை. என்ன செய்வது? என்று நண்பர் யோசித்துக் கொண்டிருக்கும் போது,அவரருகே வந்து நின்றது ஒரு ஓட்டோ. இப்போதுதான் நண்பருக்கு முகம் மலர்ந்தது.

## கோணல் கோலங்கள்

''அண்ணை! எங்க போகவேணும்''? ஓட்டோக்காரரின் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தையெங்கும் தேன் இடவெளியின்றிப் பூசப்பட்டிருந்தது. ''கொக்குவிலுக்குப் போகவேணும். எவ்வளவு காசு?'' நண்பர் கேட்டபடியே தன் பயணப்பொதிகளை ஓட்டோவுக்குள் வைத்தார். ''முதல்ல நீங்கள் ஏறுங்கோ. காசு என்னண்ணை காசு! நாய் தின்னாக் காசு. மனிசர்தான் முக்கியம். மழை வாறதுக்கிடையில நீங்கள் போக வேண்டிய இடத்துக்குப் போயிடலாம்'' ஒட்டோக்காரர் சொல்லச் சொல்ல நண்பருக்கு ஆச்சரியம். அட! இந்தக் காலத் திலையும் இப்படி நல்லவங்கள் இருக்கிறாங்களே! என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு ஓட்டோவில் அமர்ந்து கொண்டு தான் செல்லவேண்டிய இடத்துக்கு வழிகாட்டினார். ஓட்டோ அவர் கைகாட்டிய திசை வழியே ரொக்கெட் வேகத்தில் பறந்து சென்று, சொன்னது போலவே மழை வருவதற்கிடையில் அவரைச் செல்ல வேண்டிய இடத்தில் இறக்கிவிட்டது. தான் கேட்காமலே உதவி செய்த ஓட்டோக்காரருக்கு அவர் கேட்பதைவிடவும் கொஞ்சக் காசை அதிகமாகக் கொடுக்கவேண்டும் என நண்பர் முடிவு செய்திருந்தார்.

ஓட்டோவில் இருந்து இறங்கியதும் ''எவ்வளவு காசு''? அக்கறையோடு நண்பர் கேட்டார். ''உங்களுக்குத் தெரியும்தானே. பாத்துத் தாங்கோவன்.'' இப்போதும் அதே பவ்வியத்துடன் ஓட்டோக்காரரிடமிருந்து பதில் கிடைத்தது.

**ஓடுகாலி**

''தம்பி! நான் கனகாலத்துக்குப் பிறகு கொழும்பில இருந்திட்டு இப்பதான் யாழ்ப்பாணம் வாறன். இஞ்சத்தை சிற்றிவேஷன் எனக்குத் தெரியாது, நேரம் போகுது. எவ்வளவெண்டு சொல்லுமன்''. தன்னிலையை நண்பர் விளக்கினார்.

அதற்குபிறகு ஓட்டோக்காரர் கைவிரல்களை மடக்கி, வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தவாறு கணக்குப் போட்டார். சாதகம் எழுதும் சாத்திரிமார் கூட அப்படிக் கணக்குப் பார்த்துக் கணித்திருக்க மாட்டார்கள். ஒருவாறு கணித்தல் படலம் முடிந்ததும் வாயைத் திறந்தார் ஓட்டோக்காரர். ''அண்ணை! மற்றவையிற்ற எண்டால் பாத்துப்பாராமல் கேட்டிருப்பன். ஆனா உங்களிட்ட அப்படிக் கேக்கமுடியாது. ஒரு அறுநூறுரூபா தாங்கோவன்'' ஓட்டோக்காரரின் ரேட்டைக் கேட்டதும் நண்பருக்குத் தூக்கிவாரிப்போட்டது.

தான் இவ்வளவு நேரமும் பயணித்தது ஓட்டோவா அல்லது அதிசொகுசு விமானமா? என்ற சந்தேகம்கூட அவருக்கு வந்துவிட்டது. பூனை விலை, குதிரை விலை பற்றிக் கேள்விப்பட்டிருந்த நண்பருக்கு ஓட்டோக்காரர் சொன்ன ஒட்டக விலை சூடேற்றி விட்டது.

''என்ன இப்படிச்சொல்றீங்கள்? கொழும்பில கூட இப்படி ரேட் இல்லை. ரவுணில இருந்து கொக்குவில் நாலு மைல் கூட இருக்காது. அதுக்கு அறுநூறு ரூபாவோ?'' நண்பர் சொன்னதும் ஓட்டோக்காரனின் முகம் மாறிப்போனது.

''உங்களைப் பாவம் பாத்து ஏத்திக் கொண்டந்தால் இப்படிச் சொல்றீங்களே? நான் ஏத்திக் கொண்டு வராட்டி பஸ் ஸ்ராண்டிலேயே இண்டைக்கு முழுக்க நிண்டிருபீங்கள். நேரம் போகுது. காசைத் தாங்கோ'' சற்று முன்னர்தான் பணத்தை விடவும் மனிதர்களே பெரிதென்று கிளாஸ் எடுத்த அதே ஓட்டோக்காரரின் வார்த்தைகளே இவை. சரி! ஏதோ வந்துவிட்டோம். இனி என்ன செய்வது? என்ற எண்ணத்துடன் அறுநூறு ரூபாவை ஓட்டோக்காரனிடம் நீட்டினார் அவர். தான் நினைத்ததை அடைந்த சந்தோஷத்தில் பணத்துடன் விரைந்தது ஓட்டோ.

இதேபோன்று இன்னொரு சம்பவம் மற்றொரு நண்பருக்கும் நேர்ந்தது. அவர் யாழ்ப்பாணத்தின் எல்லாச் சுத்துமாத்துகளையும் அறிந்து வைத்திருப்பவர். எனவே பஸ்ஸில் இருந்து இறங்கும் போதே கவனத்துடனேயே இறங்கினார். அவரும் கொக்குவிலுக்குத்தான் போகவேண்டியிருந்தது. அவரருகிலும் ஓட்டோ ஒன்று வந்து நின்றது.

''கொக்குவிலுக்குப் போக எவ்வளவு முடியும்''? நண்பர் கேட்டார். ''அதைப் பற்றிக் கவலைப்படாதையுங்கோ. முதல்ல ஏறுங்கோ!'' இது ஓட்டோக்காரர். ''முதல்ல ரேட்டைச் சொல்லுங்கோ.பிறகு ஏறுவம்'' நண்பரின் உஷாரான பதில்

இது ஓட்டோக்காரனைச் சிந்திக்கவைத்தது.''ஒருநானூறு ரூபா தாங்கோ அண்ணை!'' ''நானும் யாழ்ப்பாணம் தான். கொக்குவிலுக்குப் போக ஒரு 25ரூபாப் பெற்றோல் கூட முடியாது. நீங்கள் 400ரூபா கேக்கிறீங்கள்'' நண்பர் புள்ளிவிபரத்தை அள்ளிவிட்டார். ரேட் பாதியாகக் குறைந்தது. ''அப்ப ஒரு இருநூறு ரூபா தாறிங்களோ?'' நூற்றி அம்பதுதான் தரலாம்நண்பர் விடாப்பிடியாக நின்றார். ஓட்டோக்காரர் யோசித்தார். பிறகு அரை மனதுடன் ''சரி! நூற்றி எழுபத்தைஞ்சையும் தாங்கோ'' என்று அவர் பணிந்த பின்னர்தான் நண்பர் பயணித்தார்.

இவை போன்ற சம்பவங்கள் தினமும் இடம்பெறுகின்ற ஒன்றுதான். யாழ்ப்பாணத்தில் பஸ்கள் நுழையாத ப்குதிகளுக்குச் செல்லவோ, அல்லது அவசரதேவைகளுக்கோ ஓட்டோக்களின் சேவை முக்கியமானது. ஆனால் ஒருசில ஓட்டோச்சாரதிகளின் அடாத்தான - அளவுக்கு மிஞ்சிய -நேரத்துக்கு நேரம் மாறுபடுகின்ற- கட்டண அறவீடுகள் எல்லா ஓட்டோக்காரனின் மீதும் மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றன. இதனால் நியாயமான கட்டணத்தை ஓட்டோச்சாரதிகள் கோருகின்ற போது கூட இது அதிகமாக இருக்குமோ? என்ற எண்ணம் இயல்பாகவே எழுகின்றது.

இதேவேளை யாழ்.மாவட்ட ஓட்டோச் சங்கம் இது விடயத்தில் கவனமெடுப்பது அவசியம். குறிப்பாகப் பிரதேசங்களை அடிப்படையாக வைத்தோ, அல்லது கிலோ மீற்றருக்கு ஏற்பவோ ஓட்டோக்களுக்கு கட்டண நிர்ணயம் செய்வதால் பல நன்மைகள் ஏற்படலாம். எல்லோரும் ஒரேவித கட்டண வசூலிப்பைச் செய்தால் மக்களும் ஏமாறத் தேவையில்லை. அத்தோடு ஒரு சில ஓட்டோக்காரர்களால் எல்லா ஓட்டோக்காரர் மீதும் ஏற்படும் தவறான எண்ணத்தையும் நீக்கலாம். உரியவர்கள் முனைவார்களா? மக்கள் துயர் களைவார்களா?


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி சபாபதி கண்ணகை

கடந்த 23.12.2010 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.01.2011) புதன்கிழமை காலை 7 மணியளவில் சந்நிதி தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் எதிர்வரும் (22.01.2011) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

*(109462)*

**சபா குடும்பம்.**


## முன்பள்ளி கட்டட திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன.19

கோப்பாய்வள்ளியம்மன் சனசமூக நிலைய முன்பள்ளி கட்டடத்திறப்புவிழா இன்று புதன்கிழமை முற்பகல்11மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர் கு.திலீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (ஒ-10)


''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எம் அன்பு தெய்வத்தின்''

# ஓராண்டு நினைவஞ்சலி



*மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட*

## அமரர் தம்பையா நடராசா

மலர்வு 07.05.1926

உதிர்வு 30.01.2010

திதி: தைப்பூரணை

கடமை கண்ணியம் கட்டுப்பாடு
நிமிர்ந்தநடை நேர்கொண்ட பார்வை எதற்கும் அஞ்சா நெஞ்சம்
இவை உம்மிடம் ஒருருவாய் கற்றபாடம்
நாளை நமதாக வாழையடி வாழையாக
உம்பணி மறவோம் உமதடி தொடர்வோம்
எம்முயிருள்ள நாள்வரை கண்ணுக்குள் நின்றாடி
கனவுகளில் தோன்றி எண்ணமதில் என்றும்
அணையா விளக்காய் பிரகாசிப்பீர் ஐயா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நித்தம் உம் நினைவில்:*

*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 12.01.1922

## தம்பு சிவபாக்கியன்



உதிர்வு: 18.01.2003

*அன்போடு எமை அரவணைத்து*
*அறிவுரைகள் பல புகட்டி*
*கட்டுப்பாடும் கண்ணியமும் கற்றுக்கொடுத்து*
*ஆனந்தமாய் நாம் வாழ வழிகாட்டிய*
*எங்கள் ஐயாவே ஏக்கத்துடன் - எந்நாளும்*
*உங்களைத் தேடுகின்றோம்*
*எட்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*எங்கள் ஐயாவை என்றும் நாம் மறவோம்.*

*198, சென்பெனடிக்றோட்,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

*(109461)*

**குடும்பத்தினர்.**

# தேடுகின்றோம்

## சின்னத்தம்பி மயில்வாகனம்



*(வயது 81) என்பவரைக் கடந்த 05.07.2010 முதல் காணவில்லை. மனநோயாளியான இவரைக் கண்டவர்கள் அல்லது இவர் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

*சன்மானம் வழங்கப்படும்.*

தற்காலிக முகவரி:
காலையடி, பண்டத்தரிப்பு.
நிரந்தர முகவரி:
பெரிய தம்பனை, வவுனியா.

**கு.குமாரதாசன் (மருமகன்)**

தொ.பே. 021 4903955, 0779596771


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைத் தண்டின் மகிமை



வாழைத் தண்டை பொரியல், கூட்டு, சாம்பாராகச் செய்து சாப்பிடுவது வரைக்கும் தான் நமக்குத் தெரியும். அது எந்த வகையில் நமக்கு மருந்தாக உதவுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். வாழைத் தண்டு



குடலில் சிக்கிய மணல், கற்களை விடுவிக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். மலச் சிக்கலைப் போக்கும். நரம்புச் சோர்வையும் நீக்கும்.

வாழைத் தண்டுச் சாற்றை இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் வீதம் தினமும் குடித்து வந்தால், அடிக்கடி வரும் வரட்டு இருமல் நீங்கும். பாம்பு கடிக்கு வாழைத் தண்டுச் சாற்றை ஒரு டம்ளர் வீதம் குடித்தால் விஷம் தானாக இறங்கிவிடும்.

- வீணா

# பற்களின் பாதுகாப்பு

பிரஷ்ஷை அழுத்தமாக தேய்த்தால் பல் வெண்மை ஆகும் என்று நினைக்கிறோம். அப்படிச் செய்தால், பல்தான் பாழாகும். மிருதுவான பிரஷ்ஷைத்தான் பல் துலக்கப் பயன்படுத்த வேண்டும்.



ஒவ்வொரு தடவையும் 5 நிமிடங்களுக்குக் குறையாமல் தினமும் 2 அல்லது 3 தடவை பல் துலக்க வேண்டும். பற்களில் கறை கடினப்படுகிறபோது ஈறுகளை வீங்கச் செய்து விடுகிறது.

பற்கூச்சம் போக, புளோரைட் கலந்த பற்பசைகளைப் பயன்படுத்த வேண்டும். பற்களை முறையாக துலக்க வேண்டும்.

அதிக சூடான அல்லது குளிர்ச்சியான உணவுப் பொருள்கள் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். இரண்டு வெவ்வேறான வெப்பநிலை உள்ள உணவுகளை ஒரே நேரத்தில் சாப்பிடக் கூடாது.

சிலர் பற்களை இரவில் 'நறநற' வென்று கடிப்பதைப் பார்த்திருப்போம். உணர்வுகளை அடக்கி வைப்பதால் நாளடைவில் மன அழுத்தம் ஏற்படுபவர்கள் இப்படிச் செய்கிறார்கள். இதனால் பற்களில் உள்ள எனாமல் நீங்குவதால் பற்கூச்சம் ஏற்படுகிறது.

கீழ் வரிசைப் பற்கள், மேல் வரிசைப் பற்களை மெல்லும்போது, விழுங்கும்போது, பேசும்போது மட்டுமே தொடுகிறது. மற்ற நேரங்களில் பற்கள் தொட்டுக் கொண்டு இருக்கக்கூடாது.

இரத்தம் வடியும் ஈறுகளை விட்டமின் 'சி' குணப்படுத்தும். காய்கறிகளில் தக்காளி, ஒரேஞ், எலுமிச்சம் பழங்களில் விட்டமின் 'சி' அதிகம் உள்ளது.

- குட்டி


## TOUCHWOOD யாழ் மக்களுக்கு வழங்கும் சந்தன மர முதலீடு



உலகில் மிகச்சிறந்த முதலீடுகளில் ஒன்றாக கருதப்படும் சந்தன மர முதலீட்டில் பங்காளிகள் ஆகி அதிக இலாபத்தை பெற்றுக்கொள்ளுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை யாழ் மக்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.

**நிரந்த இலாபத்தை பெற்றுக்கொடுக்கும் ஒரு முதன்மை விளைபொருள்**

உலகில் மிக விலையுயர்ந்த எண்ணெயாக் சந்தன எண்ணெய் திகழ்கின்றது.

சந்தனக்கட்டையின் விலையானது கடந்த 17 வருட காலங்களில் ஒரு டொன்னுக்கு 4000 அமெரிக்க டொலர்களிலிருந்து 100,000டொலர்களாக அதிகரித்துள்ளது.(வருடாந்தம் 22% வீத விலை அதிகரிப்பு)

**உங்கள் முதலீட்டிற்கு TOUCHWOOD இன் 100% பாதுகாப்பும், உத்தரவாதமும்**

TOUCHWOOD 100% வெளிப்படையான பொது நிறுவனம்

இலங்கை அரசாங்கத்தினாலும், முதலீட்டு சபையினாலும் அங்கீகரிக்கப்பட்டு தெற்காசியாவில் சர்வதேச ISO சான்றிதழ் பெற்ற ஒரே நிறுவனம்.

மரங்கள் முதிர்வடைந்து உங்கள் இலாபம் கொடுக்கப்படும்வரை அவற்றை பராமரிப்பதோடு சந்தன மரங்களிலிருந்து வரும் அறுவடைக்கான உத்தரவாதத்தையும் TOUCHWOOD நிறுவனம் வழங்குகின்றது.

முதலீடு செய்யும் நிலத்திற்குரிய உறுதியும், அறுவடை சான்றிதழும் முதலீட்டாளரின் பெயரில் வழங்கப்படும்.

உங்கள் இலாபம் எவ்வாறாக இருக்கும்?

| சந்தன மரங்களின் எண்ணிக்கை | ஆரம்ப சேமிப்பு ரூபா | திட்டமிடப்பட்ட அறுவடை பெறுமதி ரூபா |
|---|---|---|
| 6 | 99,000 | 3,000,000 |
| 12 | 195,000 | 6,000,000 |
| 25 | 385,000 | 12,500,000 |
| 50 | 732,000 | 25,000,000 |
| 100 | 1,397,000 | 50,000,000 |
| 200 | 2,662,000 | 100,000,000 |

**TOUCHWOOD INVESTMENTS PLC**
Level 02, Prince Alfred Tower
No.10, Alfred House Gardens
Colombo 03,
Sri Lanka.

இம்மாதம் 21ம் திகதி தொடக்கம் 23ம் திகதி வரை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் வர்த்தக கண்காட்சியில் எமது சேவைகளை நாங்கள் வழங்கவுள்ளோம்.

" யாழ்மக்களுக்கு எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் "
உங்கள் எதிர்காலம் Touchwood உடன் செழிப்படையட்டும்.

* நிபந்தனைகளுக்குட்பட்டது

மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் இருக்கும் எமது முதலீட்டு ஆலோசகர்களை அழையுங்கள்.

எம். சியாம் - 0777569615
எம்.ரூபன் - 0785377683

TOUCHWOOD

www.touchwood.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்து

இன்று (19.01.2011) புதன்கிழமை
திருமண பந்தத்தில் இணையும்

## விக்கினராசா சிவசக்தி

தம்பதியினரை
காரை ஐயனார் அருள்பெற்று
சகல செல்வங்களும் சகல சௌபாக்கியங்களும்
பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ
மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

விளானை, களபூமி,
காரைநகர்.

இராசேந்திரம் குடும்பத்தினர்,
லவநேசன் குடும்பத்தினர்.

(109300)

உ
சிவமயம்

# புதுக்கடைத் திறப்பு விழாவும் இடமாற்றமும்

## சிறி சிவராம் றேடர்ஸ்

இல.322C, ஆஸ்பத்திரி வீதி என்னும் இடத்தில்
இயங்கி வந்த எமது வியாபார ஸ்தாபனத்தை (19.01.2011)
இன்று புதன்கிழமை இல.248, ஆஸ்பத்திரி வீதி என்னும்
இடத்தில் புதிதாக ஆரம்பிக்க உள்ளோம்
என்பதனை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

சிறி சிவராம் றேடர்ஸ் ஸ்தாபனத்தினர்.

021 222 8629, 0777560760.

(109299)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org